
...oved by the T.B.C. for class use. Vide Fort St. George Gazette Part II dated 20-5-47 Page 19...

# விசுவநாத நாயக்கர்




வித்வான்
மா. இராசமாணிக்கம், B.O.L., L.T., M.O.L.

வெங்கடராமா அண்ட் கம்பெனி
சென்னை.

மா. ரா. அரசு

# விசுவநாத நாயக்கர்

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

ஆசிரியர் :
மா. இராசமாணிக்கம், B.O.L., L.T., M.O.L.
தலைமைத் தமிழாசிரியர்,
முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

வெளியிட்டோர் :
வேங்கடராமா அண்ட் கம்பெனி,
எஸ்பிளனேட், :: சென்னை.

பதிப்புரிமை] 1947 [அணா 14

First Edition — Nov. 1946.
Second Edition — May. 1947.

B. N. K. Press, Madras. Q. H. No. M. S. 100-B.
for Venkatrama & Co., Madras. M. S. 62/A. 4000—Copies

# முகவுரை

தமிழகத்தை ஆண்ட சோழருட் கரிகாலன், இராஜராஜன் இராஜேந்திரன் என்பவர் சிறப்புப் பெற்றவர்; பாண்டியருள் சங்க கால நெடுஞ்செழியன், பிற்கால நெடுஞ்சடையன் முதலிய வர் புகழ்பெற்றவர்; சேரருள் செங்குட்டுவன் புகழ் மிக்கவன். இத் தமிழ் வேந்தர்க்குப் பிறகு தமிழகம் தெலுங்கர் ஆட்சிக்கு உட்பட்டது. இதனை ஆண்ட தெலுங்க மன்னருள் முதல்வர் **விசுவநாத நாயக்கர்**. அவர் கல்வி - கேள்வி - வீரம் - ஆட்சி - தெய்வ பக்தி இவற்றில் முன் சொன்ன தமிழரசரைப் போன்றவர்; இராஜபக்தி கொண்டு, இராயர் ஆணைப்படி, தவம் கிடந்து தம்மைப் பெற்ற தகப்பனாரையே சிறை செய்த உத்தமர். வடுக ராகிய அவர் நமது தமிழ் நாட்டிற்குச் செய்த தொண்டுகள் பல. அவர், அமைதியற்று அல்லலுற்றுக்கிடந்த தமிழகத்தில் அமைதியை நிலைநாட்டி அல்லலை அகற்றிய அண்ணல். இத்தகைய பன்னலங்களும் பண்புறப் பெற்று நம் தமிழகத்தை ஆண்ட அவர் வரலாற்றைத் தமிழராகவுள்ள நாம் அறியக் கடமைப் பட்டுள்ளோம் அல்லவா?


சேக்கிழார் அகம்,
சென்னை.

**மா. இராசமாணிக்கம்**

# உள்ளுறை

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | விஜயநகர அரசு | .... | 1 |
| 2. | விஜயநகரம் | .... | 8 |
| 3. | விஜயநகர அரசர்கள் | .... | 14 |
| 4. | கிருஷ்ணதேவ ராயர் | .... | 21 |
| 5. | விசுவநாதர் பிறப்பும் வளர்ப்பும் | .... | 27 |
| 6. | அரியநாயகர் | .... | 34 |
| 7. | விசுவநாதரும் அரியநாதரும் | .... | 41 |
| 8. | உண்மையுள்ள அரசவூழியர் | .... | 47 |
| 9. | விசுவநாதர் - மதுரை மன்னர் I | .... | 54 |
| 10. | ,, ,, II | .... | 62 |
| 11. | பாளைய வகுப்பு | .... | 67 |
| 12. | அரசியல் | .... | 74 |

# விஜய நகரப் பேரரசு



# விசுவநாத நாயக்கர்

## 1. விஜயநகர அரசு

### அல்லாவுத்தீன் கால இந்தியா

நீங்கள் இந்திய வரலாற்று நூலில் அல்லாவுத்தீன் கில்ஜியைப் பற்றிப் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அவர் டெல்ஹியைத் தலைநகராகக்கொண்டு வட இந்தியா முழுவதையும் ஆண்ட பேரரசர். அவர் காலத்தில் விந்திய மலைக்குத் தெற்கே நான்கு பெரிய அரசுகள் இருந்தன. (1) கோதாவரி யாற்றுக்கும் தபதி யாற்றுக்கும் இடையில் உள்ள தேவகிரியைத் தலைநகராகக்கொண்ட யாதவ அரசு ஒன்று; (2) கிழக்கே கோதாவரிக்கும் கிருஷ்ணைக்கும் இடைப்பட்ட ஒரங்கல்* என்னும் நகரத்தைக் கோநகரமாகக்கொண்ட காகதீய அரசு ஒன்று; (3) மைசூர்ப் பகுதியில் உள்ள துவார சமுத்திரத்தைத் தலை நகரமாகக் கொண்ட ஹொய்சள அரசு ஒன்று; (4) தெற்கே மதுரையைத் தலைநகராகக்கொண்ட பாண்டிய அரசு ஒன்று.

### இந்த நான்கு அரசுகள்

மேற்சொன்ன விந்தமலைக்கு இப்பாற்பட்ட அரசுகள் முழு உரிமையுடன் அரசாண்டு வந்தன. தேவகிரியில் ஆண்ட யாதவர் மிக்க செல்வம் படைத்தவர். அவர்களது செல்வச் சிறப்பு வட இந்தியாவிற் பரவியது. ஒரங்கல்லை ஆண்ட காகதீயரும் செல்வப் பெருக்குடையவர். ஹொய்சளர் துங்கபத்திரை ஆற்றுக்குத் தெற்கும் காவிரியாற்றுக்கு வடக்கும் உள்ள பெரிய நிலப்பரப்பை ஆண்டு வந்தனர். அவர்கள் இராஜராஜ சோழன் மரபைச் சேர்ந்தவர் ஆண்ட பெருநாட்டுப் பெரும் பகுதியைத் தங்கள் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தவர்கள்; ஆதலால் மிக்க செல்வப் பெருக்குடன் வாழ்ந்து வந்தனர். தெற்கே இருந்த பாண்டியர் கடல் வாணிகப் பெருக்கம் உடையவர்.

---

* இதனை 'வாரங்கல்' என்றும் கூறுவர்.

### கணக்கற்ற செல்வம்

இந்த அரச மரபினர் நால்வரும் இந்து சமயத்தினர். ஆதலால் அவர்கள் சைவ-வைணவ-சமணக் கோவில்களை வளப்படுத்தினார்கள்; அக்கோவில்களில் இருந்த உருவச் சிலைகட்கு அளவுக்கு மேற்பட்ட பொன் நகைகளைப் போட்டிருந்தனர்; நவரத்தினங்கள் பதித்த நகைகளைத் தானம் செய்தனர். பல உயர்ந்த கோவில்கள் தங்கக் கலசங்களையும் தூண்களையும் பிற பொருள்களையும் பெற்றிருந்தன. இவ்வாறு கோவில்கள் பெரிய பொக்கிஷ சாலைகளாக விளங்கின. மேற்சொன்ன அரசர்கள் தத்தம் அரண்மனையில் பெரிய பொக்கிஷ சாலையை வைத்திருந்தார்கள் அரசர்களைப் போலவே அவர் தம் குடிகளும் இந்துக்கள். எனவே விந்தமலைக்கு இப்பாற்பட்ட இந்தியா தன்னாட்சி பெற்றுச் செல்வச் செருக்குடன் இன்பமாக இருந்துவந்தது.

### அல்லாவுத்தீன் படையெடுப்பு

மேற்சொன்ன செல்வ வளத்தை அல்லாவுத்தீன் கேள்வியுற்றார். அவர் பண ஆசை கொண்டவர்; பொன் வேட்டைக்காரர். அதனால் அவர் கி. பி. 1294-ல் விந்தமலையைத் தாண்டி வந்தார். அவரது பெரும் படையைக் கண்ட தேவகிரி அரசன் இராமசந்திரன், அவருக்குக் கீழ்ப்படிந்தான்; அவருக்குப் பெருஞ் செல்வத்தையும் விலைமதிப்பற்ற நகைகளையும் வரிசையாகத் தந்தான். அல்லாவுத்தீன் மனக்களிப்புடன் டெல்ஹிக்கு மீண்டார்.

### மாலிக் காபூர் படையெடுப்பு

அல்லாவுத்தீன் 1309-ல் தம் சேனைத்தலைவரான மாலிக் காபூரைப் பெரும் படையுடன் தெற்கே அனுப்பினார். மாலிக் காபூர் முதலில் தேவகிரியைத் தாக்கினார்; யாதவ அரசனைச் சிறைசெய்து டெல்ஹிக்கு அனுப்பினார்; பிறகு அந்த அரசன் விடுதலை பெற்றான். அவனது தலைநகரம் பிடிப்பட்டது. அவனது பொக்கிஷம் கொள்ளை போயிற்று. அவன் ஆண்டுதோறும் கப்பம் கட்டப் பணிவுடன் ஒப்புக்கொண்டான்.

மாலிக் காபூர் அடுத்தபடி ஓரங்கல் நகரைத் தாக்கினார். காகதீய அரசனான பிரதாப ருத்திரன் முஸ்லிம் படையெடுப்பை எதிர்த்து நின்றான்; பின்னர்த் தோற்றுப் பெரும்பொருள் தந்து சமாதானம் செய்துகொண்டான்.

முஸ்லிம் படைத் தலைவர் அடுத்தபடி தெற்கே சென்று ஹொய்சள நாட்டைத் தாக்கினார். கட்டுப்பாடும் தக்க பயிற்சியும் உடைய முஸ்லிம் படைகளுக்கு முன் ஹொய்சளப்படை நில்லாது என்பதை அறிந்த அரசன் மூன்றாம் வல்லாள மஹாராஜன் அடங்கிவிட்டான்; பெருஞ் செல்வத்தைக் கொடுத்து, டெல்ஹி அரசுக்கு அடங்கி இருப்பதாக வாக்களித்தான்.

அந்தச் சமயத்தில் மதுரையில் பாண்டிய அரியணைக்குப் போட்டி உண்டாயிற்று. அதனால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. தென்னாடு, கோவில்கள் நிறைந்து செல்வ வளம் பெற்றது என்பதைக் கேள்வியுற்று மாலிக் காபூர் உடனே மதுரையை நோக்கிச் சென்றார்; கோவில்களைக் கொள்ளையடித்தார்; நகரங்களைச் சூறையாடினார்; எதிர்த்தவர்கள் கொல்லப்பட்டார்கள். மதுரை பிடிபட்டது.

இங்ஙனம் விந்தமலைக்குத் தென்பாற்பட்ட நான்கு அரசுகளும் வீழ்ச்சி அடைந்தன. அவை ஆண்ட நாடுகளில் இருந்த அமைதி குலைந்தது. கோவில் செல்வமும் அரசாங்கச் செல்வமும் கொள்ளைபோயின. தென் இந்தியாவின் தனி உரிமையும் தொலைந்தது. மாலிக் காபூர் அளவற்ற செல்வத்துடன் டெல்ஹியை அடைந்தார்.

**முஹம்மது பின் துக்ளக்**

இவர் டெல்ஹி அரசர் ஆவதற்கு முன்பே ஓரங்கலைக் கைப்பற்றி, அரசரைக் கைதியாக்கினார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கிருஷ்ணையாறுவரை இவரது செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது.

இந்தச் சுல்தானுடைய உறவினர் ஒருவர் இவரிடம் பகைமை கொண்டார். சுல்தான் அவரைக் கொல்ல முயன்றபொழுது அவர் தெற்கு நோக்கி ஓடித் துங்கபத்திரைக் கரையில் உள்ள காம்பீலி நகர அரசனிடம்

அடைக்கலம் புகுந்தார். சுல்தான் கடுங்கோபம் கொண்டு தம் பகைவனுக்கு அடைக்கலம் தந்த காம்பீலிக் கோட்டையைக் கைப்பற்றினர். அதன் அரசன் போரில் மடிந்தான். அவனுடைய பதினொரு மக்களும் சிறை செய்யப்பட்டுச் சுல்தான் இருந்த தலைநகருக்கு அனுப்பப் பட்டனர். இவ்வாறு காம்பீலி அரசு ஒழிந்தது.

இங்ஙனம் காம்பீலி நாடும் உரிமை யிழந்த பிறகு தென்னாட்டில் உரிமை பெற்ற அரசு ஒன்றேனும் இல்லாது போயிற்று. மாலிக் காபூர் படையெடுத்து மீண்ட போது அவர் மதுரை முதலிய இடங்களில் முஸ்லிம் படைகளை விட்டுச் சென்றார். அதனால் மதுரை ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் (கி. பி. 1321-1371) முஸ்லிம்கள் ஆட்சியில் இருந்தது.

## வல்லாள மஹாராஜன்

துங்கபத்திரைக்குத் தெற்கே வல்லாளன் ஒருவனே பெயரளவில் அரசனாக இருந்தான். அவன் அடிக்கடித் தன் தலைநகரை மாற்றிக்கொண்டு பகைவர்க்கு அகப் படாமல் இருந்தான்; காம்பீலி, முஸ்லிம்கள் கைப்பட்ட வுடன் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள கண்ண னூரைத் தலை நகராகக் கொண்டான்; மதுரையை ஆண்ட முஸ்லிம்கள் தொல்லை அதிகமாகவே, திருவண்ணா மலைக்குத் தலைநகரத்தை மாற்றிக்கொண்டான். அவ் வரசன் அங்கிருந்து பெரும்படையைத் திரட்டிக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்றான்; மதுரை முஸ்லிம்களுடன் கண்ணனூர் என்ற இடத்தில் போரிட்டான். முஸ்லிம் கள் சமாதானத்தை விரும்பினர். வல்லாளன் அதற்கு இணங்கினன். ஆனால் அன்றிரவு முஸ்லிம்கள் திடீரென்று வல்லாளன் படைகள்மீது பாய்ந்து கொன்றனர்; வல்லாளனையும் பிடித்துக் கொன்றனர்.

## தென்னாட்டு மக்கள் விழிப்பு

வல்லாளனுக்குப் பின் தென்னாட்டில் இந்து அரசன் இல்லை. நாடு நாயகன் இன்றித் தத்தளித்தது. பொது மக்கள் அப்பொழுதுதான் தங்கள் நிலையை உணரலாயி

னர். தங்கள் கோவில்கள் கொள்ளையடிக்கப்பட்டதை யும் நகரங்கள் சூறையாடப்பட்டதையும் தங்களை ஆண்ட அரசர்கள் கைதிகள் ஆக்கப்பட்டதையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கண்ட மக்கள் விழிப்படைந்தனர். தங்கள் சமயவுரிமை, பொருள் உரிமை என்பவற்றைக் காக்கத் தக்க வலிய அரசு ஒன்று தேவை என்பதை உணர்ந்த னர். இந்த எண்ணம் கருநாடகப் பகுதியில் வலுப்பட்டது.

**சங்கமன் மக்கள்**

**சங்கமன்** என்பவன் ஹொய்சளர்க்கு அடங்கிய சிற்றரசன். அவன் மக்கள் ஐவர். அவர்கள் **ஹரிஹரர், கம்பணர், புக்கர், மாரப்பர், முத்தப்பர்** என்பவர். ஹரிஹரரும் புக்கரும் ஒரங்கல், ஆனைகுந்தி முதலிய நாட்டு அரசர்களிடம் உத்தியோகஸ்தராக இருந்தவர்கள்; அந்த அரசர்கள் வீழ்ச்சி அடைந்தவுடன் ஹொய்சள நாட்டில் வேலை பார்த்தனர்; வல்லாளன் மடிந்த பிறகு மைசூர்ச் சீமையில் சிறிய அரசை ஏற்படுத்தினர். இந்து சமயத்தையும் இந்துக் கலையும் காப்பதே அந்த அரசின் நோக்கம். இதனை உணர்ந்த சிருங்கேரி மடத்துத் தலைவர்கள் அந்த அரசுக்கு ஆக்கம் அளித்தனர். துங்கபத்திரை யாற்றுக்குத் தெற்கே முஸ்லிம் படையெடுப்பைத் தடுத்து நிற்கவும் இந்து சமயத்தையும் இந்து நாகரிகத்தையும் காக்கவும் புதிய அரசு ஏற்பட்டது என்பதை உணர்ந்த தென்னாட்டு மக்கள் அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர்.

**விஜயநகர அரசு** *

துங்கபத்திரைக்குத் தெற்கிலும் காவிரி யாற்றுக்கு வடக்கிலும் உள்ள நிலப்பகுதியைச் சகோதரர் ஐவரும் பிரித்து ஆண்டு வரலாயினர். இந்த ஐவரும் ஆண்ட நிலப்பகுதிக்குத் தெற்கே உள்ள பகுதிக்குப் புக்கர் மகனான **கம்பண வுடையார்** என்பவர் அரசப் பிரதிநிதியாக இருந்து வந்தார்.

இந்த நிலையில் துங்கபத்திரையின் தென் கரையில் மலையரண் மல்கப்பெற்ற **ஹம்பி** என்னும் இடத்தில் புதிய

* கி. பி. 1336-ல் விஜயநகர அரசு உண்டானது.

தலைநகரம் அமைக்கப்பட்டது. அதற்குச் சிருங்கேரி மடத்துத் தலைவர் உதவியாக இருந்தனர். அவர் பெயர் வித்யாரண்யர் என்பது. அவர் பெயரே அப் புதிய நகரத்திற்கு வித்யா நகரம் என்று இடப்பட்டது. அப்பெயரே நாளடைவில் விஜய நகரம் என வழங்கலாயிற்று.

### கம்பண வுடையார் வெற்றி

துங்கபத்திரை யாற்றுக்குத் தென்பால் முஸ்லிம்கள் தொல்லை அக்காலத்தில் இல்லை. மதுரையில் மட்டும் மாலிக் காபூர் விட்டுச் சென்ற முஸ்லிம்கள் ஆண்டு வந்தனர். கம்பண வுடையார் தமிழ்நாடு முழுவதையும் கைப் பற்ற விரும்பினர்; அவரது சேனைத் தலைவரைப் பெரும் படையுடன் தொண்டை நாட்டின்மீது ஏவினர். அப்பொழுது தொண்டை நாட்டைச் சாம்புவ ராயர் என்ற சிற்றரச மரபினர் ஆண்டு வந்தார். அவர் போரில் தோற்றுக் கம்பண வுடையார்க்குக் கப்பம் கட்டுவதாகவும் சிற்றரசராக இருப்பதாகவும் ஒப்புக் கொண்டார்.

பின்னர்க் கம்பணர் மதுரையைத் தாக்கினர்; போர் கடுமையாக நடந்தது. முடிவில் முஸ்லிம் ஆட்சி அகன்றது. பாண்டியநாடு கம்பணர் கைப்பட்டது. அவ்வீரர் பாண்டிய நாட்டில் அமைதியை உண்டாக்கினர்; முஸ்லிம்களால் தரைமட்டம் ஆக்கப்பட்ட மீனாக்ஷியம்மன் கோவில் மதிற் சுவர்களையும் கோபுரங்களையும் கட்டினர்; கோவிலிலிருந்து மலையாள நாட்டிற்குக் கொண்டு போகப்பட்ட விக்கிரகங்களை மீளவும் கொண்டுவந்து கோவிலில் வைக்கச் செய்தார்; முஸ்லிம்களால் சீரழிக்கப்பட்ட ஸ்ரீரங்கம் கோவிலைப் பழுதுபார்த்தார்; எல்லாக் கோவில்களிலும் முன் போலப் பூசைகளும் விழாக்களும் குறைவற நடக்குமாறு ஏற்பாடு செய்தார்; பாண்டிய மரபில் வந்த வீர பாண்டியன் என்பவனை மதுரைக்கு அரசன் ஆக்கினர்; விஜய நகரப் பேரரசுக்கு அடங்கி நடக்குமாறு பணித்து மீண்டார்; இவ்வாறே சோழநாட்டைச் சோழன் ஒருவனுக்குத் தந்து ஆண்டு வருமாறு ஏற்பாடு செய்தார்.

## கம்பணர் பெருந்தன்மை

கம்பணர் தாம் வென்ற நாடுகளைத் தாமே கட்டி ஆளாமல் அந்தந்த நாட்டிற்கு உரியவரிடமே கொடுத்த தன் நோக்கம் என்ன? துங்கபத்திரைக்குத் தெற்கே பலம் பொருந்திய இந்து அரசு ஒன்று இருக்க வேண்டும் என்பதற்காகவே அவர் தமிழகத்தைக் கைப்பற்றினர். இதனால் தென் இந்தியா முழுவதும் விஜயநகரப் பேரரசுக்கு உட்பட்டது. தென் இந்தியாவில், அமைதியும் கட்டுப்பாடும் ஏற்படவேண்டும்; வடக்கே இருந்துவரும் அந்நியர் படையெடுப்பைத் தடுக்கவேண்டும் என்பனவே விஜயநகர அரசர் நோக்கம்; ஒவ்வொரு நாட்டையும் தாமே கட்டியாள வேண்டும் என்ற பேராசை இல்லை. அந்தந்த நாட்டுக்கு உரியவரே அந்தந்த நாட்டைப் பேரரசுக்கு அடங்கி ஆண்டு வரவேண்டும்; அந்நியர் படையெடுப்புக் காலத்தில் அந்தந்தச் சிற்றரசர் பேரரசர்க்குப் படை உதவி செய்யவேண்டும்; ஆண்டுதோறும் நாட்டு வருவாயில் மூன்றில் ஒரு பகுதியைக் கப்பமாகக் கட்டவேண்டும்.

விஜயநகர அரசர் இங்ஙனம் ஏற்படுத்திய அரசியல் முறையினல் தென் இந்தியாவில் அமைதி ஏற்பட்டது. தென் இந்தியாவில் அங்கங்கே சிற்றரசர்கள் தங்கள் முன்னோர்க்குச் சொந்தமான நாடுகளை அமைதியாக ஆளத் தொடங்கினர். குடிகள் மன அமைதி பெற்று இன்ப வாழ்வு வாழலாயினர். சமயத்தைக் காக்கப் புறப்பட்ட விஜயநகரப் பேரரசு தென் இந்தியாவில் ஏறத்தாழ 250 வருட காலம் அமைதியை நிலைநாட்டி வந்தது.

# 2. விஜயநகரம்

## நகர அமைப்பு

வித்யா நகரம் அல்லது விஜயநகரம் என்பது துங்க பத்திரையின் தென் கரையில் அமைந்த நகரம். அதன் வடகரையில் ஆனை குந்தி நகரம் அமைந்துள்ள இடத்தைச் சூழ மலைகள் இருக்கின்றன. எனவே மலையரணுக்கு இடையில் தலைநகரம் அமைப்புண்டிருந்தது. நகரத்தின் சுற்றளவு அறுபது கல் என்று அதனை 1420-ல் நேரிற் கண்ட இட்டாலியர் குறித்துள்ளார். நகரத்தைச் சுற்றியிருந்த மதில், பக்கத்தில் உள்ள மலையடிவாரம் வரை கொண்டு செல்லப்பட்டு இருந்தது.

நகரம் ஏழு கோட்டைகளால் ஆனது. ஏழாம் கோட்டையின் நடுவிற்றான் பேரரசர் அரண்மனை அமைந்திருந்தது. வெளிக்கோட்டைச் சுவரில் இருந்த வடக்கு வாயிலிலிருந்து தெற்கு வாயிலுக்கு இடையில் ஏழு அல்லது எட்டுக்கல் தூரம் இருந்தது; மேற்கு வாயிலுக்கும் கிழக்கு வாயிலுக்கும் இடைப்பட்ட தூரமும் இவ்வளவே எனின், நகரம் மிகப் பெரிய பரப்புடையது என்பதை உணரலாம். [நகர வெளிப்புறத்திலிருந்து] முதலாம்-இரண்டாம்-மூன்றாம் கோட்டைச் சுவர்கட்கு இடையில் விளை நிலங்கள், தோட்டங்கள், வீடுகள் இருந்தன. மூன்றும் மதிற்சுவரிலிருந்து ஏழாம் கோட்டைச் சுவர் வரை பலவகைக் கடைகளும் கடைத் தெருக்களும் நெருங்கி இருந்தன.

அரண்மனைக்குப் பக்கத்தில் மிகப் பெரிய கடைத் தெருக்கள் நான்கு இருந்தன. அவை ஒன்றுக்கொன்று எதிராக இருந்தன. ஒவ்வொரு கடைத் தெருவின் தலைப்பிலும் பெரிய மேடையும் மக்கள் அமர்ந்திருக்கத் தக்க பெரிய இடமும் அமைந்திருந்தன. துங்கபத்திரை யாற்றில் பெரிய அணைக்கட்டுக் கட்டி நீர் தேக்கப்பட்டது. அந்தத் தேக்கத்திலிருந்து பதினைந்து மைல் தூரத்தில் தண்ணீர் கொண்டுவரப்பட்டுத் தலைநகரத்திற்கு உதவுமாறு செய்யப்பட்டது.

## அரண்மனை

நகரத்தில் இராயர் அரண்மனையே மிகப் பெரியதும் உயரமானதுமான கட்டடம். அஃது அமைந்துள்ள இடத்தில், துங்கபத்திரை யாற்றுக் கால்வாய்களிலிருந்து பிரிக்கப்பட்ட நீர் ஓட்டங்கள் பளிங்குக் கற்கள் மீது பாய்ந்த வண்ணம் இருந்தன. அரண்மனை வாயிலில் கிருஷ்ண தேவராயர் உருவச் சிலையும் அவர் தகப்பனாரான நரச நாயக்கர் உருவச் சிலையும் மிகவுயர்ந்த கற்களில் செய்து நிறுத்தப்பட்டிருந்தன. அரண்மனைக்குள் அரசர் தொழில் நிலையமும், விடுதியும், அரச குடும்பத்தார்க்குரிய அந்தப்புர மாளிகைகளும், நடன மண்டபம், நாடக அரங்கு, இசை அரங்கு முதலியனவும், செய்குன்றுகளும் செய்குளங்களும் கண்ணுக்கு இனிய காட்சியை நல்கும் பூஞ்சோலைகளும் இருந்தன.

அரண்மனையில் 'தந்த அறை' என்பதொன்று இருந்தது. அதன் சுவர்கள், மேற்கூரை, தூண்கள் யாவும் தந்தத்தால் அமைந்தவை. அவற்றின் மீது தாமரை மலர்கள் அழகாகச் செதுக்கப்பட்டிருந்தன. அந்த அறையைக் கண்டு வியந்த மேனாட்டார் ஒருவர், 'நான் வேறு எங்கும் இத்தகைய அறையைப் பார்த்ததில்லை' என்று குறித்துள்ளார். மற்றோர் அறை 'செல்வ அறை.' அந்த அறையின் சுவர்கள் பொன் தகடு அடிக்கப்பட்டவை. அந்த அறையைக் கண்ட மேனாட்டு யாத்திரிகர் ஒருவர் விழித்த கண் விழித்தபடியே நெடுநேரம் நின்றிருந்தாராம். அறையில் பொன் கட்டிகள், பொன் பாளங்கள், நவரத்தினக் குவியல்கள், விலை மதிக்க இயலாத உயர்ந்த நகைகள் முதலியன நிறைந்திருந்தனவாம். இராயர் அரண்மனையில் வெள்ளிப் பாத்திரங்களும் பொன் பாத்திரங்களுமே வழக்கில் இருந்தன.

அரசமாதர் நடனத்திற்கு உரிய மண்டபம் கண்கொள்ளாக் காட்சியைத் தந்தது. அம்மண்டபச் சுவர்கள் முழுவதிலும் பல வகை அழகிய ஓவியங்கள் நிறைந்திருந்தன; தூண்கள் மீது நடன ஓவியங்கள் நலம்பெறத்

திகழ்ந்தன. தரை வழவழவென்றும் ஒளி பெற்றும் விளங்கியது.

### நகரத் தெருக்கள்

அரண்மனையை அடுத்து அமைச்சர், பிரபுக்கள், மாகாணத் தலைவர்கள், படைத்தலைவர்கள், அவைப் புலவர், அரசாங்க அலுவலாளர் முதலிய பெருமக்கள் வாழ்ந்த தெருக்கள் விளங்கின. ஒவ்வொரு தெருவும் அகன்று காட்டோற்றம் உள்ளதாக இருந்தது. அத் தெருக்களில் இருந்த விடுதிகள் மாடமாளிகைகளே ஆகும். அவற்றை அடுத்துப் பலவகை வணிகர் தெருக்கள் வளமுடன் காணப்பட்டன. அவற்றுக்கு அப்பால் பலவிதத் தொழில்களைச் செய்பவர், பொற் கொல்லர், இரும்புக் கொல்லர், கன்னார், தச்சர், தந்தவேலை செய்பவர், முத்துக் கோப்பவர், பவள வேலைக்காரர், கல் இழைப்பவர், கல்லுளித் தச்சர் முதலியவர் வசித்த தெருக்கள் இருந்தன. நகரத்தின் ஒரு பகுதியில் நடன மகளிர், நாடக மகளிர், இசைவாணிகள், இவர்களுக்குரிய ஆடல்ஆசிரியர், இசையாசிரியர், குழல்-யாழ்-முழவு-வீணை முதலியவற்றை இசைப்பவர், ஓவியக் கலைஞர், சிற்பக் கலைஞர் முதலிய கலை வல்லுநர் வாழ்ந்த தெருக்கள் இருந்தன. இசை, நடனம், நாடகம் இவற்றைத் தம் தொழிலாகக் கொண்ட பொதுமக்களிர் இல்லங்கள் பேரழகு பெற்று விளங்கின என்று மேனாட்டு யாத்திரிகர் குறித்துள்ளனர். நகரத்தைச் சுற்றிலும் படைவீரர்கள், நகரக் காவலர் முதலியோர் வாழ்ந்த தெருக்கள் இருந்தன. நகரத்தில் ஏறத்தாழ லக்ஷம் வீடுகள் இருந்தன என்று யாத்திரிகர் ஒருவர் குறித்துள்ளனர். எனவே, தலை நகரத்தின் மக்கள் தொகை ஏறக்குறைய ஐந்து லக்ஷம் என்று சொல்லலாம் என்பது அவர் கருத்து.

### கடைத் தெரு

முன்னர்க் கூறிய நான்கு கடைத் தெருக்கள் கண்டு மகிழத் தக்கவை; மிக்க விலை மதிப்புள்ள நவரத்தினக் கடைகள், பொன் நகைக் கடைகள், பொன்னும் மணியும்

கலந்து நகைசெய்து விற்கப்பட்ட கடைகள், வெள்ளிக் கடைகள் என்பன முதலிடம் பெற்றிருந்தன. இவற்றை அடுத்துச் செம்பு, ஈயம், வெண்கலம், தகரம், இரும்பு முதலிய உலோகப் பொருள்களையுடைய கடைகள் இருந்தன. இவற்றை அடுத்துச் சீனப் பட்டாடைக் கடைகள் இலங்கின. தந்தம், மரம், வெள்ளி, வெண்கலம் இவற்றால் செய்யப்பட்ட பலதிறப் பொருள்களை விற்கும் கடைகள் இடம்பெற்றிருந்தன. ஒருபால் தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட அகில், சந்தனம், குங்கிலியம் முதலிய வாசனைப் பொருட் கடைகள் இருந்தன. மற்றொருபால் மதுரை, கோயமுத்தூர் முதலிய இடங்களில் நெய்யப்பட்ட மெல்லிய துணி வகைகளை விற்கும் கடைகள் வீறுகொண்டிருந்தன.

புத்தகங்கள் எழுதுவதற்குரிய பனையோலை ஏடுகள் பதப்படுத்தப்பட்டு எழுத்தாணிகளுடன் இருந்த கடைகள் பல. குழல், யாழ், வீணை, மத்தளம் முதலிய இசைக் கருவிகளைக் கொண்ட கடைகள் சில. பலசரக்குச் சாமான் கடைகள் பல. நெல், வரகு, சோளம், காணம் முதலிய கூலவகைக் கடைகள் பல எள்நெய், தேங்காய்நெய், முத்துக்கொட்டைநெய் முதலிய நெய்வகைக் கடைகள் பல. மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, ரோஜா முதலிய மலர்க் கடைகள் பல. இவற்றுள் ரோஜாமலர்க் கடைகளே **மிகப் பல**; நகரத்தில் அரசர் முதல் ஆண்டிவரை நாடோறும் ரோஜா மலர்களை வாங்கினர்; அவற்றைப் பலவற்றுக்குப் பயன் படுத்தினர்; ரோஜா நீர் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது. நகரத்தார் தங்கள் உணவைவிட ரோஜா மலரைப் பெரிதும் விரும்பினர் என்று யாத்திரிகர் குறித்துள்ளனர்.

### பிரபுக்கள் முதலியோர்

பிரபுக்கள், அமைச்சர், சேனைத் தலைவர், மண்டலேசுவரர் முதலியோர் அரையில் ஆடையும், உடம்பிற் சட்டையும் தலையிற் பாகையும் அணிந்திருந்தனர். அவரவர் அலுவலுக்குத் தகுந்த உடை விசேடங்கள் இருந்தன.

விஜய நகரம் செல்வத்திற் சிறந்த நகரம் ஆதலின் இப் பெருமக்கள் உடைகளும் இல்லங்களும் பிறவும் செல்வத்தையே உணர்த்தி நின்றன. இவர்கள் பல்லக்கிற் செல்லும் உரிமை பெற்றவர்கள்.

### கலை மகளிர்

கோ நகரத்தில் இருந்த இசை-நடன-நாடகக் கலைகளை வளர்த்துவந்த மகளிர் மிகவும் கௌரவமாக நடத்தப்பட்டனர். அவர்கள் நகரத்தின் சிறந்த பகுதியில் உயர்ந்த மாடமாளிகைகளில் வாழ்ந்திருந்தனர். அவர்கள் வீட்டுக்குக் கௌரவமுள்ள எந்த மனிதரும் போய்வரலாம். அஃது இழிவாகக் கருதப்படவில்லை. கலைமகளிர் அந்தப்புர மாதருடன் நெருங்கிப் பழகினர்; அவர்களுடன் இருந்து தாம்பூலம் தரித்தனர்; உடற்பயிற்சி பெற்றனர். ஆண்டுதோறும் மஹா நவமியன்று பேரரசர் திருமுன் 'மற்போர்' புரிந்து மரியாதை பெற்றுவந்தனர். அவர்கள் அணிந்திருந்த நகைகள் விலை மதிப்பற்றவை. அவர்கட்கென்று நிலங்கள் இருந்தன; மாளிகைகள் இருந்தன; பணிபாட்கள் இருந்தனர். பிற போக பாக்கியங்கள் இருந்தன.

### மக்கள் வாழ்க்கை

அரசர் முதல் ஆண்டி யீருக அனைவரும் இன்ப வாழ்வே வாழ்ந்து வந்தனர். அரசர் ஆண்டுதோறும் அரைக் கோடி வராகன் சேர்த்து வைப்பது வழக்கம். ஆனல் பெருமக்கள் பலர் சேர்த்துவைப்பதில்லை; ஏன்? அரசர் தமக்குத் தேவைப்படும் பொழுதோ தம்மீது சினம் கொள்ளும் பொழுதோ தம் பொருளைக் கவர்ந்துகொள்வர் என்ற அச்சத்தினல் செலவழித்து வந்தனர்.

விஜயநகரத்தில் எல்லாப் பொருள்களும் விலை மலிவாகக் கிடைத்தன. ஒரு கோழியின் விலை அரையணு; ஆறு முதல் எட்டுக் கவுதாரிகளின் விலை ஒன்றரை அணு; மூன்று திராக்ஷைக் குலைகளின் விலை எட்டணு; பன்னிரண்டு ஆடுகளின் விலை ஐந்து ரூபாய். இவ்விவரங்களைக்

கொண்டு பிற பொருள்களின் விலைகள் ஒருவாறு ஊகித்துணரலாம் அல்லவா?

**உணவு**

பிராமணர், வீர சைவர், சமணர் முதலியோர் சைவ உணவினர்; ஏனையோர் இறைச்சி உணவினர். அரசர் வேட்டையாடிக் கொக்கு, புறா முதலிய பறவைகளைக் கொண்டுவருதல் வழக்கம். அவர் உயர்ந்த பறவைகளின் இறைச்சியையும் ஆட்டு இறைச்சியையும் உண்டனர். அரண்மனையில் பருவத்திற்குப் பருவம் உணவு வகைகள் வேறுபட்டன. நகர மக்கள் அனைவரும் தாம்பூலம் தரிப்பதை இன்பமாகக் கருதினர். இப்பழக்கத்தை முன்னர் அறியாத மேனாட்டு யாத்திரிகர் இதனைப்பற்றிச் சிறப்பாக எழுதியுள்ளனர்.

**பொழுது போக்கு**

பெருமக்கள் இசை, நடனம், நாடகம் இவற்றில் பொழுது போக்கினர்; காலை மாலை வேளைகளில் உடற்பயிற்சிக்குரிய விளையாட்டுகளில் ஈடுபட்டனர்; மற்ற நேரங்களில் தத்தம் உத்தியோக காரியங்களைக் கவனித்தனர். பொதுமக்கள் மாலை வேளைகளில் கோவில்களுக்குச் சென்று இறை வணக்கம் செய்தனர்; அங்கு நடைபெற்ற ஆடல் பாடல்களைக் கவனித்தனர்.

**கோவில்கள்**

விஜயநகரத்தில் சைவ, வைணவ, சமணக் கோவில்கள் இருந்தன. பம்பாபதீசர் கோவில், இராமசுவாமி கோவில், விட்டல சுவாமி கோவில், கிருஷ்ணசுவாமி கோவில் என்பன குறிப்பிடத்தக்கன. இக் கோவில்கள் மிக்க உயர்தரமான கற்களைக் கொண்டு கட்டப்பட்டவை. இவற்றில் உள்ள இரட்டைத் தூண்கள் பார்க்கத்தக்கவை. இவற்றில் உள்ள சிற்ப வேலைப்பாடு கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கது. கோவிலில் காணப்பட்ட ஓவியங்களும் சிற்பங்களும் அக்கால ஓவிய சிற்பக் கலை வளர்ச்சியை நாகரிக உலகிற்கு எடுத்து விளக்கும் இயல்பினை நேரிற் காண்பவரே உணரக்கூடும்.

# 3. விஜயநகர அரசர்கள்

### ஹரிஹரர்-புக்கர்

ஹரிஹரரே விஜயநகரத்தில் முதல் தலைவராக இருந்தவர். இவருக்கு அடுத்தபடி புக்கர் தலைவரானார். அவர் காலத்தில் வைணவர்க்கும் சமணர்க்கும் சமயப் போராட்டம் உண்டாயிற்று. உடனே புக்கர் இருதிறத்தாரையும் வரவழைத்தார்; சமணப் பெரியாரை வைணவப் பெரியாரிடம் ஒப்புவித்து, "இவர்களையும் இவர்கள் சமயமான சமணத்தையும் காத்தல் உங்கள் கடமையாகும். வைணவமும் சமணமும் சகோதர மதங்கள். ஆதலால் நீங்கள் வீணாகப் பூசலிட்டு நாட்டில் குழப்பத்தை உண்டாக்கலாகாது. நீங்கள் சமணக் கோவில்களையும் காக்கவேண்டும். நாட்டில் சைவ-வைணவ-சமணப் பூசல்கள் உண்டாகலாகாது. யாவும் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டும்" என்று அறிவுறுத்தினார்.

### இரண்டாம் ஹரிஹரர்

இவர் புக்கராயர் புத்திரர். இவர் புக்கர்க்குப் பின் பட்டம் பெற்றார். விஜயநகரப் பேரரசர் என்று முறைப்படி மணிமுடி தரித்துப் பெருநாட்டை ஆண்ட முதல் பேரரசர் இவரே. இவர் காலத்தில் போர்கள் நடைபெறவில்லை; தென் இந்தியாவில் அமைதி நிலவி இருந்தது. ஹரிஹரர் கல்வெட்டுகள் அவரை, "வேத விதிகளைப் பாதுகாப்பவர்", "வேத உரைகளை வெளியிடுபவர்", என்று குறித்துள்ளன. இவற்றால், ஹரிஹரர் வேதங்களை மதித்தவர்-வேத விதிகளின்படி நடக்க விரும்பியவர்-வேதங்கட்கு உரை வகுத்த புலவர்களை ஆதரித்தவர் என்பனவும், பொதுவாக இந்து சமயத்தைக் காப்பதே தம் நோக்கமாகக் கொண்டவர் என்பதும் அறியக் கிடக்கின்றன.

### முதலாம் தேவராயர்

இவர் காலத்தில் தலைநகரம், வடக்கே இருந்த பாமினி சுல்தானால் ஆண்டுக்கு ஒரு முறை தாக்கப்பட்டு

வந்தது. இவர் சுல்தானை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அற்றவர்; அதனால் பெரும்பொருள் ஈந்து ஒவ்வொரு முறையும் சமாதானம் செய்துகொண்டார்.

## இரண்டாம்தேவராயர்

இவர் காலத்திலும் ஓயாத போர்களே ஏற்பட்டன. தமது தோல்விக்குப் பண்பட்ட படைகள் இல்லாமையே காரணம் என்று, இவர் முஸ்லிம்களைத் தமது படையில் சேர்த்துக்கொள்ளலானார். சுல்தான் படைகளைப் போலத் தம் படைகளையும் தயார் செய்யவேண்டும் என்பது இவர் அவா. ஆயின் இவர் முயற்சி பயன் அளிக்கவில்லை அதனால் இவர் சுல்தானுக்குக் கப்பம் கட்டிவர இசைந்தார்.

இவரது ஆட்சியில் தென்னிந்தியா முழுவதும் ஒன்று பட்டு இருந்தது. சுல்தான்களிடம் தோல்வி அடைய அடைய இந்துக்கள் மானவுணர்ச்சி பெற்றுப் போரில் திறமை பெறலாயினர். தேவராயர் காலத்தில் வெளி நாட்டு வாணிகம் வளர்ச்சி பெற்றது. வெளிநாட்டுத் தூதுவர் வந்து உறவு கொள்ளலாயினர். இராயர் அவர்களை வரவேற்று உபசரித்து, அவர்கள் மூலமாக வாணிகத்தை வளர்க்கலானார்; தம் நம்பிக்கைக்கு உரிய அதிகாரி ஒருவரை அயல் நாட்டு வாணிகத்தைக் கவனிக்குமாறு நியமித்தார். தேவராயர் முஸ்லிம்கள் படையெடுப்பைத் தடுக்க வடக்கே பலமான ஏற்பாடுகளைச் செய்தார்; உள்நாட்டில் கலகங்கள் உண்டாகாதபடி உள்நாட்டு அரசியலைச் சீர்திருத்தி அமைத்தார்.

## அறிவுச் செல்வம்

இப் பேரரசர்க்குப் பின் வந்த அரசர்கள் காலத்தில் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்றும் இல்லை. ஹரிஹரர்-புக்கர் கால முதல் சுமார் 150 வருட காலம் அவர்களுடைய மரபினர் விஜயநகரப் பேரரசராக இருந்து வந்தனர். இந்த நூற்றைம்பது வருட காலத்திற்குள் தென் இந்தியாவில் புகழ்பெற்ற வடமொழி, தமிழ், தெலுங்கு, கன்னடப் புலவர்களும் சரித்திர விற்பன்னரும் தோன்றினர். பேரரசர்கள் தென் இந்தியா முழுவதிலும் இருந்த

புலவர் பெருமக்களைத் தலைநகரத்திற்கு வரச்செய்தனர்; அவரவர் செய்திருந்த நூல்களைப் பாராட்டிச் சிறப்புச் செய்தனர்; செவி வழியாக வந்துகொண்டிருந்த உரைகளை எழுத்து வடிவில் ஆக்க ஊக்கினர். மாதவாசாரியர், சாயணாசாரியர் என்ற சகோதரரும் பிறரும் சிறந்த உரையாசிரியர்களாக விளங்கினர்கள். அரச மாதேவியரும் சிறந்த புலமை உடையவர்களாகத் திகழ்ந்தமை பாராட்டத் தக்கது. விஜயநகரப் பேரரசு இங்ஙனம் அந்நியர் படையெடுப்பையும் அழிவையும் நீக்கியதுடன் இந்து சமயத்தையும் சமய நூல்களையும் பாதுகாத்து வளரச் செய்தது.

## இரண்டாம் பரம்பரை

### புதியவர் படையெடுப்பு

ஏறக்குறைய 1475-ல் பாமினி நாட்டில் குழப்பம் உண்டானது. அப்பொழுது ஒரிஸ்ஸாவில் கஜபதி அரசு ஓங்கலாயிற்று. ஒரிஸ்ஸா அரசன் விஜயநகரப் பெருநாட்டிற்குட் புகுந்து கிழக்குக் கரையோரமாகவுள்ள ஊர்களைப் பிடித்துக்கொண்டே திருவண்ணாமலை வரை சென்றான். இந்தப் புதிய அரசன் படையெடுப்பைத் தடுத்து நிற்கும் ஆற்றல் அப்போதிருந்த விஜயநகரப் பேரரசர்க்கு இல்லை. அதனால் பெருநாடு குழப்பத்திற்கு இடமாகத் தொடங்கியது.

### நரசிங்க சாளுவர்

இக்குழப்ப நிலையைச் சந்திரகிரி அரசர் கவனித்தார். அவர் விஜயநகரப் பேரரசருக்கு உட்பட்ட சிற்றரசரே ஆவர்; ஆயினும் சிறந்த போர் வீரர்; அஞ்சா நெஞ்சினர்; எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர். அவர் பேரரசரது வலியற்ற தன்மையைக் கண்டு வருந்தினர்; பெருநாட்டின் கிழக்குப் பகுதியை ஒரிஸ்ஸா அரசன் கைப்பற்றியது கண்டு மனம் புழுங்கினர்; பெருநாட்டைச் சிதறவிடாமல் காக்கவேண்டும் என்று கவலை கொண்டார்; அங்ஙனம் காக்கவேண்டுமாயின், பேரரச

ரைப் பட்டத்திலிருந்து இறக்கியாகவேண்டுமே என்று கவலை கொண்டார்; வேறு வழி இல்லாததால் பேரரசரை அரியணையிலிருந்து அகற்றித் தாமே பேரரசராக மகுடம் சூடினார். இங்ஙனம் பேரரசரான நரசிங்க சாளுவரும் அவர் மரபினரும் விஜயநகரப் பெருநாட்டை ஆண்ட **இரண்டாம் பரம்பரையினர்** எனப்பட்டனர்.

**சிறந்த பேரரசர்**

நரசிங்கர் பேரரசர் ஆவதற்குள் பாமினி அரசர் துங்கபத்திரைக்கு வடக்கே இருந்த இராயச்சூரையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியையும் கைக்கொண்டனர். நரசிங்கர் முதலில் சுல்தானை எதிர்க்கவில்லை. அவர் முதலில் கலிங்க அரசன் கைப்பற்றிய பெருநாட்டின் கிழக்குப் பகுதியை மீட்க முயற்சி செய்தார்; பெரும் படையுடன் சென்று கலிங்கப் படைகளைப் பல இடங்களில் தாக்கி முறியடித்தார்; பெருநாட்டு எல்லைக்கு அப்பால் அப்படைகளைத் துரத்தி அடித்தார்; இங்ஙனம் அவ்வீரர் இழந்திருந்த பகுதியைக் கைப்பற்றினார். அவருடைய வீரச் செயல்களைக் கண்ட அயல் நாட்டார் வியப்புற்றுப் பாராட்டினர். நரசிங்கர் சிறந்த அரசியல் அறிஞர்; பெருநாட்டில் அந்நியர் படையெடுப்பால் உண்டாகி இருந்த குழப்ப நிலையை ஒழித்து, அழுத்தமான அரசியலை அமைத்தார். அதனால் அவர்காலத்தில் தென் இந்தியாவில் வாணிகம் செய்த ஐரோப்பியர் விஜயநகரப் பெருநாட்டை அப்பெயரிட்டு அழையாமல் 'நரசிங்கர் நாடு' என்றே அழைக்கலாயினர். நரசிங்கர் தாம் இறக்கும் வரை, வடக்கே இருந்த சுல்தான்களுடன் ஓயாது போர் செய்து வந்தார். நரசிங்கர் பேரரசராக வந்திராவிடில் விஜயநகரப் பெருநாடு அழிந்திருத்தல் கூடும்.

## மூன்றும் பரம்பரை

**நரச நாயக்கர்**

இவர் நரசிங்க சாளுவர் நம்பிக்கைக்கு உரிய சேனைத் தலைவர். நரசிங்கர் இவரிடமே பேரரசை ஒப்புவித்துக்

காலமானூர். இவர் பேரரசராக முடிசூடிப் பெருநாட்டைப் பாதுகாத்து வந்தார். இவரும் இவர் மரபினரும் மூன்றாம் பரம்பரையினர் எனப்பட்டனர். நரச நாயக்கர் கலிங்க நாட்டுக் காவலனையும் சோழ - பாண்டியரையும் வென்று அடக்கினர்; பெருநாடு முழுவதிலும் இருந்த பெரிய திருக்கோவில்கட்குத் திருப்பணிகள் பல செய்தார்; பேரரசர் பிரதிநிதியாக இருந்து நாட்டை ஆண்டு வந்தார்; காவிரியாற்றின் மீது பாலத்தைக் கட்டி ஸ்ரீரங்கப் பட்டணத்தைக் கைப்பற்றினர்; குந்தள அரசனை வென்று அமைதியை அந்த நாட்டில் நிறுவினர்.

## கோட்டைகள்

நரச நாயக்கர் **வீர** வைணவர்; எனினும் **பிற** சமய வெறுப்பு இல்லாதவர். இவரது ஆட்சியில் எல்லாச் சமயத்தவரும் மிக்க மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். நரச நாயக்கர் வேலூரில் பெரிய கோட்டை ஒன்றைக் கட்டினர்; மலைகளால் சூழப்பட்டுள்ள சந்திரகிரியில் ஒரு கோட்டையைக் கட்டினர்.

## குடும்பம்

நரச நாயக்கர்க்கு மனைவியர் மூவர். மூத்தவள் **திப்பாம்பாள்**; இளையவள் **நாகமாம்பாள்**; மூன்றும் மனைவியாகக் கருதப்பட்டவள் **உமாம்பிகா தேவி** என்பவள். முதல் மனைவிக்கு வீர நரசராயர், இரண்டாம் மனைவிக்கு கிருஷ்ண தேவராயர், மூன்றும் மனைவிக்கு அச்சுததேவராயரும் அரங்க தேவராயரும் பிறந்து வளர்ந்தனர்.

## மூத்தவள் கொடுமை

நரச நாயக்கர் கிருஷ்ணதேவரை மிக்க அன்புடன் வளர்த்து வந்தார்; அவரைக் காணுதபொழுது மழை காணுப் பயிர்போல வாடினர்; கிருஷ்ணதேவரும் தந்தையாரை விட்டுப் பிரிவதில்லை. இக்காட்சி முதல் மனைவிக்குப் பொறுமையை உண்டாக்கிற்று. அவள், "நாகமாம்பாள் தாதி; அவள் பெற்ற கிருஷ்ண தேவன் தாதி மகன்" என்று பிரசாரம் செய்யத் தொடங்கினள்; அக்கொடிய

வள் சிறுவராகிய கிருஷ்ணதேவரைக் கொல்லவும் சூழ்ச்சி செய்தாள்.

**‘அப்பாஜி’**

மூத்தவளது தீய நினைவை அறிந்த பேரரசர் கிருஷ்ண தேவரை அரண்மனையில் விடாது, தமது அமைச்சரும், அந்தணரும் பேரறிஞருமாகிய திம்மரசு என்பவர் பாதுகாப் பில்விட்டார். கிருஷ்ணதேவர் திம்மரசைத் தந்தையா ராகக்கொண்டு ‘அப்பாஜி’ என்று அழைக்கலானார். அச்சொல்லே திம்மரசைக் குறிக்க இன்றளவும் வழங்கி வருகிறது.

**நரசராயர் இறுதி**

நரச நாயக்கர் பிஜப்பூர்ச் சுல்தானிடமிருந்து விஜய நகரத்திற்குச் சொந்தமான இராயச்சூர் முதலிய இடங் களைக் கைப்பற்ற விரும்பினார். எனினும் அவர் காலத் தில் அது முற்றுப்பெறவில்லை. அவர் நோய்வாய்ப்பட் டார். அவர் உடல் வீக்கம் கொண்டது. அவர் அரண் மனையில் இருந்த தம் மக்களை அழைத்து, “என் விரலில் உள்ள மோதிரத்தைக் கழற்றுபவனே இந்நாட்டை ஆளத் தகுதியுடையவன்” என்றார். கிருஷ்ணதேவர் அரண் மனையில் இல்லை அல்லவா? மற்ற மக்கள் மூவரும் மோதி ரத்தைக் கழற்ற முயன்றனர்; முடியவில்லை.

அப்பொழுது நரச நாயக்கர் அப்பாஜியைப் பார்த்து “என் உயிரனைய கிருஷ்ணதேவன் இங்கு இருப்பின், இம் மோதிரத்தை எளிதில் கழற்றுவான். அவனைக் காணுமல் என் உயிர் பிரியாது. அவனை இங்கு அழைத்து வருக” என்றனர். சிறிது நேரத்திற்குள் கிருஷ்ண தேவர் தந்தையார் எதிரில் நின்றார். அவரைக் கண்டதும் தந்தையார் இழந்த புதையலைக் கண்ட வறியவனைப் போல மகிழ்ந்தார்; “செல்வமைந்தா, என் விரலில் உள்ள மோதிரத்தைக் கழற்றுக” என்றனர்.

கிருஷ்ணதேவர் நுட்ப அறிவு வாய்ந்தவர். ஆதலால் தந்தையாருக்கு வலி உண்டாக்காமல் மோதிரத்தைக் கழற்ற விரும்பினார்; ஈரத் துணியை விரலில் சுற்றினார்.

சிறிது நேரம் கழிந்த பின் வீக்கம் வடிந்துவிட்டது. மோதிரம் எளிதில் கழற்றப்பட்டது. தந்தையார் மகனை மார்புறத் தழுவி, "அப்பனே, நமக்கு உரிமையான இராயச்சூர் முதலிய ஊர்களை முஸ்லிம்கள் கவர்ந்து கொண்டனர். நீ அவற்றைக் கைப்பற்ற வேண்டும். என் ஆன்மா அப்பொழுதுதான் அமைதியைப் பெறும்" என்றார். உடனே அவரது ஆவி பிரிந்தது. அவரது மூத்த மகனாரான வீர-நரசராயர் பேரரசர் ஆனார்.

### வீர நரசராயர்

சிறந்த வீரரான நரச நாயக்கருக்குப் பிள்ளையாகப் பிறந்தும் வீர நரச ராயர் பேரரசினைக் காக்கத்தக்க ஆண்மை உடையவராக இல்லை. நரச நாயக்கர் இறந்த வுடன் பேரரசுக்கு உட்பட்டிருந்த சிற்றரசர் பலர் பகுதிப் பணத்தைச் செலுத்தாது சுயேச்சையாக நாட்டை ஆளத் தொடங்கினர். அவர்களை அடக்கத்தக்க வீரம் வீர நரச ரிடம் இல்லை. அதனால் இளவரசராக இருந்த கிருஷ்ண தேவர் பெரும் படையுடன் சென்று அடங்காப் பிடாரி களான சிற்றரசரைப் போர்களில் முறியடித்து ஆண்டு தோறும் கப்பம் கட்டிவருமாறு செய்து மீண்டார்.

### கிருஷ்ணதேவர் பேரரசர்

வீர நரச ராயர் பதினொராண்டுகளே பேரரசராக இருந்தார். அவர் திடீரென நோய்வாய்ப்பட்டுக் கால மானார். அவருக்குப் பின் கி. பி. 1509-ல் கிருஷ்ணதேவர் 'இராயர்' ஆனார்.

விசுவநாத நாயக்கர் காலத்து அரசர் கிருஷ்ணதேவ ராயர் அல்லவா? அவர் நடுத்தர உயரமும் நல்ல உடற் கட்டும் கம்பீரமான தோற்றமும் கொண்டவர்; சிறிதளவு அம்மைத் தழும்புடைய முகத்தினர்; எப்பொழுதும் மலர்ந்த முகத்தோற்றம் உடையவர். அவர் சீனர், இட்டாலியர், அராபியர், பாரசீகர் முதலிய அந்நிய நாட்டாரை யும் மலர்முகத்தோடு வரவேற்று உண்டியும் உறையுளும் வழங்கி உபசரிக்கும் இயல்புடையவர். அவர் மெல்லிய வெள்ளை ஆடைகளையே உடுத்துவது வழக்கம். அந்த

ஆடைகள் தங்க ரோஜா இதழ்கள் வைத்துத் தைக்கப் பட்டவை. அவர் கழுத்தில் வைரமாலை விளங்கியது. தலையில் அழகிய பீலி அணிந்த பாகை இலங்கியது. கால்களில் கூரிய நுனியுடைய பட்டு ஜோடுகள் இருந்தன. 'இராயர் உடற்கட்டிலும் உடைச் சிறப்பிலும் பேச்சாற்றலிலும் புலமையிலும் பேரசர்க்குரிய பிற இலக்கணங்களிலும் அணுவளவும் தவறாதவர்' என்று யாத்திரிகர் குறித்துள்ளனர். அரசமகளிரும் கல்வி கேள்விகள் நிரம்பியவராய் இருந்தனர்.

---

## 4. கிருஷ்ணதேவ ராயர்

விஜயநகரப் பேரரசர்க்குள் இணையற்ற பேரரசர் கிருஷ்ணதேவ ராயரே ஆவர். அவரது வரலாறே இணையற்றது; புகழ்பெற்றது. அவர் முடிபுனைந்த நிகழ்ச்சி என்றும் நிலை பெற்று இருப்பதற்காக ஹம்பியில் உள்ள பம்பாபதிக் கோவிலில் உள்ள கல்வெட்டில் பொறிக்கப் பட்டுள்ளது. இராயர் தாம் மணிமுடி புனைந்ததற்கு அடையாளமாக ஒரு பெரிய மண்டபத்தையும் கோபுரத்தையும் கட்டினார் என்பதை மேற்சொன்ன கல்வெட்டுக் குறிக்கிறது. இராயர் பட்டம் பெற்றபோது அவருக்கு வயது இருபது.

**பெரும்படை**

இராயர் பட்டம் பெற்றவுடன் பெரும் படையைத் திரட்டலானார்; போர் வீரர்கட்குப் புதிய முறையில் போர்ப் பயிற்சி அளித்தார்; பெரு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பண்பட்ட படைவீரரை ஒன்று சேர்த்தார்; பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட இளைஞரை ஆயிரக்கணக்கில் வீரர்கள் ஆக்கினார்; நாட்டுப் பற்றும் அரச பக்தியும் நிரம்பிய வீர இளைஞரைப் படைத் தலைவர்கள் ஆக்கினார். இத்தகைய முயற்சியின் பலனாக அவரிடம் மூன்று லக்ஷத்துக்கு மேற்பட்ட வீரர்கள் இருந்தார்கள்; ஏறக்குறைய இரண்டாயிரம் யானைகள் இருந்தன; மூவாயிரம் குதிரைகள் இருந்தன.

**போர்ச் செயல்கள்**

இராயர் வீரமே உருக் கொண்டவர்; அஞ்சா நெஞ்சினர்; வருவது அறிந்து உரைக்கும் ஆற்றல் பெற்ற அப்பாஜியை முதல் அமைச்சராகப் பெற்றவர். ஆதலின் இராயர் அப்பாஜியை உடன் அழைத்துக்கொண்டு பெரும்படையுடன் சில நாடுகளைக் கைப்பற்றச் சென்றார்.

மைசூரை ஆண்டுவந்த கங்கர் அவ்வப்போது பேரரசுக்கு அடங்க மறுத்தனர். அவர்களை அடக்காவிடில் கர்நாடகத்தில் அமைதி நிலைபெறாது. ஆதலால் இராயர் முதலில் கங்கர் மீது படையெடுத்தார்; கங்க அரசரைப் போரில் முறியடித்துச் சிவசமுத்திரம், ஸ்ரீரங்கபட்டணம் முதலிய இடங்களில் இருந்த அரண்களைக் கைப்பற்றினார்; கங்கர் அடங்கி நடப்பதாக உறுதி கூறியவுடன் அவர்களிடம் நாட்டை ஒப்புவித்துக் கிழக்கு நோக்கிச் சென்றார்.

நெல்லூர் ஜில்லாவில் உதயகிரி என்பது மலையரண் கொண்டது. அது கலிங்கநாட்டு அரசனுக்கு உரியது. இராயர் அதனைக் கைப்பற்றினார்; உதயகிரி மலைமீதிருந்த கோவிலில் கிருஷ்ணன் உருவச்சிலை இராயரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இராயர் அதனை எடுத்துச் சென்று தம் தலைநகரை அடுத்த கிருஷ்ணபுரத்தில் ஒரு கோவிலைக் கட்டி அதில் எழுந்தருளுவித்தார்; அக்கோவிலுக்குப் பல நிலங்களை விட்டார்; கோவிலுக்குக் 'கிருஷ்ண சுவாமி கோவில்' எனப் பெயரிட்டார்.

இராயர் பிறகு குடகு நாட்டரசரை வென்று தமக்கு அடங்கி இருக்குமாறு செய்தார்; தமிழ் நாடு முழுவதும் சுற்றிச் சேர சோழ பாண்டியர்களைத் தமக்கு அடங்கிக் கப்பம் கட்டுமாறு திட்டம் செய்தார். இராயர் தமிழகத்துத் திருக்கோவில்களைத் தரிசித்தார்; இராமேசுவரம், மதுரை, ஸ்ரீரங்கம் கோவில்கள் இராயர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

கிருஷ்ணதேவ ராயர் உதயகிரியைக் கைப்பற்றிய பிறகு பெல்லம் கொண்டா, வினுகொண்டா, பெஜவாடா,

இராஜமகேந்திரபுரம் முதலிய இடங்களைக் கைப்பற்றினார்; பிறகு சிம்மாசலம் சென்று பெருமாளைத் தரிசித்தார். இந்த வெற்றியினால் கிழக்கில் இருந்த பரந்த நிலப் பகுதி இராயர் ஆட்சிக்கு உட்பட்டது.

பின்னர் இராயர் வடக்கே சென்று கலிங்க அரசனுக்குச் சொந்தமான கொண்ட வீடு என்பதைக் கைப் பற்ற முயன்றார். அப்போது கலிங்க அரசனுக்கும் இராயர்க்கும் கடும்போர் நிகழ்ந்தது. இரண்டு மாதம் முற்றுகை இடப்பட்டது. முடிவில் இராயர் வெற்றி பெற்றார். இராயர் அப்பாஜியை அந்த இடத்தில் தமது பிரதிநிதியாக இருந்து அரசாளப் பணித்தார். அப்பாஜி தம் நெருங்கிய உறவினரைப் பிரதிநிதியாக்கி, இராயருடனே சென்றார்.

இவ்வாறு பெற்ற வெற்றிகளால் இராயரது பேரரசு துங்கபத்திரை யாறு முதல் கிழக்குக் கரையில் கோதாவரி யாறுவரையும் தெற்கே குமரிமுனை வரையும் பரவி இருந்தது. இத்தகைய பெருநாடு வேறு எந்த அரசர் காலத்திலும் இருந்ததில்லை.

**இராயரும் போர்ச்சுகீசியரும்**

கிருஷ்ணதேவ ராயர் சிறந்த அரசியல் அறிஞர். அவர் இந்தியாவில் தங்கி வாணிகம் செய்ய வந்த போர்ச்சுகீசியர்க்கு நண்பர் ஆனார்; பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமாக இருந்த **கோவா** என்ற துறைமுக நகரத்தைக் கைப்பற்றிக் கொள்ளுமாறு போர்ச்சுகீசியர்க்கு உதவி செய்தார். சுல்தான் வெகுண்டு போர்ச்சுகீசியரைத் தாக்க முற்பட்டார். அப்பொழுது இராயர் தம் படைகளைப் போர்ச்சுகீசியர்க்கு உதவியாக அனுப்பினார். இத்தகைய அந்தரங்க நட்பினால் இராயர் போர்ச்சுகீசியர் வாணிகத்தைத் தம் பெருநாட்டிற்கே திருப்பிக்கொண்டார்; அவர்கள் பண்ட சாலைகளை அமைத்துக்கொள்ளப் பட்கல் என்ற நகரை உதவினார். போர்ச்சுகீசியர் இராயர் உதவிகளை மறவாமல் இறுதிவரை நன்றி பாராட்டி வந்தனர்.

## இராயர் பெரும்புலவர்

கிருஷ்ணதேவ ராயர் போரில் சிறந்து விளங்கினாற் போலவே புலமையிலும் சிறந்து விளங்கினார். அவர் வடமொழி, தெலுங்கு என்னும் இருமொழிகளிலும் பெரும் புலவராகத் திகழ்ந்தார். அவர் வடமொழியில் ஆறு நூல்களைச் செய்தார். அவர் செய்த தெலுங்கு நூல்களில் மிக்க சிறப்புடையது 'ஆமுக்தமால்யதா' என்பது. அது பெரியாழ்வார் மகளாரான ஆண்டாள் அம்மையார் வரலாறாகும். அது தெலுங்கு மொழியில் மிகச் சிறந்த நூலாக இன்றளவும் போற்றப்பட்டு வருகின்றது.

## அவைப் புலவர்கள்

இராயர் அவையில் வடமொழிப் புலவர் பலர் இருந்தனர். அவர்கள் பல நூல்களைச் செய்து வடமொழியை வளர்த்தனர். இங்ஙனமே கன்னடப் புலவர்களும் இராயரது ஆதரவைப் பெற்றுக் கன்னட இலக்கியத்தைப் பெருக்கினர். தமிழ்ப் புலவர்களும் இராயரைப் பாராட்டி இராயரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டனர். அவருள் (1) காஞ்சி-ஞானப்பிரகாசர், (2) குமார சரசுவதி, (3) அரிதாசர் என்பவர் குறிக்கத் தக்கவர். காஞ்சி - ஞானப்பிரகாசர் காஞ்சிபுரத்துச் சைவ மடத்துத் தலைவர். அவர் கிருஷ்ணதேவ ராயரைப் பாராட்டி **மஞ்சலிப்பா** என்றொரு நூலைப் பாடினார். குமார சரசுவதி என்பவர் இராயர் அவையிலிருந்த தமிழ்ப்புலவர். அவர் அடிக்கடிப் பல பாக்களை இராயர்மீது பாடி அவரை மகிழ்வித்துவந்தார். அரிதாசர் என்ற வைணவப் புலவர் நாகலாபுரத்தைச் சேர்ந்தவர். 'நாகலாபுரம்' என்ற பெயர் இராயர் தாயாரான 'நாகலாதேவி'யின் பெயரைப் பெற்றது. அரிதாசரது அழைப்பை ஏற்று இராயர் அங்குச் சென்று பெருமாளைச் சேவித்து அந்த ஊர்க்குத் (அரிவாசபுரம்) தம் தாயார் பெயரை வைத்து வழங்குமாறு செய்து மீண்டார். அரிதாசர் 'இரு சமய விளக்கம்' என்று தாம் பாடிய நூலில் இராயரைப் பாராட்டிப் பாடியுள்ளார். இதுவரை கூறிவந்த விவரங்களால் இராயர் வடமொழி - கன்னடம்-தெலுங்கு - தமிழ்

என்னும் மொழிப்புலவர்களை ஆதரித்தார்; அவர்களது பாராட்டுக்கு உரியவர் ஆயினர் என்பன அறியலாம்.

இராயர் தெலுங்கு மொழியிற் பெரும்புலவர். ஆதலின் தெலுங்குப்புலவர் பலராக அவரது அவையில் இருந்தனர். அவருட் சிறந்தவர் எண்மர். அவர்கட்கு 'அஷ்டகஜங்கள்' (எட்டு யானைகள்) என்பது பெயர். அவர்கள் (1) அலசானி பெத்தன்ன, (2) நந்தி திம்மன்ன, (3) மாதய்யகாரி மல்லன்ன, (4) தூர்ச்சடி, (5) அய்யலராஜு இராமபத்திரகவி, (6) பிங்கலி சூரன்ன, (7) இராமராஜ பூஷணர், (8) தெனலி இராமலிங்கர் என்பவர்கள். இவருள் தலைமணி போன்றவர் பெத்தன்ன என்பவரே ஆவர். இவர் எப்பொழுதும் இராயருடன் இருப்பவர். இவர் பொற்பல்லக்கு, யானை இவற்றில் வர உரிமை பெற்றவர். இவரது பல்லக்கைச் சுமப்பதில் இராயருக்கு விருப்பம் மிகுதியாக இருந்தது.

இவருக்கு அடுத்தபடியில் நந்தி திம்மன்ன என்பவர் விளங்கினர். அவர் பெருநூல் ஒன்றைச் செய்து இராயரது பெரு மதிப்பைப் பெற்றவர். தெனலிராமர் உலகத்தையே தம் வசப்படுத்திய புலவர் அல்லவா? அவரைப்பற்றி உங்கட்குச் சொல்லவேண்டுவது இல்லை அன்றோ?

இராயர் தம்மை நாடிய புலவர் பெருமக்கட்கு எல்லாம் நிலங்களை மானியமாக விட்டார்; வீடுகளைக் கட்டிக்கொடுத்தார்; ஆடை ஆபரணங்களை உதவினர்; தம் பெருநாட்டில் இருந்த பாவலர்-நாவலர்-உரையாசிரியர் முதலிய அறிஞர்களை வரவழைத்து வரையாது வழங்கினர். போஜராஜன் வசந்தவிழாவைக் கொண்டாடிப் புலவர்க்கு ஆண்டுதோறும் பரிசளிப்பது வழக்கம். இராயரும் அவ்வாறே வசந்த விழாவின்போது புலவர்கட்குத் தக்கவாறு பரிசளித்தார்; தாம் துலாபாரம் புகுந்தபொழுதெல்லாம் அந்தப் பொன்னையும் மணிகளையும் புலவர்கட்கே பகிர்ந்தளித்தார். இராயரைப்போலத் தென் இந்தியாவில் நான்மொழிப் புலவர்களை இங்ஙனம் ஆதரித்த வேறு அரசர் ஒருவரும் இல்லை. என உறுதியாக உரைக்கலாம்.

**சமய நிலை**

கிருஷ்ணதேவ ராயர் சிறந்த வைணவர்; கிருஷ்ண சுவாமி கோவில், இராமசுவாமி கோவில், விட்டலசுவாமி கோவில்களைக் கட்டியவர்; திருப்பதி வெங்கடேசுவரப் பெருமாளைக் குலதெய்வமாகக் கொண்டவர்; ஆயினும் சைவ-சமண சமயங்களில் பரந்த நோக்கம் உடையவர். அவர் எல்லாக் கோவில்கட்கும் திருப்பணிகள் செய்துள்ளார். 'இராயர் கோபுரம்' எனக் காணப்படும் கோபுரங்களைக் கட்டத் தொடங்கிய முதல் பேரரசர் அவரே யாவர். அவரது பேரவையில் கிறிஸ்தவ சமயத்தினரான போர்ச்சுகீசியரும் இஸ்லாத்தைச் சேர்ந்த அரச தூதர்களும் மிக்க மகிழ்ச்சியுடன் இருந்துவந்தனர் எனின், இராயரது பரந்த சமய நோக்கத்தை நன்கு உணரலாம் அல்லவா?

**வாணிகம்**

இராயர் காலத்தில் விஜயநகரப் பெருநாடு கடல் வாணிகத்தில் தலைசிறந்து இருந்தது. பாரசீகர், போர்ச்சுகீசியர், அராபியர், சீனர் முதலிய அயல் நாட்டார் விஜய நகரப் பெரு நாட்டுடன் கடல் வாணிகம் செய்தனர். மேற்கே போர்ச்சுகல் நாடு முதல் கிழக்கே சீனம் வரை இராயர் காலத்துக் கடல் வாணிகம் பரவி இருந்தது. பெருநாட்டில் முந்நூறு துறைமுகங்கள் இருந்தன எனின், அக்காலக் கடல் வாணிகச் சிறப்பை நன்கறியலாம். சீனத்துப் பட்டாடைகள், மேல் நாட்டுக் குதிரைகள், இலங்கையிலிருந்து யானைகள் முதலியன பெருநாட்டில் இறக்குமதியாயின. இங்கிருந்து உயர்ந்த மெல்லிய ஆடைகள், வாசனைப் பொருள்கள், அரிசி முதலியன அயல் நாடுகட்கு ஏற்றுமதி ஆயின. உள்நாட்டு வாணிகமும் உயரிய நிலையில் இருந்தது. இங்ஙனம் வாணிகம் சிறந்து இருந்ததால் அரசாங்க வருமானம் பெருகியது.

**பெருநாட்டு அரசியல்**

இராயர் தமது பெருநாட்டை எவ்வாறு கட்டியாண்டார்? பெருநாடு பல இராய்ச்சியங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வோர் இராச்சியத்தையும் இராயர் நம்பிக்கைக்கு

உரிய பெரும்படைத்தலைவர் ஒருவர் ஆண்டுவந்தார். சோழ நாடு, பாண்டிய நாடு போன்ற நாடுகளைப் பழைய அரசர்களே ஆண்டுவந்தார்கள். அவர்கள் தங்கள் நாட்டு அரசியலை நடத்தலாம்; படைகளை வைத்துக்கொள்ளலாம். அரசாங்க வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியைப் பேரரசர்க்கு ஆண்டுதோறும் செலுத்தவேண்டும்; போர்க் காலங்களில் பேரரசர்க்குப் படை உதவி செய்யவேண்டும்.

இங்ஙனம் இருந்த சிற்றரசர்களை மேற் பார்த்துவர ஒவ்வொரு மண்டலத்திலும் உயர்ந்த அரசாங்க அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் 'மஹா மண்டலேசுவரர்' எனப் பெயர் பெற்றார். கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் தமிழகத்துக்கு (தக்ஷிண) மஹா மண்டலேசுவரராக இருந்தவர் **நாகம நாயக்கர்** என்பவர். அவர் பெற்ற தவப்புதல்வரே நமது நூலுக்குரிய **விசுவநாத நாயக்கர்.**

---

# 5. விசுவநாதர் பிறப்பும் வளர்ப்பும்

**நாகம நாயக்கர்**

நாகம நாயக்கர் நரசிங்க சாளுவர் காலத்தவர். அவர் காஞ்சியிற் பிறந்தவர். அவர் முன்னோர் விஜயநகரப் பேரரசில் உயர்ந்த அலுவலாளர்களாக இருந்து வேலை பார்த்தவர். நாகமர் தக்ஷிண மஹா மண்டலேசுவரரிடம் பொக்கிஷ அதிகாரியாக இருந்தவர். அவர் செங்கற்பட்டை அடுத்த திருக்கச்சூர் மலைமீது ஒரு சிற்றூரை அரசர் நரசிங்க சாளுவர் வெற்றிகட்டு அறிகுறியாக அமைத்தவர். "அவர் சாளுவ நரசிங்கராயர் பேரன்புக்கு உரிய ஊழியர்" என்று கல் வெட்டுகள் குறிக்கின்றன. வேலூரை அடுத்த விரிஞ்சிபுரம் கோவிற் கோபுரத்திலும் சிதம்பரம் கோவிலிலும் அவரைப் பற்றிய கல்வெட்டுகள் இருக்கின்றன.

நாகம நாயக்கர் நரச நாயக்கர் காலத்தில் தக்ஷிண மஹா மண்டலேசுவரர் ஆனார். அவர் ஆறடிக்கு மேற்

பட்ட உயரம் உள்ளவர்; நல்ல உடற்கட்டும் கம்பீர தோற்றமும் பெற்றவர்; சிறந்த போர்வீரர்; வைணவத்தில் மிகுந்த பற்றுடையவர். அவர் தக்ஷிண மஹா மண்டலேசுவரர் ஆவதற்குமுன் பலபோர்கள் புரிந்தவர்; தென்னாட்டு நிலைமையை நன்கு அறிந்தவர்; தென்னாடு முழுவதும் நன்றாகச் சுற்றி யாத்திரை செய்தவர்.

### பிள்ளை இல்லாக் குறை

நாமக நாயக்கர் போக பாக்கியங்களிற் சிறந்து இருந்தும் அவர் வாழ்க்கையை இன்புறுத்தப் பிள்ளை இல்லை. இதனை நினைத்தபொழுது எல்லாம் நாகமரும் அவர் மனைவியாரும் மனக்கவலை கொண்டனர்.

### மக்கட்பேற்றின் மாண்பு

குடும்பம் என்னும் தருவிற்குக் குழந்தையே கொழுங்கனியாகும். எத்துணைத் துன்பங்கள் இருப்பினும் அவை குழந்தையைக் கண்டதும் பகலவனைக் கண்ட பனிபோல அகல்கின்றன. குழந்தை தீய குணங்களால் பற்றப்படாது அன்று மலர்ந்த செந்தாமரை மலர் போன்ற இனிய முகத்தையும் புன் முறுவலையும் மாசற்ற மனத்தையும் கொண்டுள்ளது. தவழ் நடை பயின்றும், மழலைச் சொல் பழகியும், மனம் கரையச்சிரித்தும் பெற்றோர்க்குப் பேரின்பத்தை விளைக்கின்றது. ஆதலின் இல்வாழ்வார்க்குச் சிறந்த பேறு மக்கட்பேறே ஆகும். இச்செல்வத்தைப் பெருதவன் எப்பேற்றைப் பெற்று இருப்பினும் பெருதவனே ஆவன்.

> "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற"

என்னும் வள்ளுவர் வாக்கு உன்னற் பாலது.

குழந்தை தன் சிறு கையினல் அளாவியகூழ் அமிழ்தினும் இனிமை உடையது. குழந்தை தம் உடலைத் தீண்டலால் பெற்றோர் உடலுக்கு இன்பம் பெறுகின்றனர். அதன் மழலைச் சொற்களைக் கேட்டலால் செவிக்கின்பம் பெறுகின்றனர்.

அரசன் முதல் ஆண்டி ஈறுகவுள்ள அனைவரும் மக்களை விரும்புகின்றனர். மக்கட் பேற்றால் பெறும் இன்பம் அனைவர்க்கும் ஒரு படித்தாம். செல்வன்-இடம், பொருள், ஏவல் முதலியவற்றைப் பெற்றிருப்பினும் மக்கட் பேறு பெறவில்லை ஆயின், யாதும் பெறாதவனே ஆவன்.

"படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே." *

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு

துறவிகளும் பிள்ளைகளை விரும்புவார்கள். ஏசுநாதர், "பிள்ளை உள்ளம் படைத்தவரே இறைவன் அன்புக்கு உரியவராவர்" என்றனர். பிள்ளைகள் களங்கமற்ற உள்ளம் உடையவர்கள்; வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பவர்கள். களைத்து வீடு வந்து சேரும் தந்தைக்கு மகவின் கனி முகத்தைக் கண்டதும் களைப்புத் தீருகிறது. அவன் தானும் குழந்தைத் தன்மையை அடைந்து தன் குழந்தையுடன் ஆடுகிறான்; பாடுகிறான். குழந்தை தாயின் தனிமையைப் போக்குகிறது. அவள் அதனைத் தன் உயிர் எனக்கருதி அதன் நலத்திற்குப் பாடுபடுகிறாள்; தான் மருந்தருந்திக் குழந்தை நலத்தைக் கவனிக்கிறாள். இத் தகைய தியாக வுணர்ச்சியை அத் தாய்க்கு ஊட்டுவது குழந்தை. அஃது அவளுக்குத் தியாகத்தை அறிவுறுத் தும் ஆசிரியராக அமைகின்றது. இங்ஙனம் குழந்தை பல்லாற்றானும் பெற்றோர்க்கு இன்பத்தை உண்டாக்கு கின்றது. ஆதலின் குழந்தை இல்லாத இல்லம் உயிர் அற்ற உடல் போன்றிருக்கும். இந்த உண்மையை,

"பண்ணிலாப் பாடல் போலும் பரிவிலா நட்புப் போலும்
உண்ணிலா நெய்யி லாமல் உண்டிடும் அடிசில் போலும்

* புறநானூறு

பெண்ணிலா இல்லம்போலும் பெயரிலா வாழ்க்கைபோலும்
கண்ணிலா வதனம் போலும் கான்முளை இல்லா இல்லம்''*

என்ற சான்றோர் செய்யுள் உணர்த்தலைக் காண்க.

இந்த உண்மையை நன்கு உணர்ந்தே குந்தி தேவியின் கணவனை பாண்டு மன்னன் தனக்குப் பிள்ளைகள் இல்லையே என்று பெருங்கவலை கொண்டான். வாழ்க்கை இன்பத்துக்கு உரிய பிள்ளைகள் இல்லை எனின், வாழ்வில் ஒளியேது? உயிர் ஏது? பிள்ளை இல்லா வாழ்க்கை தாமரை அற்ற தடம் போலவும், மணம் இல்லாத மலரைப் போலவும், திங்கள் இல்லாத இரவைப் போலவும் இருக்குமே என்று எண்ணி எண்ணி மனம் புண்ணானன். "பிள்ளைகள் கல்லா மழலைச் சொற்களால் பெற்றோர் உள்ளத்தை உருக்குவர்; சந்திரனைப் பிடித்துத் தரச் சொல்லி அழுது பெற்றோரைத் தொடர்ந்து ஓடுவர்; பெற்றோர் புயத்தில் பாய்ந்தும் மடியில் அமர்ந்தும் விளையாடுவர்; தானம், ஈகை, தவம் முதலியவற்றைச் செய்தாலும் பெறுதற்கரிய இன்பம் பிள்ளைகளிடமிருந்து பெறலாம். பெற்றோரைத் தம் மலர் முகத்தால் நோக்கி இன்புறுத்தும் மக்கள் இல்லாத வாழ்வு பயன் அற்றதே!" என்று கூறி வருந்தினன்.

ஒவ்வொரு புலவரும் பிள்ளைப் பேற்றினை இடத்திற்கேற்பப் பாராட்டிப் பாடி இருப்பதைக் காணப் பிள்ளைப் பேற்றின் சிறப்பை நன்குணரலாம். நளவெண்பாவைப் பாடிய புகழேந்திப் புலவரும் இதனை விட்டிலர். 'நீ நின் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு தாய் வீடு செல்லுக,' என்று நளன் கூறியதைக் கேட்ட தமயந்தி, 'மக்களைப் பெற்றுக் கொள்ளுதல் எளிது. ஆயின் கற்புடைய மனைவி தன் கணவனைப் பெறுதல் இயலாது. ஆதலின் நான் உம்மைவிட்டுப் பிரியேன்'' என்றாள். அப்பொழுது நளன் அவளைப் பார்த்து, "பிள்ளைப் பேற்றினை எளிதாக நினையாதே.

---

* மாயூரத் தல புராணம்

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்(று)
என்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர் ?
சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாச் செவி"

என்று மக்கள் சிறப்பைப் பற்றி அறிவுறுத்தினன் என்று புகழேந்திப் புலவர் குறித்துள்ளது கவனிக்கத் தக்கது.

## நாகமர் முடிவு

இத்தகைய சிறப்புவாய்ந்த பிள்ளைப்பேறு இல்லையே என்ற மனக்குறை நாகமரையும் அவர் மனைவியாரையும் வாட்டத் தலைப்பட்டது. ஒரு நாள் பெரியார் ஒருவர் காசி யாத்திரை செய்துகொண்டு நாகமர் விடுதிக்கு வந்தார். நாகமர் துறவிகளை மதித்து நடந்துகொள்ளும் இயல்புடையவர். ஆதலால் அவர் அத்துறவியை வரவேற்று உண்பித்தார்; அவருடன் காசி முதலிய புண்ணிய ஸ்தலங்களைப் பற்றிப் பேசினர்; தமது மனக்குறையை அப்பெரியாரிடம் மனம் திறந்து உரைத்தார். பெரியவர் அவரை நோக்கி, "ஐயனே, நீங்கள் இருவரும் காசியாத்திரை செல்வது நல்லது. கங்கையில் மூழ்கிக் காசி விசுவநாதரை வேண்டி வரம் கிடத்தல் நல்லது. காசி விசுவநாதர் திருவருளால் உங்கட்கு ஆண்மகவு பிறக்கும்" என்று அருளிச் செய்தார். அப்பெரியவர் விடைபெற்றுச் சென்ற பிறகு, நாகமரும் அவர் ஆருயிர் மனைவியாரும் காசி யாத்திரை செய்வதென்று முடிவு செய்தனர்.

## காசியில் நாகமர்

நாகமரும் அவர் மனைவியாரும் தம் பரிவாரங்களுடன் காசியாத்திரை சென்றனர். அக்காலத்தில் காசியாத்திரை செய்வது எளிதன்று; போவதற்குப் பல மாதங்கள் ஆகும்; வருவதற்குப் பல மாதங்கள் பிடிக்கும்,

நாகமர் வழியில் உள்ள பல க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டே காசியை அடைந்தார்; நெடுங் காலமாகப் புண்ணிய நதி என்று கொண்டாடப்பட்டுவரும் கங்கை யாற்றில் மனைவியாருடன் நீராடினர்; காசி விசுவநாதர் திருக்கோவிலை வலம் வந்தார்; தம் மனக் குறையை அகற்றுமாறு அப்பெருமானை வணங்கினர்; இங்ஙனம் குறிப்பிட்ட சில நாட்கள் வரை இருந்து பூஜித்து விஜய நகரம் திரும்பினர்.

**விசுவநாதர்**

காசியாத்திரை நாகமர்க்குப் பலனை அளித்தது. எப்படி? யாத்திரை சென்று மீண்ட ஓராண்டு முடிந்ததும் நாகமர் மனைவியார் ஓர் ஆண் மகவைப் பெற்றார். துறவியார் கூற்றுப் பலித்தது என்பதை அறிந்த நாகமர் மகிழ்ந்தார்; காசி விசுவநாதர் அருளை எண்ணிக் களித்தார்; குழந்தை பிறந்த அன்று ஏழை எளியவர்க்கு ஆடைகளையும் உணவையும் வழங்கினர்; விசுவநாதர் அருளாற் பிறந்த ஆண் மகனுக்கு **விசுவநாதன்** என்றே பெயரிட்டு மகிழ்ந்தார்.

**விசுவநாதர் வளர்ப்பு**

நாகமர் தம் தவப்புதல்வரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்த்து வந்தார். அவர் மனைவியார் தம் செல்வ மைந்தரை மார்புமீதும் தொட்டிலும் கட்டில்மீதும் கிடத்தித் தூங்க வைத்தார்; மைந்தரது மலர் முகத்தைக் கண்டு அகமும் முகமும் மலர்வார்; அன்பு மேலீட்டால் முத்தங்களைச் சொரிவார். நாகமர் தமது அரசாங்க வேலையிலிருந்து வீடுவந்ததும் மைந்தரை எடுத்து மார்போடணைத்துக் கொஞ்சுவார். இங்ஙனம் பெற்றோர், கண்ணை இமைகள் காத்தல் போல விசுவநாதரைக் காத்து வளர்த்து வந்தனர். விசுவநாதர் ஐந்து வயதுடைய சிறுவர் ஆனர்.

**கல்விப் பயிற்சி**

உலகத்தில் அரசன் முதல் ஆண்டி இறுக அனைவரும் தேடிப் பெறவேண்டும் சிறந்த பொருள் கல்வி அல்லவா?

கல்வி இல்லாதவன் கண் இல்லாதவன்; வாழ்வு இல்லாதவன். செல்வம் பெற்றவன் கல்வி பெற்றிராவிடில், அச் செல்வத்தால் அடையத் தக்க பெரும்பயனை இழக்கிறான். அரசன் கல்வி அறிவு வாய்க்கப் பெறான் ஆயின், அவனது ஆட்சி, வாழ்க்கை முதலியன மணமற்ற மலரை ஒத்திருக்கும். அரசாங்க வேலை பார்ப்பவர்க்குக் கல்வியே வாழ்வின் அடிப்படையாகும். நாகமரைப்போன்ற மஹா மண்டலேசுவரர் வேலை பார்ப்பவருக்குச் சாதாரண கல்வியறிவுடன் அரசியல் கல்வி பெரிதும் வேண்டும். இவற்றை எல்லாம் நாகமர் எண்ணிப் பார்த்தார்; நல்ல தொரு நாளில் தம் தவப் புதல்வரைக் கல்வி கற்பிக்க விட்டார்.

விசுவநாதர் நுட்ப அறிவு வாய்க்கப் பெற்றவர். அவர் ஆசிரியர் கற்பித்த பாடங்களைச் செவ்வையாகப் படித்து அன்றாடம் ஒப்புவித்தார். எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் அல்லவா? அதனால் ஆசிரியர் அந்த இரண்டையும் தெளிவாகக் கற்பித்துவந்தார். சிறுவர் கல்வியிற் பெரிதும் ஆர்வம் கொண்டு செவ்வையாகப் படித்து வந்தார்; தெலுங்கு மொழியில் இருந்த சதகம் முதல் நன்னைய பட்டர் செய்த தெலுங்கு மஹாபாரதம் வரை கற்கத் தொடங்கினார்; கணிதத்திலும் சிறந்த புலமை பெறலானார்.

விசுவநாதர் பன்னிரண்டு வயதிற்குப் பிறகு கல்விப் பயிற்சியுடன் சிலம்பம், குத்துச் சண்டை, மற்போர், வாட்போர் முதலிய பயிற்சிகளையும் பெறலாயினார். சிறந்த வீரராகிய நாகமர் இப்போர்ப் பயிற்சிகளில் மிக்க கவனம் செலுத்தினார். தந்தையார் ஊக்கமளிக்கத் தனயனார் நாள் தோறும் அப்பயிற்சிகளில் கவனம் செலுத்தினார்; யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியவற்றிலும் பயிற்சி பெற்றார்.

### இராயரிடம் அடைப்பத் தொழில்

விசுவநாதர் பதினாறு வயதுடைய இளைஞர் ஆயினர். அப்போது அவர் தாய் மொழியில் வல்லவராகவும் கணி

தத்தில் திறமை மிக்கவராகவும் போர்ப் பயிற்சிகளில் பயிற்சி பெற்றவராகவும் விளங்கினர். அவரது சிவந்த மேனியும் நடுத்தர உயரமும் நல்ல உடற்கட்டும் பரந்த மார்பும் வசீகரிக்கத் தக்க கண்களும் கண்டவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. கிருஷ்ணதேவ ராயர் விசுவநாதரிடம் அன்புகொண்டார். இராயரது அன்பே தம் தவப்புதல்வரது வாழ்வை மேம்படுத்த வல்லது என்பதை உணர்ந்த நாகமர், விசுவநாதரை இராயரிடம் அடிக்கடி அனுப்பிவந்தார். இராயர் அவரைத் தம் அடைப்பக்காரராக * ஏற்றுக் கொண்டார்.

---

# 6. அரிய நாயகர்

### வேளாளர் குடும்பம்

காஞ்சிபுரத்தை அடுத்த மெய்ப்பேடு என்னும் சிற்றூரில் வேளாளர் பலர் வாழ்ந்து வந்தனர். அவருள் காளத்தியப்ப முதலியார் என்பவர் ஒருவர். அவர் சிறந்த சிவபக்தர்; காஞ்சி ஏகாம்பரேசுவரரைக் குலதெய்வமாகக் கொண்டவர். அவருக்கு மிகச் சிறிதளவு வயலும் ஒரு வீடும் இருந்தன. அதனுல் அவர் எளியவாழ்க்கை வாழ்ந்து வந்தார். எனினும், அவரும் அவர் மனைவியாரும் சிவ பக்தியிற் சிறிய நிலையில் இருந்தனர்; ஒழுக்கத்தில் மேம் பட்டு இருந்தனர். சிற்றூரில் காளத்தியப்ப முதலியாருக்கு மிக்க மதிப்புண்டு.

### அரிய நாயகர் பிறப்பு

காளத்தியப்பருக்குப் பல ஆண்டுகள் மக்கட் பேறு இல்லை. அவர் நாகம நாயக்கரைப் போல மனம் வருந்தி ஏகம்பனைத் துதித்து வந்தார். இறுதியில் அவருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. குழந்தை நல்ல நேரத்தில் நல்ல உடற்கட்டுடனும் கண்கவர்வனப்புடனும்பிறந்து பெற்றோரையும் தன்னைக்கண்டோரையும் மகிழ்வித்தது. 'இஃது உங்கட்குப் பிறக்கத் தக்க குழந்தை அன்று. இஃதோர்

* அரசர் அருகில் நின்று தாம்பூலம் முதலியன கொடுப்பவர்.

**அரிய நாயகம்** போன்றது' என்று குழந்தையைப் பார்த்த பெரியோர் பாராட்டிப் பேசினர். அதனுல் காளத்தியப்பர் குழந்தைக்கு **அரிய நாயகன்** என்றே பெயரிட்டனர்.

**நல்ல அறிகுறி**

பெற்ருேர் தம் தவக் குழந்தையைத் தம் உயிரினும் மேலாகக் கருதி வளர்த்து வந்தனர். அதனுல் அக்குழந்தை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வந்தது. ஒரு நாள் மாலையில் குழந்தை ஓர் ஆடை மீது படுத்து உறங்கிக்கொண்டு இருந்தது. தாயார் வெளியே நீர் முகந்துவரச் சென்றிருந்தார். தந்தையார் வெளியிற் போயிருந்தார். வீட்டில் ஒருவரும் இல்லை. அச்சமயத்தில் ஒரு மாநாகம் வீட்டிற்குள் நுழைந்தது; வீடு முழுவதும் சுற்றியது; பிறகு குழந்தை அருகில் வந்தது; அதன் தலையண்டைத் தன் படத்தை விரித்துக் கொண்டு குழந்தையைக் கூர்ந்து நோக்கியது.

அவ்வமயம் அம்மையார் உள்ளே வந்தார்; அரவத்தைக் கண்டு திடுக்கிட்டார்; ஆள் அரவம் கேட்டதும் படம் விரித்திருந்த அரவம் வெளிச் சென்று விட்டது. அம்மையார் ஒன்றும் தோன்ருது பட்ட மரம்போல் நின்றிருந்தார். அவ்வமயம் காளத்தியப்பர் உள்ளே வந்தார். அம்மையார் தாம் கண்ட காட்சியைக் கணவர்க்குக் கூறினுர். காளத்தியப்பர் கேட்டு வியப்புற்று, "பெண்ணே, இஃது ஒரு நற்குறி. அரிய நாயகன் வாழ்வு சிறக்கும் என்பதற்கு இஃதோர் நல்ல அறிகுறி. நாம் கவலைப்பட வேண்டுவதில்லை. எல்லாம் ஏகம்பன் திருவருள்" என்ருர். அம்மையார் கலக்கம் ஒழிந்து களிப்புக் கொண்டார்.

**கல்விப் பயிற்சி**

அரியநாயகர்க்கு ஐந்து வயது பிறந்துவிட்டது. அவரைப் படிப்பிக்க வேண்டும் அல்லவா? ஆசிரியர்க்குப் பணம் தரக் காளத்தியப்பர் இயலாதவராக இருந்தார்; "கல்வி ஒன்றே கருந்தனம். கல்வி உடையவரே உலகில் சிறப்புப் பெறுவர். மன்னனேவிடக் கற்றவனே சிறப்புடையவன் என்று நாம் படித்திருக்கிருேமே; நம்பிள்ளைக்

குக் கல்வி கற்பிக்கப் பணம் இல்லையே! ஏகம்பா, நீயே துணை" என்று எண்ணினார்.

அவரது எண்ணம் பழுதாகவில்லை. ஊர்க் கோவில் அர்ச்சகர் நம்பி என்பவர். அவர் காளத்தியப்பரிடம் மிக்க மதிப்புடையவர்; அவருடன் பல புராணங்களைப் பற்றியும் சாத்திரங்களைப் பற்றியும் பேசிக்கொண்டு இருப்பவர். அப்பெரியவர் அரியநாயகர்மீது அளவற்ற அன்புகொண்டார்; அவர் எதிர் காலத்தில் உயர்நிலையை அடையக் கூடும் என்று எண்ணினார். ஆதலால் அர்ச்சகர் தம் ஓய்வு நேரங்களில் அரிய நாயகர்க்கு இலவசமாகக் கல்வி கற்பிக்க இசைந்தார்.

அரிய நாயகர் விசுவநாதரைப்போல நுட்ப அறிவு பெற்றவர்; அதனால் நம்பி கற்பித்த பாடங்களை உடனுக்குடன் படித்து அவரை மகிழ்வித்தார்; அவரிடமும் அவரைப்போன்ற பெரியவர்களிடமும் காளத்தியப்பரைப் போலவே மிக்க மரியாதையுடன் நடந்துவந்தார். அரிய நாயகர் பலவகைத் தமிழ் நூல்களையும் முறையாகப் பாடம் கேட்டார்; கணிதத்தில் இணையற்று விளங்கினார்.

**உடற்பயிற்சியும் போர்ப்பயிற்சியும்**

மெய்ப்பேட்டில் உடற்பயிற்சிக் கூடம் ஒன்று இருந்தது. அங்கு ஒருவர் ஊர்ப்பிள்ளைகட்குக் குஸ்தி, குத்துச் சண்டை, மற்போர், வாட்போர் முதலிய பலவகைப் பயிற்சிகளைக் கற்பித்து வந்தார். அரிய நாயகர் பன்னிரண்டு வயதுடைய சிறுவரான பிறகு அந்தப் பயிற்சிக் கூடத்திற் சேர்ந்தார்; பலவிதப் பயிற்சிகளைச் செய்யலானார். அவரது உடல் வளம் பெற்றது. அவர் நான்கு ஆண்டுகட்குள் போர்ப்பயிற்சிகளிலும் வல்லவர் ஆனார்; ஊர்ப் பிள்ளைகளில் 'முதல்வர்' என்ற பெயர் பெற்றார். அரிய நாயகர் பதினாறு வயதிற்குள் அக்காலத் தமிழ்க் கல்வியில் சிறந்த அறிவு பெற்றிருந்தார்; போர்ப் பயிற்சிகளிலும் இணையற்றவராக இலங்கினார்; ஒழுக்கத்திலும் கடவுள் பக்தியிலும் உயர்வு பெற்றிருந்தார். அவரை ஊரார் பாராட்டினர்.

**சோதிடர் வருவது உரைத்தல்**

ஒரு நாள் மாலை அரிய நாயகர் ஊர்ப்பிள்ளைகளுடன் ஒரு வெளியில் குஸ்தி, குத்துச்சண்டை, சிலம்பம் முதலிய பயிற்சிகளைச் செய்துவந்தார். அப்பொழுது அவ்வழியே முதியவர் ஒருவர் வந்தார். அவர் பிள்ளைகள் பயிற்சிகளைக் கூர்ந்து கவனித்தார். அவரது கவனம் அரிய நாயகர்மீது சென்றது. அவர் அரிய நாயகர் எல்லாப் பிள்ளைகளிலும் மேம்பட்டு விளங்குதலைக் கண்டார்; மெல்ல அரிய நாயகரை அணுகி, "தம்பீ, உன் கைவண்ணம் கண்டு மகிழ்ந்தேன்; உனது கைரேகை வண்ணத்தைக் காண விரும்புகிறேன்; உனது கையைக் காட்டு" என்றார்.

அரிய நாயகர் அப்பெரியவருக்கு வந்தனம் அளித்து மிக்க நாணத்துடன் கையைக் காட்டினார். பெரியவரான சோதிடர் கையைப் பார்த்தவுடன் வியப்புற்றார். அவரது வியப்பு நொடிக்கு நொடி அதிகப்பட்டது. அரிய நாயகர் சோதிடர் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். பிள்ளைகள் அனைவரும் அமைதியாக நின்றிருந்தனர். பெரியவர் சிறிது நேரம் பொறுத்து அரிய நாயகரை அன்புடன் பார்த்து, "அப்பனே, உனக்கு அரசயோகம் விரைவில் வரும். நீ பேரரசர் மதிப்பைப் பெறுவாய்; அவரிடம் பல உயர் பதவிகளைப் பெறுவாய்; நாடு மதிக்க நற்பெயர் பெறுவாய்; போக பாக்கியங்களை அநுபவிப்பாய். என் சோதிடம் தவறாது. நீ நான் கூறியவாறு உயர்நிலையில் இருக்கும்பொழுது நானோ என்னைச் சேர்ந்தவரோ உன்னிடம் வரின், நீ என்ன தருவாய்?" என்றார்.

அரிய நாயகர் அகமகிழ்ச்சியுடன், "ஐயன்மீர், தாங்கள் கூறுமாறு யாவும் நடைபெறின் தாங்கள் கேட்பதைத் தருவேன்" என்றார். சோதிடர், "தம்பீ, எல்லோரும் முதலில் இப்படித்தான் சொல்வது வழக்கம். செல்வம் வந்த பிறகு சொன்னபடி நடப்பதில்லை," என்றார். உடனே அரிய நாயகர், "பெரியீர், நான் வேளாளன். சொன்ன சொல் தவறுதல் எங்கள் மரபுக்கே மாறுபட்டது. தாங்கள் என் வாக்குறுதியை நம்பலாம்"

என்று அழுத்தமாகத் தெரிவித்தார். சோதிடர் மகிழ்ந்து, "அப்பனே, இந்தப் பனை ஓலையில் நான் சொல்லுமாறு எழுதிக் கொடு, என்று ஓர் ஓலையையும் எழுத்தாணியை யும் கொடுத்தார்; 'மெய்ப்பேட்டு அரிய நாயகனை நான் சோதிடர் கூறினாற்போலச் செல்வநிலையில் இருக்கும் பொழுது இந்த ஓலையை என்னிடம் காட்டுபவர்க்கு என் சம்பத்தில் காற்பகுதியைத் தருவேன்' என்று எழுதுக" என்றார். அரிய நாயகர் அங்ஙனமே எழுதிக் கொடுத்தார்.

### சோதிடர் யோசனை

சோதிடர் மகிழ்ச்சியுடன் ஓலையைப் பெற்றுக் கொண்டு அரிய நாயகரைப் பார்த்து, "அப்பனே, என் சொற்படி செய். நீ உடனே விஜயநகரம் செல்; விஜய நகரப் பேரரசரிடம் வேலையில் அமர முயற்சி செய்; படிப் படியாக உயர்வைப் பெறலாம். என் சோதிடம் ஒரு போதும் தவறாது. நீ எழுதிக் கொடுத்தபடி நடப்பாயாக. ஏகம்பன் உன்னை வாழ்விப்பானாக!" என்று கூறி ஆசீர் வதித்தார்.

### பிள்ளைகள் குறும்பு

அப்பொழுது அரிய நாயகர், "ஐயன்மீர், தங்கள் பெயர் ஊர் முதலியன எனக்குத் தெரிவிக்கவில்லையே!" என்றார். பெரியவர், "அவை உனக்கு எதற்காக? இந்த ஓலையைக் காட்டுபவரிடம், நீ வாக்களித்தபடி நடக்க வேண்டுவதுதானே!" என்று பதில் அளித்தார்; உடனே பக்கத்தில் இருந்த பிள்ளைகளில் ஒருவன், "சோதிடம் பொய்க்குமாயின் தம்மைப் பரிகசிப்பரே என்ற அச்சத் தாற்றான் பெரியவர் ஊரும் பெயரும் உரைக்க நாணுகிறார்" என்றான். வேறு ஓர் இளைஞன் பெரியவரைப் பார்த்து, "ஐயா, சோதிடம் பலித்தால் அரிய நாயகரது சம்பத்தில் கால் பகுதி வேண்டும் என்று கேட்கிறீர்; சோதிடம் பொய்க்குமாயின், நீர் என்ன தருவீர்?" என்று கேட் டான். பெரியவர் நகைத்து, "என் சோதிடம் பொய்க் காது. நான் வறியவன். சோதிடம் பொய்க்குமாயின் எனது வறுமை முழுவதையுமே தரக் காத்திருக்கிறேன்'

என்று பதில் மொழிந்தார். பிறகு அவர் அரிய நாயக ரைப் பார்த்து, "தம்பீ, நான் விடைபெறுகிறேன். நீ சுக மாக வாழ்வாய்" என்று கூறி ஆசீர்வதித்துச்சென்றார்.

**பெற்றோர் கவலை**

சோதிடர் கூற்றை அரிய நாயகர் தம் பெற்றோரிடம் கூறினார். பெற்றோர் அவரைப் பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள விஜயநகரத்துக்கு அனுப்ப விரும்ப வில்லை; "அப்பனே, உன்னைத் தவம் கிடந்து பெற் றோம்; உயிர்போலக் கருதி உன்னை வளர்த்து வருகின் றோம்; உன்னை விட்டுப் பிரிந்து வாழோம்" என்று கூறி வருந்தினர். அரிய நாயகர் அறிவுள்ளவர்; உலகியலை அறிந்தவர்; பெற்றோர் உள்ளத்தை மாற்றி விடைபெற் றுச் செல்லலாம் என்று நம்பினர். விஜயநகரம் செல்வ தாயின், அங்கு வேலை பார்ப்பதாயின், தெலுங்கு மொழிப் பயிற்சி வேண்டும் என்பதை அறிந்தவர். அதனால் அவர் சில நாட்களில் முயன்று தெலுங்கிற் பேசவும் எழுதவும் ஓரளவு பயிற்சி பெற்றார்.

**பிள்ளையின் உருக்கமான பேச்சு**

ஒருநாள் அரிய நாயகர் தம் பெற்றோரைப் பார்த்து, "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்று அறிவுரை கூறியவர் நம் தமிழர். தமிழர் பொருள் ஈட்டுதற் பொருட் டுப் பல நாடுகட்கும் சென்றனர். இப்பொழுதும் சென்று வருகின்றனர். இதனை நீங்களும் அறிவீர்கள். நான் கடல் கடந்து போகவில்லை. நமது பேரரசர் தலைநகர்க்கே செல்ல விழைகின்றேன். நான் நலம் பெறுவதால் நமது குடும்பம் நல்ல நிலையை அடையும் அல்லவா? நான் உங் களுடனே இந்தக் கிராமத்தில் இருப்பதால் வாழ்க் கையோ உங்கள் நிலைமையோ எவ்வாறு உயர்வைப் பெறும்? யோசித்து, என்னை ஆசீர்வதித்து அனுப்புங் கள்" என்று கூறி வேண்டினர்.

**பிரியா விடை**

பெற்றோர் தம் தவப் புதல்வரது உருக்கமான பேச் சைக் கேட்டனர்; உள்ளம் கரைந்தனர்; கண் கலங்கினர்;

பிறகு ஒருவாறு தேறி அவரை அனுப்பத் துணிந்தனர்; அரிய நாயகர் ஆசிரியரான அர்ச்சகரும் பெற்றோர்க்கு ஆறுதல் கூறினர். அரிய நாயகர் அந்த மூவரையும் பணிந்து விடைபெற்று மெய்ப்பேட்டை விட்டுப் புறப்பட்டார்.

### வழிநடைப் பயணம்

அரிய நாயகர் பதினாறு வயதுடைய இளைஞர். அவர் ஒரு நாளைக்குப் போதிய உணவையும் வழிச் செலவுக்குக் குறைந்த அளவு பணத்தையும் கொண்டு புறப்பட்டார். பாவம்! அவர் கால் நடையாகவே விஜயநகரம் செல்ல வேண்டியவர் ஆனார். அவர் வழியில் உணவின்றித் தவிக்க நேர்ந்த நாட்கள் பல; படுத்துறங்கிய சத்திரங்கள் பல; வழியில் பிரயாணிகள் பலருடன் நட்புக்கொண்டு அவர்கள் உதவி பெற்றுப் பல நாள் நடந்து முடிவில் 'போக பூமி' என்று புகழ்பெற்ற விஜயநகரத்தை அடைந்தார்.

### நாகம நாயக்கரிடம் கணக்கப் பிள்ளை

காஞ்சீபுரம் உள்ளிட்ட தமிழகத்து மஹா மண்டலேசுவரர் நாகம நாயக்கர் என்பதை அரிய நாயகர் அறிந்திருந்தார்; ஆதலால் விசாரித்துக்கொண்டு நாகமர் மாளிகைக்குச் சென்றார். நாகமர் காஞ்சீபுரத்திற் பிறந்தவர் அல்லவா? அவர், அரிய நாயகர் காஞ்சீபுரத்திற்குப் பக்கத்து ஊரில் இருந்து வந்தவர் என்பதைக் கேட்டவுடன் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்; இளைஞரது வரலாற்றைக்கேட்டு இரக்கம் கொண்டார்; அவரது கல்வி அறிவைச் சோதித்து மகிழ்ந்தார்; தம்மிடமே கணக்கப் பிள்ளையாக இருக்குமாறு செய்தார்.

# 7. அரியநாதரும் விசுவநாதரும்

## உணர்ச்சி ஒத்த நண்பர்கள்

அரியநாயகர் நாகமரிடம் கணக்கப் பிள்ளையாக அமர்ந்தது முதல் அவருடைய அடக்கம், பணிவு, நன்னடக்கை, கல்வியறிவு, கணிதப் புலமை, பக்தி முதலியவற்றைக் கண்ட விசுவநாதர் அவர்மீது அன்பு கொண்டார்; அரிய நாயகர் போர்ப் பயிற்சிகளிலும் சிறந்தவர் என்பதை அறிந்ததும் அவர்மீது அளவற்ற அன்புகொண்டார். இருவரும் உள்ளம் ஒத்த உயிர் நண்பர் ஆயினர். பல நலங்களிற் சிறந்த அரிய நாயகருடன் தம் மைந்தர் பழகுவதைக் கண்ட பெற்றோர் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். அரிய நாயகர் கணிதப் புலமையை அறிந்த நாகமர் அவரைத் தம் தலைமைக் கணக்கராக நியமித்தார். விசுதநாதர்-அரிய நாயகர் நட்பின் முதிர்ச்சியைக் கண்ட நாகமரும் அவர் மனைவியாரும் தம் மைந்தர் பெயரோடு பொருத்தி அரிய நாயகரை அறிய **நாதர்** என்று அழைக்கலாயினர் போலும்! அவர் விஜயநகரத்தில் **அரியநாதர்** என்றே வழங்கப் பெற்றார்.

## இராயர் அறிமுகம்

விசுவநாதர் இராயரிடம் அடைப்பத் தொழில் செய்திருந்தார் அல்லவா? அவர் இராயர் தனித்திருந்த சமயத்தில் ஒரு நாள் அரிய நாயகரைப் பற்றி அவரிடம் கூறினர்; மறு நாள் அரிய நாயகரை இராயர்க்கு அறிமுகம் செய்துவைத்தார். இராயர் அரிய நாயகருடைய உடற்கட்டு, முகப்பொலிவு, அடக்கம் முதலியவற்றைக் கவனித்து அன்புகொண்டார். அன்று முதல் அரிய நாயகர் விசுவநாதருடன் அடிக்கடி அரண்மனைக்குப் போவதை வழக்கமாகக் கொண்டார்.

## இராயர் கேள்வி

ஒரு நாள் அரசர் அவையில் அரச காரியங்கள் முடிந்த பிறகு, இராயர் அவையிற் கூடியிருந்த நாகமர் முதலிய பிரபுக்களுடனும் தளகர்த்தர்களுடனும் அளவளாவிக் கொண்டு இருந்தனர். அப்பொழுது அவர், “இன்று காலை

நாம் அரண்மனைக் குளத்தில் நீராடச் சென்றோம். அழகிய தாமரை மொட்டு ஒன்று காணப்பட்டது. அதன் உயரம் முக்கால் சாண் இருக்கும். தாள் முழுவதும் நீர்க்குள்ளும் மொட்டு நீருக்குமேலும் இருந்தது. நாம் குளத்தில் குதித்த அதிர்ச்சியால் அந்த மொட்டுச் சிறிது தூரம் பின் சென்றது. அஃது அப்படிச் சென்ற தூரம் மூன்றே முக்கால் சாண் என்னலாம் அப்பொழுது அதன் தலையும் நீர் மட்டத்துக்குச் சமமாக நீர்க்குள் மறைந்து விட்டது. அது முதலில் நின்ற இடத்தில் குளத்தின் ஆழம் என்ன?" என்று கேட்டார்.

### அவையோர் தடுமாற்றம்

விசுவநாதர் உட்பட அவையில் இருந்தவர்க்கு அக் கணக்குப் புரியவில்லை. சிலர், "நாங்கள் போய்க் குளத்தின் ஆழத்தைக் கண்டு வருவோம்" என்றனர். சிலர், "அங்குள்ள தாமரைத் தண்டினை அளந்து வருவோம்" என்றனர். அவர்கள் பேச்சைக் கேட்டு இராயர் கலகல என்று நகைத்தார்.

### அரியநாதர்

அவையில் ஒரு தூணைப்பற்றி நின்றுகொண்டிருந்த அரியநாதர், இராயரைப் பணிந்து, "தாங்கள் அனுமதியளிப்பின் அடியேன் விடை கூறுவேன்" என்றார். அவையினர் அனைவரும் வியப்புடன் அவரைக் கூர்ந்து நோக்கினர். இராயர், "யார் அது? அரியநாதனா? வா, வந்து சொல்" என்று பணித்தனர். அரியநாதர் அரியணையின் அருகிற்சென்று இராயரை வணங்கி மிக்க மரியாதையுடன் நின்று, "தாங்கள் கூறிய இடத்தில் குளத்தின் ஆழம், அஃதாவது தாமரைத் தண்டின் நீளம்—தங்கள் அருகில் நிற்கும் விசுவநாதர் உயரமேதான்" என்றனர்.

அரசர் உடனே விசுவநாதரைப் பார்த்து, "விசுவா, உன் உயரம் என்ன?" என்று ஆவலோடு கேட்டார். விசுவநாதர் "ஒன்பது சாண்" என்றார்.

இதனைக் கேட்ட கணித சாஸ்திரி ஒருவர் கணக்குப் பார்த்து, "விடை சரிதான்" என்றார். இராயர் எவற்படி

ஒருவர் குளத்திற்குச் சென்று குளத்தின் ஆழத்தை அறிந்துவந்து ஒன்பது சாண் என்று கூறினர். இராயர் மிக்க மகிழ்ச்சி அடைந்து, "அரியநாதா, உன் கணக்குச் சரி. நீ விசுவநாதன் உயரத்தை எப்படி அறிந்தாய்?" என்று கேட்டார். அரியநாதர் இராயரைப் பணிந்து, "அடியேன் உயரம் எட்டரைச் சாண். விசுவநாதர் அடியேனைவிட அரைச் சாண் அதிக உயரம் இருப்பார். கண் அளவாததா கை அளக்கும்?" என்று பதில் அளித்தார்.

இராயர் பெரு மகிழ்ச்சி அடைந்து அரிய நாதரை அரண்மனைக் கணக்கராக அமர்த்திக்கொண்டார்; அது முதல் விசுவநாதரும் அரியநாதரும் நெருங்கிப் பழக அதிக வாய்ப்புக் கிடைத்தது.

### நவராத்திரி விழா

விஜயநகரத்தில் ஆண்டுதோறும் நவராத்திரி விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவின் முடிவில் வழக்கம் போலக் காட்டு எருமை ஒன்றைப் பிடித்து வந்து காளிதேவிக்குப் பலியிடுதல் வழக்கம். அப்பலியுடன் விழா முற்றுப்பெறும். பலியிடப்படும் எருமை ஒரே வெட்டில் மடியவேண்டும்; தவறினல் அப்பிழை நாட்டுக்கே கேட்டை விளைக்கும் என்பது அக்காலத்தார் நம்பிக்கை.

### இராயர் மனக்கவலை

அரியநாதர் அரண்மனைச் சேவகரான ஆண்டில் நவராத்திரிக் கடைநாளன்று இராயர் தம் பிரபுக்களுடனும் பரிவாரங்களுடனும் காளி கோவிலுக்குச் சென்றார். அப்பொழுது பலிக்காகப் பிடித்துக்கொண்டு வரப்பட்ட எருமை மிகப் பெரியது; கொழுத்தது; மூர்க்கமுள்ளது. அதன் கொம்புகள் வரிஞ்சல் பிடித்தாற்போல முதுகின் இருபுறமும் வால்வரை நீண்டு இருந்தன. கொம்புகள் கழுத்தைக் காத்து அதன்மேலாக இருந்தமையால், கொம்புகளையும் கழுத்தையும் சேர்த்து வாளால் ஒரே வெட்டில் வெட்டித் துணிப்பது இயலாது. ஆனல் மீண்டும் காடுசென்று வேறு ஓர் எருமையைப் பிடித்துக் கொண்டு

வரவும் போதிய நேரம் இல்லை. அதனால் இராயர் மனக் கவலை கொண்டார்.

**அரியநாதர் யோசனை**

அரியநாதர் விசுவநாதருடன் அங்குச் சென்றார். அவர் இராயர் மனக் கலக்கத்தைக் கண்டார்; பலி எருமையைக் கூர்ந்து கவனித்தார்; பிறகு அவ்வெருமையை எப்படி நிற்கவைத்து, கழுத்திலே எந்தப் பொருத்து வாயில் வெட்டினால் கொம்புகளைத் தவிர்த்து ஒரே வெட்டில் துணித்துவிடக்கூடும் என்பதை ஆராய்ந்து கூறினார்.

அவர் யோசனைப்படி, பலிபீடத்தின் அருகில் ஒரு சிறிய குழிதோண்டி அதில் பசும்புல் வைக்கப்பட்டது. கால்களின் இடையில் குழி இருக்கும்படி எருமை நிறுத்தப்பட்டது. எருமை புல்லை தின்னும் ஆசையால் தன் கழுத்தை நன்கு வளைத்துக் குனிந்து குழிக்குள் தலையிட்டுப் புல்லைத் தின்னத் தொடங்கியது அப்பொழுது அதன் கொம்புகள் வேறாக விலகி நிமிர்ந்து நின்றன. அப்பொழுது வாள் பயிற்சியில் சிறந்தவரான விசுவநாதர் வாளை எடுத்து வெட்டினார். உடனே தலைவேறு உடல் வேறாயின. எருமைப்பலி நன்கு நிறைவேறியது கண்ட இராயர் அரியநாதரையும் விசுவநாதரையும் பாராட்டி மகிழ்ந்தார். அரியநாதர் அன்று முதல் அரசாங்கக் கணக்கராக நியமனம் பெற்றார்.

**மற்போர்**

இராயர் விசுவநாதரையும் அரியநாதரையும் தம் இரு கண்கள் எனக் கவனித்துவந்தார். அந்த இருவரிடத்தும் பிரபுக்களும் மற்ற அரசாங்க அலுவலாளரும் மிக்க அன்பு கொண்டிருந்தனர். ஒருநாள் இராயர் அவைக்கு மற்போர் வீரன் வந்தான். அவன் இராயரைப் பணிந்து, “பெருமானே, நான் வடநாட்டு அரசர் அனைவரையும் சென்று கண்டேன்; அவரவர் அவையில் இருந்த மற்போர் வீரரை வென்றேன்; பல விருதுகளைப் பெற்று இங்கு வந்திருக்கிறேன். தங்கள் பேரவையில் உள்ள மல்லருடன் மற்போர் புரிய விரும்புகிறேன்” என்று

கூறித் தான் பிற அரசர்பால் பெற்ற விருதுகளையும் பரிசுகளையும் இராயர்க்கும் அவையினர்க்கும் காட்டினன்.

**இராயர் கவலை**

அவையில் தளவாய்களும் வீரர்களும் இருந்தனர். ஆயினும் ஒருவரேனும் அவ்வீரனுடன் மற் போர் புரிய வரவில்லை. இராயர் முகம் மாறுபட்டது. "இம் மல்லனுடன் மற்போர் புரிபவர் நமது பேரவையில் ஒருவருமே இல்லையா?" என்று கேட்க வாயைத் திறந்தார்; இராயரது குறிப்பை உணர்ந்த அரியநாதர் "அடியேன் இருக்கிறேன்" என்று எழுந்து பணிந்தார். இராயர் முகம் மலர்ந்தது. அரியநாதர் போர்த்திறத்தை இராயர் அறியார்; ஆயினும் அருகில் இருந்த விசுவநாதர் அவரது திறமையைப் பாராட்டிக் கூற, இராயர் அவரை மற்போர் புரிய விடையளித்தார்.

**தளவாய்ப் பதவி**

அரியநாதர் மற்போர் வீரனுக்கு உரிய உடை அணிந்து புறப்பட்டார். புதிய மல்லன் அரியநாதரை வர வேற்றுக் கை நீட்டினன். இருவரும் சிறிது நேரம் விளையாடினர். பின்னர் மல்லன் அரியநாதரைத் தூக்கிப் போட எண்ணிக் குனிந்தான். அவன்து எண்ணத்தை உணர்ந்த அரியநாதர் அவன் கையைப்பற்றிக் கரகர என்று இழுத்து அவனைக் காற்றாடி போலச் சுற்றினர்; மாறி மாறி அவனுடைய முகத்திலும் மார்பிலும் தோளிலும் தாளிலும் குத்தினர்; தமது தலையைக் கொண்டு அவன் தலையைப் படீரென மோதினர்; அவனைத் தூக்கித் தரையில் வீழ்த்தினர். அவையோர் ஆரவாரம் செய்தனர். இராயர் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. அவர் தோற்ற மல்லனுக்குப் பரிசுகள் தந்து அனுப்பினர்; அரியநாதரைப் பாராட்டி வீரக்கழலும் வெற்றி வாளும் பரிசளித்தார்; அன்றுமுதல் அவரை விஜயநகரப் படைத் தலைவருள் ஒருவராக (**தளவாயாக**) நியமித்தார். தம் ஆருயிர்த் தோழரான அரியநாதர் தளவாய்ப் பதவி பெற்றது கண்டு விசுவநாதர் கொண்ட மகிழ்ச்சிக்கு

எல்லை இல்லை. நண்பர் இருவரும் உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாக வாழ்ந்து வந்தனர்.

### இராயர்க்கு நோய்

இங்ஙனம் விசுவநாதரும் அரியநாதரும் இராயர் அன்புக்கு உரியவராக வாழ்ந்து வருகையில், இராயர்க்குத் திடீரென நோய் கண்டது. அரண்மனை மருத்துவர் மருந்து கொடுத்தும் நோய் தீரவில்லை. சோதிடர் கலக்கம் அடைந்தனர். அந்தப்புர மாதர் துயர்க்கடலில் மூழ்கினர். அப்பொழுது விசுவநாதர் அரியநாதரை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றார்; இராயரது ஜாதகத்தைப் பார்க்கச் சொன்னார். அரியநாதர் சோதிடப் பயிற்சி பெற்றவர். அதனால் அவர் இராயரது ஜாதகத்தை நுட்பமாக ஆராய்ந்து, "இராயர் சில நாட்களில் குணம் அடைவார்; பெரும் போரில் வெற்றி பெறுவார்" என்றனர். அவர் கூறியவாறே சில நாட்களில் இராயர் உடல் நலம் பெற்றார்.

### இராயச்சூர்ப் போர்

கிருஷ்ணதேவ ராயர், பீஜப்பூர்ச் சுல்தானிடம் சிக்கிக்கொண்ட இராயச்சூர் முதலிய இடங்களைக் கைப்பற்றுவதற்காகத் தம் தந்தையார்க்கு வாக்களித்திருந்தார் அல்லவா? அந்த எண்ணம் இராயர்க்குத் தோன்றியது. அவர் பெரும் படையைக் கொண்டு வடக்கு நோக்கிப் புறப்பட்டார். விசுவநாதரும் தளவாய் அரியநாதரும் தத்தம் படைகளுடன் இராயரைப் பின்பற்றினர்.

இராயச்சூர்க்கு அருகில் இருதிறத்துப் படைகளும் கைகலந்தன. போர் கடுமையாக நடந்தது. கிருஷ்ண தேவ ராயரது ஊக்கத்தினால் வீரர் வெற்றி பெற்றனர். சுல்தான் படை சிறியது. அச்சமயம் அப்படைத்தலைவருள் ஒருவன் முதுகு காட்டி ஓடுவதாகப் போக்குக் காட்டிப் பின்புறம் வந்து திடீரென விஜயநகர வீரரைத் தாக்கினான். அவன் தாக்கிய இடத்திற்கு அருகில் இராயர் நின்று, போர் நடைபெறுவதைக் கவனித்துக்கொண்டு நின்றார்.

**அமைச்சர் பதவி**

இந்த ஆபத்தான நிலையை அரியநாதர் கவனித்தார்; உடனே தம் படையுடன் இராயர்க்கும் எதிரிக்கும் இடைப்பட்ட இடத்திற்கு விரைந்து நின்றார்; பகைவனையும் அவன் வீரரையும் தாக்கினார். இராயர் அப்பொழுது தான் தமக்கு வர இருந்த ஆபத்தை உணர்ந்தார். அவ்வளவில் அரியநாதர் அப்படைத் தலைவனைக் கைதியாக்கி இராயர்முன் கொணர்ந்து நிறுத்தினர். இராயர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து அரியநாதரை வாழ்த்தித் தம் அமைச்சருள் ஒருவராக ஆக்கிக்கொண்டார். இப்போர் நடந்த காலம் கி. பி. 1520, மே மாதம் ஆகும்.

சுல்தான் படையைச் சிதற அடித்து வெற்றி பெற்ற தளகர்த்தர்கட்கு இராயர் பலவகைப் பரிசுகளை நல்கினர்; யாவருக்கும் பெருஞ்சோறு வழங்கி வாழ்த்துரை கூறினர்.

---

# 8. உண்மையுள்ள அரச ஊழியர்

**சோழ - பாண்டியர்**

விஜயநகரப் பேரரசில் சோழ நாட்டைச் சோழ அரசனும் பாண்டிய நாட்டைப் பாண்டியனும் அரசாண்டு வந்தனர் என்பது முன்னரே கூறப்பட்டதன்றோ? கிருஷ்ண தேவராயர் காலத்தில் சோழநாட்டை **வீரசேகரன்** என்பவன் அரசாண்டு வந்தான்; பாண்டிய நாட்டில் **சந்திரசேகரன்** என்பவன் அரசு செலுத்தி வந்தான். இந்த இருவருக்குள் எக்காரணத்தாலோ பகைமை உண்டானது. அதனல் வீரசேகரன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான். சந்திரசேகரன் ஆண்மை போதாதவன். அதனல் அவன் போரில் தோற்றுச் சோழன் கையில் அகப்படாது தப்பி விஜயநகரம் நோக்கி ஓடினன். சோழன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். பேரரசைச் சேர்ந்தவரும் சோழ - பாண்டிய நாடுகளை மேற்பார்த்து வந்தவரும் எக்காரணத்தாலோ இப்போராட்டத்தில் தலையிடவில்லை.

### பாண்டியன் முறையீடு

பாண்டியன் விஜயநகரம் சென்று இராயரைக் காண அவதிப்பட்டான். சோழன் பணத்தை வாரி இறைத்து மேலதிகாரிகளைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டான். பாண்டியன் இறுதியில் அரியநாதரைச் சரண் அடைந்தான். அவர் அமயம் பார்த்துப் பாண்டியனை இராயர்க்கு அறிமுகம் செய்துவைத்தார். பாண்டியன் முறையீட்டைக் கேட்ட இராயர் மனம் வருந்தினர்; தமது அரசியலில் இத்தகைய கேடு நடந்ததைப் பற்றிக் கவலைப்பட்டார்; தம் மாகாண அதிகாரிகள் இதைப் பற்றிக் கவனியாது விட்டதற்காக வெகுண்டார்.

### இராயர் ஆணை

மறுநாள் இராயர், சபையில் பாண்டியனை நிற்க வைத்து நடந்ததைக் கூறுமாறு பணித்தார். அவன் கூற்றைக் கேட்ட சபையோர் திடுக்கிட்டனர். இராயர் கடுங்கோபம் கொண்டார். அவர் தக்ஷிண மஹா மண்டலேசுவரரான நாகம நாயக்கரைப் பார்த்து, "நமது ஆட்சியில் இந்த அக்கிரமம் நடைபெறலாகுமா? நாகமரே, நீர் உடனே தக்க படையுடன் சென்று அச் சோழனைப் போரில் தோற்கடித்துப் பாண்டியனைப் பழையபடி அரசன் ஆக்குக. நாளையே பெரும்படையுடன் புறப்படுக" என்று பணித்தார்.

### நாகமர் வெற்றி

நாகம நாயக்கர் பேரரசர் ஆணையைத் தம் முடிமீது தாங்கிப் பெரும்படையுடன் மதுரை நோக்கிச் சென்றார்; பாண்டியனும் உடன் சென்றான். நாமகர் சோழ வேந்தனைப் போரில் முறியடித்துப் பாண்டிய நாட்டைக் கைப் பற்றினர்; சந்திரசேகரனைப் பழையபடி அரசனாக்க விரும்பினர். பாண்டியன் நாகமரை நயமாகப் பார்த்து, "பாண்டிய நாடு அடக்க முடியாத நிலையில் இருக்கிறது. பல கிராமங்களிலிருந்து சரியாக வரிப்பணம் வருவதில்லை. அதனால் நாட்டை நீங்களே ஆண்டு வரலாம்; எனக்குத் தக்கவாறு மாதந்தோறும் கௌரவச் சம்பளம் கொடுத்

தால் சாலும்" என்றான். நாகமர் அதற்கு உடன்பட்டார்.

**நாகமர் ஆட்சி**

வயது முதிர்ந்த நாகமர் பாண்டிய நாட்டை அமைதிப்படுத்த அரும்பாடுபட்டார்; அடங்காப் பிடாரிகளான சிற்றரசர் பலருடன் போரிட்டு அடக்கினர்; பாண்டிய நாட்டில் பாழாய்க் கிடந்த கோவில்களைப் புதுப்பித்தார்; பல கால்வாய்களை வெட்டி நீர்ப்பாசன வசதிகளைச் செய்தார்; பாண்டியனுக்கு மாதந்தோறும் பணம் கொடுத்து வந்தார்; பாண்டிய நாட்டுக் குடிகள் நாகமரை வாழ்த்தினர்.

**பாண்டியன இரண்டாம் முறையீடு**

தான் ஆண்ட பாண்டிய நாடு அமைதி குலையாது ஒழுங்கானதைக் கண்டதும் பாண்டியனுக்கு நாகமர்மீது பொறாமை ஏற்பட்டது. அவன் அவர் கொடுத்து வந்த உபகாரச் சம்பளம் தனக்குப் போதாது என்றும், அதனால் தான் நாகமருக்குக் கொடுத்த வாக்குறுதி இனிச் செல்லாதென்றும் கூறினன். நாகமர் அவன் முறையீட்டைப் பொருட்படுத்தவில்லை. அதனால் பாண்டியன் மீண்டும் விஜய நகரத்திற்கு வந்தான்; இராயரைக் கண்டு பணிந்து, "நாகமர் சோழனை வென்றார்; ஆனால் பாண்டியநாட்டை என்னிடம் ஒப்படைக்கவில்லை; தாமே அரசராக இருந்து வருகிறார்" என்று முறையிட்டான்.

**இராயர் ஆணை**

கிருஷ்ணதேவ ராயர்க்கு உண்டான கோபத்திற்கு அளவில்லை. அவர், "என்ன! உண்மை ஊழியரான நாகமரா நமது ஆணையைக் கடந்தார்! என்ன ஆச்சரியம்!" என்று கூறி, "நமது கட்டளைப்படி உடனே பாண்டியனிடம் பாண்டிய நாட்டை ஒப்புவித்து வருக!" என்று ஆணை பிறப்பித்தார். அந்த ஆணையை எடுத்துக்கொண்டு பாண்டியனை மதுரைக்குத் திருப்பினன்.

**நாகமர் பதில்**

நாகமர் இராயர் ஆணையைப் படித்துப் பார்த்தார்; உடனே இராயர்க்கு விளக்கமாக ஒரு கடிதம் வரைந்தார்; அதனில் "பாண்டியன் தன்னால் நாட்டிலுள்ள குழப்பத்தை அடக்க முடியாது என்றும் தனக்குத் தக்க உபகாரச் சம்பளம் கொடுத்தாற் போதும் என்றும் கூறினன். உண்மையாகவே இவன் நாட்டையாளத் திறமை அற்றவன். அதனால்தான் சோழன் இவனை எளிதில் விரட்டி நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். இவன் பாட்டனார் வழிவந்த பஞ்ச பாண்டியர் என்பவர் கயத்தாறு என்னும் ஊரில் இருந்துகொண்டு இவனுக்கு ஓயாத துன்பத்தை விளைக்கின்றனர். இவன் அவர்களை அடக்க முடியாமல் தத்தளிக்கிறன்; வேறு சிற்றரசரையும் அடக்க முடியாது தவிக்கிறன். இவனிடம் குடிகட்கு நம்பிக்கை இல்லை. இவனது ஆட்சியில் அமைதியும் இல்லை. இவனிடம் நாட்டை ஒப்புவித்தால் பேரரசுக்குப் பாண்டிய நாட்டிலிருந்து பகுதிப் பணம் வராது. நான் இந்த நாட்டை நன்னிலைக்குக் கொண்டுவர அரசாங்கப் பணத்தையும் என் கைப் பணத்தையும் மிகுதியாகச் செலவிட்டிருக்கிறேன்" என்பவற்றைக் குறித்தார்.

**இராயர் சீற்றம்**

நாகமர் கடிதத்தைப் படித்த இராயர் கடுங்கோபம் கொண்டார். அவர் அவையினரைப் பார்த்து, "நமது ஆணையைக் கடந்த நாகமர் தலையைக் கொய்து நம்மிடம் கொண்டு வருபவர் உங்களில் எவரேனும் உளரா?" என்று பதட்டமாகக் கேட்டார்.

"நாகமர் பெரிய போர்வீரர். அவர் மூன்று தலை முறையாகப் பேரரசில் சேனைத் தலைவராக இருப்பவர்; பல போர்களில் வெற்றி பெற்றவர்; தக்ஷிண மஹா மண்டலேசுவரர்; அரசர்க்கு அடுத்து விளங்கும் பிரபுக்களில் முதல்தரமானவர்; பெரு வீரரான விசுவநாதருக்குத் தகப்பனர். அவரை வெல்ல யாரால் முடியும்!" என்று

அவையில் இருந்த ஒவ்வொருவரும் தமக்குள் எண்ண மிட்டவாறு பேசாதிருந்தனர்.

**விசுவநாதர் வாக்குறுதி**

இராயர் மீண்டும் அவையோரைப் பார்த்தார். அவரது கோபம் தணியவில்லை. அப்பொழுது விசுவ நாதர் எழுந்து இராயரைப் பணிந்து, "பெருமானே, தாங்கள் என்னை அனுப்பினால், நான் சென்று நாகமர் தலையைக் கொணர்வேன்" என்றார். அது கேட்ட இராயர் திடுக்கிட்டார். உடனே அவர், "என்ன விசுவா, நீயா? நீ நாகமர் பிள்ளை அல்லவா? அவருடன் சேர்ந்துகொள்ள மாட்டாயா?" என்று கேட்டார். விசுவநாதர் இராயரைப் பணிந்து, "அரசர் ஏறே, நான் தங்கள் ஊழியன்; ஆதலின் தங்கள் ஆணையை நிறைவேற்றுவதே எனது முதற்கடமை. அரசர் ஆணை பெரிதே தவிரத் தந்தை யாரோ, தாயாரோ பெரியவர் அல்லர். நான் சென்று தங்கள் கட்டளைப்படி நடந்து வருவேன். தாங்கள் இதனை உறுதியாக நம்பலாம்" என்றார்.

**இராயர் ஆசி**

இராயர் மனம் அமைதி கொள்ளவில்லை; "இரத்த பாசம் கொடியது. மகனும் சென்று தகப்பனுடன் சேர்ந்துகொண்டால் என்ன செய்வது? எதற்கும் அரிய நாதனை உடன் அனுப்புவோம். அவன் தமிழ்நாட்டான்; நம்மீது பக்தி உடையவன்; தக்கவாறு நடந்து கொள் வான்" என்று தமக்குள் எண்ணினார். அதனால் அவர், "விசுவா, நீ தனியாக மதுரை செல்லவேண்டா. உன் உயிர்த் தோழனை அரியநாதனை உடன் அழைத்துச் செல். நாகமரைப் பிடித்து வருதலே சாலும். உங்கள் முயற்சி வெற்றி பெறுக" என்று ஆசி கூறி அனுப்பினார். விசுவநாதரும் அரியநாதரும் ஆறாயிரம் வீரருடனும் இரண்டாயிரம் குதிரைகளுடனும் மதுரையை நோக்கிச் சென்றனர்.

### தந்தையாரும் புத்திரரும்

விசுவநாதர் மதுரைக்கு அருகில் தம் படையுடன் தங்கினர்; தம் வருகையை நாகமர்க்கு அறிவித்தார்; "தாங்கள் பாண்டியனிடம் அரசை ஒப்புவிக்கவேண்டும்; இன்றேல் பாண்டியனை அரசனாக்கித் தங்களைப் பிடித்து வருமாறு பேரரசர் எனக்கு ஆணையிட்டுள்ளார்" என்ற செய்தியை அனுப்பினர். நாகமர் தம் தவப்புதல்வரைத் தம் பக்கம் சேர்ந்துகொள்ளுமாறு தூண்டினர்; அவரைத் தம் அரண்மனைக்கு அழைத்துச் சென்று தாம் திரட்டி வைத்திருந்த பெருஞ் செல்வத்தைக் காட்டி, "இஃது உனக்காகச் சேமித்தது" என்றார். விசுவநாதர் இராயர் ஆணைப்படி நடக்கத் தாம் வந்திருப்பதை வற்புறுத்தினர்.

நாகமர் பாண்டியனது வலியற்ற தன்மையையும் நாடு பாழாய்க் கிடந்த நிலையையும் நாட்டை நன்னிலைக்குக் கொணரத் தாம்பட்ட பாட்டையும் விளக்கமாகக் கூறினர். விசுவநாதர் வேறொன்றும் பேசாமல், "எந்தையீர், நாம் இராயர் ஆணைப்படி நடக்கவேண்டும் ஊழியர். அவரது ஆணையைக் கடப்பது அநீதி. உடனே பாண்டியனிடம் அரசை ஒப்படைத்தருள்க" என்று வேண்டினர்.

### போரும் நாகமர் தோல்வியும்

தாம் பெற்று வளர்த்த தம் தவப் புதல்வரே தமக்கு மாறாக இருப்பதைக் கண்ட நாகமர் பெருஞ்சீற்றம் கொண்டார்; தம் படையைத் திரட்டித் தம் புத்திரரை எதிர்க்கத் துணிந்தார். இருதிறத்துப் படைகளும் கைகலந்தன. விசுவநாதர் இராஜபக்தி மிகுந்தவர் ஆதலால், தாம் தம் தந்தையாருடன் போர் செய்வதை மறந்தார்; பகைவனிடம் போர் செய்வதாக எண்ணிக் கடும்போரிட்டார். அதிகம் அறைவதேன்? முடிவில் நாமகர் சிறைப்பட்டார்.

### பாண்டியர் நன்றியுரை

விசுவநாதர் மதுரைக்குள் நுழைந்தார்; பாண்டியனை அரியணைமீது ஏற்றினர். பாண்டியன் ஒருவராலும் கரை செய்ய அரியதொரு பேருவகைக் கடலில் மூழ்கினன். அத்தமிழரசன் விசுவநாதரை நோக்கி,

"உமது தந்தையார் சோழனை வென்று இந்த நாட்டை மீட்டார். இப்பொழுது நீர் உமது தந்தையாரை வென்று இந்த நாட்டை எனக்கு அளித்தீர். நான் உமக்கு என்ன கைம்மாறு செய்வேன்? எனக்குப் பிள்ளை இல்லை. பாண்டிய மரபு என்னுடன் மறைந்தொழியும். எனக்குப் பின் சோழன் இந்த நாட்டைக் கவரக்கூடும். நான் உம்மை என் மைந்தராகப் பாவிக்கிறேன். எனக்குப்பின் இந்த நாடு உம்மைச் சேரக்கடவது," என்றான்.

பின்னர்ப் பாண்டியன் விசுவநாதரை மீனாக்ஷியம்மன் கோவிலுக்கு அழைத்துச் சென்றான். அங்குக் கோவில் தலைமை அர்ச்சகன் பாண்டியன் கட்டளைப்படி, விசுவநாதர் தலைமீது மணிமுடி வைத்தான்; அரசவாள், இலச்சினை, மீனக்குடை முதலிய அரச சின்னங்களை மீனாக்ஷியம்மன் ஆசி கூறித் தருதல்போலத் தந்தான். விசுவநாதர் அனைத்தையும் இறைவன் திருவருள் என்று மனமுவந்து ஏற்றுக்கொண்டார்.

### இராயர் அவை

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு பாண்டியன் மதுரையில் தங்கி அரசாளலானான். விசுவநாதர் தம் தந்தையாருடன் விஜயநகரம் சென்றார். இராயர் நாகமரைப் பார்த்தார். நாகமர் இராயர் பாதங்களிற் பணிந்து நடந்தவற்றை எல்லாம் விளக்கமாக விளம்பினார். இராயர் விசுவநாதரது உண்மை ஊழியத்தைப் பாராட்டினார்; "விசுவா, நீ உண்மையான இராஜ பக்தி உடையவன். நாம் உன்னை முதலிற் சந்தேகித்தோம். நாம் சந்தேகித்தது தவறு என்பதை இப்பொழுது மெய்ப்பித்து விட்டாய். நீ நம்மிடமே இரு. உனது இராஜ பக்திக்காக நாகமரை மன்னித்தோம். நாகமரே, நீர் முன்போல உமது பதவியில் இருந்து வரலாம்" என்றார். யாவும் மங்கலமாக முடிவுற்றதைக் கண்ட அவையோர் அகமகிழ்ந்தனர். அரியநாத முதலியார் பாண்டிய நாட்டில் பாண்டியனுக்கு உதவியாக இருந்து வந்தார்.

# 9. விசுவநாதர் - மதுரை மன்னர் I

**பாண்டியன் மறைவு**

மேற்சொன்ன நிகழ்ச்சிகட்குப் பிறகு பாண்டியன் சில மாத காலமே உயிரோடு இருந்தான். அவன் இறந்தவுடன் பாண்டிய நாட்டார் விசுவநாதரை அரசராக அனுப்பும்படி பேரரசர்க்கு விண்ணப்பம் விடுத்தனர். இந்த நிகழ்ச்சிகள் நடப்பதற்குச் சிறிது முன்னரே, புகழ் பெற்ற கிருஷ்ணதேவ ராயர் காலமானார். அவர் தம்பியார் அச்சுத ராயர் பேரரசரானார். அச்சுத ராயர் உடனே விசுவநாதரை மதுரைக்கு அனுப்பினார்.

**விசுவநாதர்-பாண்டிய மன்னர்**

விசுவநாதர் தம் படையுடன் மதுரையை அடைந்தார். அரியநாதர் மதுரையை அலங்கரித்துப் பெருமக்களுடன் சென்று விசுவநாதரை வரவேற்றார். நண்பர் இருவரும் ஆனந்தக் கண்ணீர் விட்டு ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். விசுவநாதர் மீனாக்ஷியம்மன் திருக்கோவிலைத் தரிசித்து அரண்மனைக்குச் சென்றார்; அன்றே பாண்டிய மன்னராக முடிசூடினார். அரியநாதர் அமைச்சரும் சேனைத்தலைவருமாக அமர்ந்தார்.

**நாட்டு நிலைமை**

விசுவநாதர் பாண்டிய மன்னரான பொழுது நாட்டில் அமைதி குறைவாகவே இருந்தது. வடுகர், மறவர், தொட்டியர் முதலியவர் அங்கங்கே அழிம்புகளும் அல்லல்களும் இழைத்து வந்தனர். கள்வர் பயம் நிறைந்து இருந்தது. போர் வீரருட் சிலரும் கொள்ளைக்கூட்டத்தாருடன் சேர்ந்து தவறு இழைத்தனர். கயத்தாறு என்னும் ஊரில் இருந்த பஞ்ச பாண்டியர் பாண்டிய அரசு தங்கட்கே உரியதென்று வழக்காடி வந்தனர். விசுவநாதர் இத்தகைய குழப்பங்கட்கு இடையில் முடிசூடிக்கொண்டார். அவர் எவ்வாறு நாட்டை நன்னிலைக்குக் கொண்டு வந்தார் என்பதை முறையாகக் காண்போம்.

### எல்லை வகுத்தல்

அச்சுத ராயர் விசுவநாதரை மதுரை - மன்னராக நியமித்த பிறகு சோழ நாட்டைத் தம் மைத்துனியின் கணவரான **செவ்வப்ப நாயக்கர்** என்பவரிடம் ஒப்புவித்தார். செவ்வப்பர் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆட்சிபுரியத் தொடங்கினர். விசுவநாதர் அவருடன் கலந்து பேசிப் பாண்டியனுக்குச் சொந்தமாக இருந்த வல்லத்தைச் சோழ நாட்டுடன் சேர்த்தார்; சோழனுக்கு உரியதாக இருந்த திருச்சிராப்பள்ளியைப் பாண்டிய நாட்டுடன் இணைத்தார். இந்த ஏற்பாட்டினல் சோழ பாண்டிய நாடுகட்கு இடையே திட்டமான எல்லை வகுக்கப் பட்டது,

### திருச்சிராப்பள்ளி

பாண்டிய நாட்டிற்குத் திருச்சிராப்பள்ளி எல்லை நகரமாக மாறி விட்டதால் அதனைப் பாதுகாவல் மிக்க நகரமாக மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டது. விசுவநாதர் அந்நகரத்தைச் சுற்றிலும் ஒன்றன்பின் ஒன்ருக இரண்டு மதிற்சுவர்களை எழுப்பினர். அவை இரண்டும் பெரியவையாகவும் உயரமாகவும் இருந்தன. அவ்விரு மதிற்சுவர்கட்கும் அப்பால் ஆழ்ந்து அகன்ற அகழி ஒன்று அமைக்கப்பட்டது. கோட்டை கொத்தளங்கள் கட்டப்பட்டன. இப்பொழுதுள்ள தெப்பக்குளம் விசுவநாதர் கட்டளையால் அமைக்கப்பட்டதே ஆகும். விசுவநாதர் தாயுமான சுவாமிகளுடைய மலைக்கோட்டையைச் செப்பனிட்டார்; தமக்கு வேண்டிய அரண்மனையையும் அரசாங்க நிலையங்களையும் பெரிய கடைத் தெருவையும் கட்டுவித்தார்.


### மதுரை மாநகரம்

மதுரை மாநகரம் பல நூற்ருண்டுகளாகப் பாண்டியர் தலைநகரமாக இருந்ததன்றே? அங்குப் பலம் பொருந்திய கோட்டை ஒன்று இருந்தது. அது முஸ்லிம் படையெழுச்சியால் பாழாய்க் கிடந்தது. விசுவநாதர் அதனைத் தகர்த்து எறிந்தார்; நகரத்தைச் சுற்றிலும் வன்மை

மிக்க கோட்டை ஒன்றைக் கட்டினார்; அக் கோட்டையில் எழுபத்திரண்டு கொத்தளங்களை அமைத்தார். கோட்டைக்கு ஒரு புறம் வைகை யாறே இயற்கை அகழியாக இலங்கியது.

### மீனாக்ஷி-சுந்தரேஸ்வர் கோவில்

முஸ்லிம் படையெடுப்புக்கு முன் மீனாக்ஷி-சுந்தரேசர் திருக்கோவில் ஏழு மதில்களைப் பெற்றிருந்தது; பதினான்கு கோபுரங்களைப் பெற்றிருந்தது. மதில்கட்கு இடையே குடிகள் இல்லங்கள் இருந்தன. அவை யாவும் படையெடுப்பில் அழிந்துபட்டன. பின்னர் வந்த கம்பணவுடையார் ஓரளவு அக்கோவிலைப் புதுப்பித்தார். அதன் பிறகு அதனைக் கவனிப்பவர் இல்லை. அதன் நிலைமை



மோசமாக இருந்தது. விசுவநாதர் தம் கைப் பணத்தைச் செலவிட்டு அக்கோவிலைப் பெரிதாகக் கட்டினார். அரியநாதர் ஆயிரக்கால் மண்டபத்தை நிருமித்தார். ஆயிரக்கால் மண்டபத்தில் அரியநாதர் சிலையை இன்றும் காணலாம். கோவிலில் விழா-பூசை முதலியன நடைபெறுவதற்காகப் பல கிராமங்கள் தேவதானமாக விடப்பட்டன. விசுவநாதரது திருப்பணியைக் கண்ட பாண்டி நாட்டார் வியந்து பாராட்டி வாழ்த்தினர்.

**வைகையில் அணைக்கட்டு**

வைகையில் வெள்ளம் புரண்டு வருகையில் மதுரை நகரத்திற்குச் சேதம் விளைதல் உண்டு. அத்துடன் அந்த யாற்று நீரின் பெரும்பகுதி வீணைகக் கடலுக்குச் சென்று கொண்டிருந்தது. விசுவநாதர் அந்த நீரை வேளாண் மைக்குப் பயன்படுத்தத் துணிந்தார்; வைகையில் பரணை, சிற்றணைகளைக் கட்டினார்; ஆற்று நீரை நெடுந் தொலைவு கொண்டுசெல்லப் பற்பல கால்வாய்களை வெட்டினார். இத்தகைய நீர்ப்பாசன வசதிகளால் முன் னர்ப் பண்படுத்தாது கிடந்த நிலங்கள் சாகுபடிக்கேற்ற நிலங்களாக மாறின. குடிமக்கள் ஆயிரக்கணக்கில் வேலை பெறலாயினர்.

**காடு கெடுத்து நாடாக்கல்**

காவிரி யாற்றின் இரு கரைகளிலும் அடர்ந்த காடு கள் இருந்தன. அவற்றில் கொடிய விலங்குகள் மிக் கிருந்தன; கள்வர் அங்கு ஒளிந்திருந்தனர். அக்காலத் தில் ஆற்றோரமே பாதைகள் அமைந்திருந்தன. எனவே, பிரயாணிகட்குக் கள்வராலும் விலங்குகளாலும் நாள் தோறும் துன்பம் உண்டாகிக்கொண்டு வந்தது. விசுவ நாதர் இதனை அறிந்தார்; ஆயிரக்கணக்கான கூலியாட் களை அமர்த்திக் காடுகளை அழித்தார்; கொடிய விலங்கு களை வேட்டையாடிக் கொன்றார்; கள்வரைப் பிடித்துத் தண்டித்து, நன்மதி கூறிக் காட்டை அழிக்கும் வேலையில் அமர்த்தினார்; காடுகள் அழிக்கப்பட்ட இடங்களில் அக்கிரகாரங்களையும் கிராமங்களையும் ஏற்படுத்தினார்.

**திருவரங்கம்**

விசுவநாதர் திரிசிரபுரத்தை அடுத்துள்ள ஸ்ரீரங்கத் தில் தமது நாட்டத்தைச் செலுத்தினார்; திருவரங்கம் பெரிய கோவில் கம்பணவுடையார்க்குப் பிறகு கவனிப் பார் அற்றுப் பழுதுபட்டுக் கிடந்தது. விசுவநாதர் அப் பெரிய கோவிலைப் பலமாகக் கட்டி முடித்தார்; பல பெரிய மண்டபங்களையும் திருச்சுற்றுகளையும் அமைத் தார்; பல வீடுகளைக் கட்டிக் கொடுத்து மக்களைக் குடி

யேற்றினர். விசுவநாதர் திருவரங்கத்துத் திருப்பணி கட்காக மூன்று லக்ஷம் பொன் செலவழித்தார்.

### தென் பாண்டி நாடு

மேற்சொன்ன எல்லா வகைப் பணிகளிலும் விசுவ நாதர்க்குப் பெருந்துணைவராக இருந்தவர் தளவாய் - அரியநாத முதலியார் ஆவர். பாண்டிய நாட்டின் வட பகுதியில் அமைதியும் ஒழுங்கும் உண்டான பிறகு, விசுவ நாதர் தென் பாண்டி நாட்டைக் கவனிக்கலானர். தென் பாண்டி நாட்டில் கயத்தாறு என்னும் இடத்தைச் சுற்றிப் பஞ்ச பாண்டியர் என்பவர் ஆண்டுவந்தனர். அவர்கள் தாங்கள் எவருக்கும் அடங்கியிருக்க முடியாதென்று கூறி விட்டனர். அவர்கள் தென் பாண்டி நாட்டில் செல் வாக்கு உடையவர்கள்; அதனுல் மக்களைத் தம் வழித் திருப்பப் பிரசாரம் செய்யலாயினர்.

"பாண்டிய மரபு அழிந்து போகவில்லை. நாங்கள் பாண்டிய மரபினர். எங்களுக்கே மதுரை அரசு உரியதா கும். தமிழ்நாட்டில் அன்னிய வடுகர் ஆட்சி செலுத்து தல் தவருகும். நாங்கள் அன்னியரை ஆளவிடோம்; எங்கள் பரம்பரை உரிமையைக் கைவிடோம். தமிழர் மானமற்றவர் அல்லர்; தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள வல்லவர்" என்று திருநெல்வேலி ஜில்லா முழு வதிலும் பிரசாரம் செய்தனர். இப்பிரசாரத்தின் பலனு கத் தென் பாண்டி இளைஞர் ஆயிரக்கணக்காகப் பஞ்ச பாண்டியர் படையிற் சேர்ந்தனர்; வீராவேசம் கொண்ட னர்; 'வெற்றி அல்லது தோல்வி, இரண்டில் ஒன்று பார்ப்போம்' என முழக்கினர்.

### இருதலைக்கொள்ளி எறும்பு

விசுவநாதர் பஞ்ச பாண்டியரை அடக்கி வருமாறு அரியநாதரை ஏவினர். அரியநாதர் தம் பெரும் படை யுடன் புறப்பட்டுச் சென்றார்; பஞ்ச பாண்டியரிடம் தூது விடுத்து அமைதியாகப் பணியுமாறு வேண்டினர். பஞ்ச பாண்டியர் தம் உரிமையை விளக்கி வாதாடினர். அரிய நாதர் அவர்களது பிரசாரத்தைக் கேட்டு மனம் கரைந்

தார். அவரும் ஒரு தமிழர் அல்லவா? ஆயினும் அரசன் ஆணை பெரியதன்றோ? பகைவரின் நாட்டுப் பற்றும் உரிமை வேட்கையும் அவர் உள்ளத்தின் ஒரு பகுதியைக் கொள்ளை கொண்டன. மற்றொரு பகுதியை 'இராஜ பக்தி' என்பது கொள்ளை கொண்டது. பாவம்! அரிய நாதர் இருதலைக்கொள்ளி எறும்புபோலத் துன்புற்றார்.

## கடும்போர்

பின்னர் முதலியார் ஒருவாறு துணிந்து போரில் இறங்கினர். போர் கடும்போராக மாறியது. முதலியார் பக்கம் அரச சேவை முனைத்து நின்றது. எதிரிகள் பக்கம் நாட்டுப்பற்றும் உரிமை வேட்கையும் முனைத்து நின்றன. மூன்று மாதங்கள் ஆயின. போர் ஒரு முடிவுக்கு வர வில்லை. இருதிறத்திலும் ஆயிரக்கணக்கான வீரர்-தமிழர் வீணே மடிந்ததுதான் கண்ட பலன். பஞ்ச பாண்டியர் வீர ஆவேசத்துடன் போர் புரிந்தனர். அரியநாதர் திக்கு முக்காடினார்; அவர்களை வென்று வாகை சூட முடியா தென்பதை உணர்ந்தார்.

அவர் அங்ஙனம் கதிகலங்கி இருந்தபொழுது விசுவ நாதர் ஒரு படையுடன் துணைக்கு வந்தார். துணைவலி பெற்ற அரியநாதர் போரைக் கடுமையாக நடத்தினார். மாதங்கள் ஆறு ஆயின. வெற்றியைவிடத் தோல்வி என் பதே விசுவநாதர் உள்ளத்தில் பதிவு கொள்ளத் தொடங் கியது. அரியநாதர் செய்வகை தோன்றாது விழித்தார். பஞ்ச பாண்டியர் தோற்றாலன்றி நாயக்க அரசு மதுரை யில் நிலை பெறாது என்பதை இருவரும் உணர்ந்தனர். இனிப் பின் வாங்குவது அழிவைத் தேடிக் கொள்வ தாகும். ஆதலின் இருவரும் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர யோசனையில் ஆழ்ந்தனர்.

## முதலியார் யோசனை

அரியநாத முதலியார் ஒரு யோசனை செய்தார். அஃதாவது, "பஞ்ச பாண்டியர் கயத்தாற்றுக் காவலர். அவர்கட்குக் கயத்தாற்றுப் பெருமாளே குல தெய்வம். நமக்கு அத்திருமாலே துணை. நம் சார்பாக ஒரு வீரனை

அனுப்புவோம். பாண்டியர் சார்பாக ஒருவன் வரட்டும் அந்த இருவரும் பெருமாள் முன்பு **தனிப்போர்** செய்யட்டும். பெருமாள் திருவருளால் வெல்லும் வீரனைச் சார்ந்தவரே பாண்டிய நாட்டை ஆளட்டும். இறைவன் திருவுள்ளக் குறிப்பை அறிவோம்'' என்பதாம். இந்த முடிவை இரு திறத்தாரும் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டனர்.

**வீரர் இருவர்**

விசுவநாதர் பக்கம் யார் நின்று தனிப்போர் செய்வது என்பது கேள்வி. தளவாய் தாம் நிற்பதாகக் கூறினார். விசுவநாதர் 'நான்' என்றார். அவர்கள் நெடு நேரம் விவாதித்த பிறகு விசுவநாதரே நிற்பதென்பது முடிவாயிற்று. பஞ்ச பாண்டியர் பக்கம் **தென்பாண்டி வீமன்** நிற்பது என்பது தீர்மானமாயிற்று. அவன் மற்போர்-சிலம்பம் முதலிய போர்வகைகளில் பாண்டிய நாட்டில் இணையற்ற வீரன்; தென்பாண்டி நாட்டில் மிக்க மதிப்பும் செல்வாக்கும் உடையவன்; அஞ்சா நெஞ்சினன். ஆண்மை மிக்கவன்; சிறந்த திருமால் பக்தன். அந்த வீரர் இருவரும் கயத்தாற்றுப் பெருமாளை உள்ளக் கனிவுடன் வணங்கிக் கோவில் எதிரில் இருந்த வெளியில் போரிடத் தயாராயினர்.

**தனிப்போர்**

வீரர் இருவரும் ஒருவருக்கு ஒருவர் ஏற்ற நிலையினர்; தக்க உடல் அமைப்புப் பெற்றவர்; உடல் உரம் வாய்ந்தவர்; உற்ற வயதினர்; ஆண்மையிலும் அஞ்சாமையிலும் மிக்கவர்; கம்பீரமான தோற்றம் உடையவர். அந்த வீரர் இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கினர்; கை குலுக்கினர்; புன்னகை காட்டினர்; இணைந்து புரண்டனர்; புரண்டு எழுந்தனர். இருவரும் பின்னோக்கிச் சென்றனர்; முன்னோக்கிப் பாய்ந்தனர்; ஒருவரை ஒருவர் முட்டினர்; மோதினர்; தரையில் வாரிப்போட முயன்றனர். இங்ஙனம் இருவரும் தாம் தாம் கற்ற மற்போர் வரிசைகளைக் காட்டினர்; வெற்றியையோ தோல்வியையோ காணக் கூடவில்லை.

### இருதிறத்தார் கலக்கம்

இருதிறத்துப் படைகளும் அமைதியாக இருந்து போரை இமைகொட்டாது கவனித்தன. முதலியார் உள்ளம் அமைதியற்றுப் புழுங்கிக்கொண்டிருந்தது. 'போராட்டத்தின் முடிவு என்னகுமோ!' என்று அவர் பெருங்கவலை கொண்டார். பாண்டியர் நால்வர் உள்ளமும் நடுக்கடலில் சிக்கித் திசையறியாது தவிக்கும் மரக்கலம்போல அமைதியற்றுத் தவித்தது. தங்கள் நாட்டுரிமை— நாட்டாட்சி என்பன போரின் முடிப்வைப் பொறுத்திருந்தமையால் அவர்கள் கண்ணிமையாது போரைக் கவனித்து வந்தனர்.

### வாட்போர்

மற்போரில் முடிவு காண முடியாமையால் வீரர் இருவரும் வாட்போரில் இறங்கினர். வாட்போர் மிகக் கொடியது. ஒருவரை ஒருவர் வெட்டக் குறிபார்த்தனர். ஒருவர் வெட்டை ஒருவர் தடுத்து நின்றனர்; இங்ஙனம் சிறிது நேரம் போராடினர். இருவர்க்கும் உடல் முழுதும் காயம். இருவரும் சோர்ந்து வீழ்ந்தனர். வீழ்ந்தவருள் மீண்டும் எழுந்தவர் விசுவநாதர் ஒருவரே. பாண்டிவீமன் வீர சுவர்க்கம் அடைந்தான்.

### விசுவநாதர் வெற்றி

விசுவநாதர் ஒப்பந்தப்படி வெற்றி பெற்றவரானர். பஞ்ச பாண்டியர் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்; ஆதலின் கயத்தாற்றைவிட்டுப் பொதியமலைக் காடுகளை நோக்கிச் சென்று விட்டனர். கயத்தாறும் அதனைச் சூழ இருக்கும் நிலப்பகுதியும் விசுவநாதர் வசப்பட்டது.

# 10. விசுவநாதர்-மதுரை மன்னர் II

## திருநெல்வேலியில் அரியநாதர்

விசுவநாதர் விருப்பப்படி அரியநாதர் திருநெல்வேலியை அடைந்தார்; அந்நகரம் முழுவதையும் புதுப்பித்தார்; நெல்வேலியப்பரது திருக்கோவிலைப் பழுது பார்த்தார்; அங்கு ஆயிரக்கால் மண்டபத்தை அழகுபட அமைத்தார்; தாமிரபரணி ஆற்றின் இரு கரைகளிலும் இருந்த காட்டை அழித்து நாடாக்கினார்; நல்ல பாதைகளை அமைக்க ஏற்பாடு செய்தார்; பாளையங்கோட்டை என்னும் இடத்தில் ஒரு கோட்டையை அமைத்தார்; அங்கங்கே அக்கிரகாரங்களை அமைத்து மறையவரைக் குடியேற்றினார்.

## கம்பம் கோட்டை

மேற்கு மலைச்சாரலில் கம்பம் என்னும் ஊரில் பெரிய கோட்டை இருந்தது. அதனைச் சிற்றரசன் ஒருவன் ஆண்டுவந்தான். அவன் தான் சோழ மரபினன் என்றும் நாயகருக்கு அடங்கி நடக்க முடியாதென்றும் கூறிவிட்டான். அதனால் வெகுண்ட விசுவநாதர் தம் தந்தையாரிடம் படைத்தலைவராக இருந்த இராமபத்திர நாயக்கர் என்பவரைத் தக்க படையுடன் அங்கு அனுப்பினார். அப்படைத் தலைவர் மேற்கு மலைச்சாரலை அடைந்தார்; கம்பம் கோட்டையை முற்றுகையிட்டார்; முடிவில் கம்பத்தை ஆண்ட சிற்றரசனை மதுரை நாயக்க அரசுக்கு முடி பணியச் செய்தார்.

## தென்காசிப் பாண்டியர்

திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசியைத் தலைநகராகக்கொண்டு சுற்றியுள்ள நிலப்பகுதியைப் பாண்டிய அரச மரபினர் நெடுங்காலமாக ஆட்சி புரிந்துவந்தனர். அவர்கள் விசுவநாதர்க்குப் பணிந்து நடப்பதாக மகிழ்ச்சியோடு வாக்களித்தனர். அந்தத் தென்காசிப் பாண்டியர் மரபில் வந்தவரே தமிழில் நைடதம் பாடிய **அதிவீரராம பாண்டியர்.**

### சேதுபதியுடன் ஒப்பந்தம்

இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட நாட்டைச் சேதுபதி ஆண்டுவந்தார்; அம்மரபரசர் விஜயநகரப் பேரரசை மதித்து நடந்ததில்லை; விருப்பம் இருப்பின் பேரரசுக்குக் கப்பம் கட்டுவர்; இல்லையேல் கட்டார்; ஆயிரக்கணக்கான மறவரைத் திரட்டிக்கொண்டு சென்று போரிடப் பின்வாங்கார். இத்தகைய முரட்டுக் குணமுள்ள சேதுபதியை அரியநாதர் தம் வயப்படுத்தி, மதுரை மன்னரை மதித்து நடக்குமாறு செய்தார்.



### கொங்கு நாடு

பின்னர் அரியநாதர் கொங்கு நாடு சென்றார். கொங்குநாடு என்பது சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களைக் கொண்ட பகுதி. முதலியார் அங்கு இருந்த சிற்றரசர்களைச் சாம-பேத - தான - தண்டங்களினால் மதுரை மன்னர்க்குப் பணிந்து நடக்குமாறும் கப்பம் கட்டுமாறும் செய்தார்.

### நாட்டுப் பரப்பு

இத்தகைய முயற்சிகளால் சேலம், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் விசுவநாதர் ஆட்சிக்கு உட்பட்டன.

### நாடெங்கும் கோட்டைகள்

இப்பரந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டும் அல்லவா? அதற்காக விசுவநாதர் எல்லைப்புறமெங்கும் பற்பல

கோட்டைகளை அமைக்க ஏற்பாடு செய்தார். நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டின் வடக்கிலும் வடமேற்கிலும் இருபத்துநான்கு கோட்டைகள் எழுப்பப்பட்டன. அவற்றிற் சிறப்பும் முதன்மையும் வாய்ந்தது மைசூருக்கும் கோயமுத்தூருக்கும் இடையில் உள்ள சத்தியமங்கலக் கோட்டை ஆகும். பவானித் தாலூகாவில் காவேரிபுரம் ஒரு கோட்டையாக அமைந்திருந்தது. சாமபுரக் கோட்டை மிக்க பலம் பொருந்தியது. பவானியில் கட்டப்பட்ட கோட்டையும் வன்மை உடையது. அதன் இடிந்த சுவர்களை இன்றும் அங்குக் காணலாம். ஆண்டியூர்க் கோட்டை முற்றும் கருங்கற்களால் இயன்றது. சிறந்த சிற்ப வேலைப்பாடு கொண்ட சிவன் கோவில் ஒன்று அங்கு இருக்கின்றது. வடமேற்கில் அட்டில் துறைக் கோட்டை, பாகேசுவரன் கோட்டை, மலைக் கோட்டை என்பன சிறப்புடையவை. இவை அனைத்தும் கோவைக்கு அப்பால் உள்ளவை.

சேலம் ஜில்லாவில் சேலம், ஓமலூர், சேந்தமங்கலம், அனந்தகிரி, பரமட்டி, மோகனூர், நாமக்கல், சங்கரி துர்க்கம், திருச்செங்கோடு முதலிய இடங்களில் பலமுள்ள கோட்டைகள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு கோட்டைக்குள்ளும் கோட்டைக் காவலருடன் படை ஒன்று இருந்து வந்தது. இக்கோட்டைகள் ஹைதர் படையெடுப்புகளாலும் பின்னர் நேர்ந்த நாட்டுக் குழப்பங்களாலும் பாழாயின எனினும், இன்றுள்ள இவற்றின் சிதைவுகளைக் கொண்டு இவற்றின் பண்டைச் சிறப்பை அறிதல் கூடும்.

இத்தகைய எல்லைப்புறக் கோட்டைகளைத் தவிர நாட்டில் வேறு கோட்டைகளும் கட்டப்பட்டன. அவை - மதுரை மன்னர், மண்டலத் தலைவர், பாளையக்காரர் முதலியவர் இருந்த ஊர்களில் அமைக்கப்பட்டன. அவை அந்தந்த இடவசதிக்கும் கோட்டையில் இருந்தவர் தகுதிக்கும் ஏற்பக் கருங்கல், செங்கல், மண் முதலியன கொண்டு கட்டப்பட்டன. அழகர் மலை, திண்டுக்கல், சோழவந்

தான் முதலிய இடங்களில் அமைந்த கோட்டைகள் இத் தகையன.

**சேரன் கப்பம் கட்டாமை**

விசுவநாதர் மதுரை மன்னர் ஆனபிறகு சேரநாட்டு அரசனான பூதல ஸ்ரீ வீரகேரள வர்மன் என்பவன் விஜய நகரப் பேரரசுக்குச் செலுத்திவந்த கப்பத் தொகையை நிறுத்திவிட்டான்; அத்துடன் நில்லாது, நாயக்க மன்னர் நாட்டு எல்லைப்புறத்தில் தொல்லை கொடுத்தான்; மலையாளிகளைக் கொண்ட பெரும் படை ஒன்றையும் தயாரித்தான். விசுவநாதர் நாட்டில் அமைதி நிறுவுவதிலும் கோட்டைகள் கட்டி நாட்டைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்திவந்தனர். ஆதலால், சேரனைக் கவனிக்க வாய்ப்பு இல்லாதிருந்தது.

**அச்சுத ராயர் ஆணை**

சேர மன்னன் கப்பம் கட்டாததைக் கணக்கர் அச்சுத ராயர்க்கு அறிவித்தனர். இராயர் சீற்றம் கொண்டார்; சேரனை அடக்கித் தமது பெரு நாட்டைக் காப்பது தமது முதற் கடமை என்று எண்ணினர்; பேரரசினைச் சேர்ந்த பெரும்படை ஒன்றைத் தக்க தலைவன் கீழ் அனுப்பத் துணிந்தார். அதனால், இராயர் தம் உறவினரும் சேனைத் தலைவருமாகிய இராம ராஜ விட்டலர் என்பவரைப் பெரும் படையுடன் தெற்கே சென்று சேரனை அடக்கி வருமாறு ஆணை பிறப்பித்தார்.

**சேரநாட்டின்மீது படையெடுப்பு**

விட்டல ராயர் பேரரசர் ஆணைப்படி பெரும்படையுடன் சென்று மதுரையை அடைந்தார். விசுவநாதர் அவருக்கும் அவர் படைக்கும் வேண்டிய எல்லா வசதிகளையும் அளித்தார்; தம் புத்திரரும் சிறந்த வீரருமான கிருஷ்ணப்ப நாயக்கரையும் ஒரு படையுடன் விட்டலர்க்கு உதவியாக அனுப்பினர்.

**குடிமக்கள் துன்பம்**

இங்ஙனம் திரண்ட படை வீரரும் படைத்தலைவரும் ஒரு மலைக்கணவாய் வழியாகச் சேர நாட்டுத் தென் பகுதி

யுள் நுழைந்தனர். பேரரசர் படை வருவதைக் கேள்வி யுற்ற சேரநாட்டுக் குடிகள் தங்கள் பொருள்களை வாரிக் கொண்டு சேரநாட்டின் வடபகுதியை நோக்கி ஓடினர். "பேரரசுப் படைவீரர் சேரநாட்டுக் கிராமங்களைச் சூறை யாடினர்; பொருள்களைக் கொள்ளை கொண்டனர்; மக் கள் அலறி ஓடத் தொடங்கினர். பசிக்கொடுமையால் பலர் மாண்டனர்; பலர் கண் பார்வை இழந்தனர். ஓடிய சூல் கொண்ட மகளிர் வழியில் பிள்ளைகளைப் பெற்றுத் துன் புற்றனர். பொதுப்படக் கூறின் குடிகள் பட்ட துன்பங் களைக் கூற முடியாது" என்று அக்காட்சிகளை நேரிற் கண்ட பிரான்ஸிஸ் சேவியர் என்ற பாதிரியார் குறித் துள்ளார்.

சேர அரசன் தன் படையைத் தயாராக்கித் தலை நகரத்தில் காத்திருந்தான். பேரரசுப் படைவீரர் தலைநக ரத்தைநெருங்கினர். பேரரசுப்படை தன் படையைவிட மிகப் பெரியதும் வன்மையுடையதுமாகும் என்று கண்ட வர் கூறக்கேட்ட சேரன் திகில் கொண்டான்; பிரான் ஸிஸ் சேவியரைத் துணை வேண்டினன். அவர் தாம் சமய ஆசிரியர் ஆதலின் அவனது வெற்றிக்காகப் பிரார்த் தனை செய்வதாகக் கூறி அகன்றார்.

### சேவியர் சேவை

இந்த நிலைமையில் பேரரசப் படைவீரர் பெரு முழக்கம் இட்டு வந்துகொண்டிருந்தனர். அவர்கள் சென்ற இடமெல்லாம் குடிகள் அலறிக்கொண்டு காடுகளை நோக்கி ஓடலாயினர். பேரரசின் படையினர் கோட் டாற்றை நெருங்கியதும் சேவியர் பாதிரியார் வழிமறித்து நின்று, குடிகளின் துன்ப் நிலையை விளக்கிப் போர் இன்றியே சமாதானமாகப் போகுமாறு வேண்டினர். விட்டலராயரும் அப்பொழுது படையுடன் கலந்து கொண்ட விசுவநாதரும் ஒருப்பட்டுச் சேரநாட்டைவிட்டு அகன்றனர். சேர அரசன் தூதுவரை அனுப்பிச் சமா தானம் வேண்டினன். நிபந்தனைகள் சரிப்படாமையால், சமாதானம் உடனே நடைபெறவில்லை.

**உடன்படிக்கை**

இதற்குள் சேர அரசன் காலமானான். அவன் மகன் அரியனை ஏறினன். அவன் விட்டல ராயருடன் ஒப்பந்தம் செய்துகொண்டான். அஃதாவது, 'சேரநாட்டுடன் சேர்ந்திருந்த திருநெல்வேலி ஜில்லாவின் ஒருபகுதி நாயக்கர் நாட்டுடன் சேர்க்கவேண்டும்; சேரன் ஆண்டு தோறும் பேரரசருக்குக் கப்பம் கட்டவேண்டும். சுசீந்திரத்தில் உள்ள பெருமாள் கோவிலில் ஆண்டுதோறும் விட்டல ராயர் பிறந்த நாளைக் கொண்டாடவேண்டும்' என்பது. *

இந்த உடன்படிக்கைக்குப் பிறகு விட்டல ராயர் 'தக்ஷிண மஹா மண்டலேசுவரர்' பதவியைப் பெற்றுத் தென்னட்டிலேயே தங்கி விட்டார். விட்டல ராயருடைய இந்த முயற்சியினல் பேரரசு பலப்பட்டதுடன் மதுரை அரசும் பலப்பட்டது. விசுவநாதர் கவலையின்றி நாட்டுக்குரிய நன்மைகளைச் செய்து அமைதியாக நாடாளலாயினர்.

## 11. பாளைய வகுப்பு

**நாட்டைக் காக்கும் பொறுப்பு**

நாட்டைப் பாதுகாப்பது எளிதான காரியமன்று. விசுவநாதர் ஆட்சிக்கு உட்பட்ட கொங்குநாடு, சோழ நாட்டின் ஒருபகுதி, பாண்டியநாடு என்பன பழக்க வழக்கங்களிலும் நடை-உடைகளிலும் வேறுபட்ட மக்களைக் கொண்டவை. ஒவ்வொரு நாட்டுப் பெருமக்கள் தனிக் காட்டு அரசரைப்போல இருந்தவர். அவர் அனைவரையும் ஒரு கட்டுக்குள் கொண்டுவந்தாற்றன் நாயக்க அரசு வலுப்பெறும்.

**பெருமக்கள்**

அப்பெரு மக்கள் யாவர்? சேர-சோழ-பாண்டியர் காலந்தொட்டு நாட்டில் ஆங்காங்கு முதன்மையுற்று, அர

* இந்த நிகழ்ச்சிகள் நடந்த ஆண்டு கி. பி. 1547-'48.

சியலில் உயர் பதவிகளைத் தாங்கிவந்த பெருமக்கள் ஒரு வகையினர்; தம் வாள் வலியாலும் தோள்வலியாலும் சிறு சிறு படைகளுக்குத் தலைவராகி ஊர்களையும் கோட்டைகளையும் கைக்கொண்டு சிற்றரசராக இருந்துவந்த பெருமக்கள் ஒரு வகையினர்; கம்பண வுடையார் தென்னாட்டைக் கைக்கொண்டபொழுது அவர் படைகளில் தலைமை தாங்கிவந்து தமிழகத்தின் முக்கியமான இடங்களில் தங்கி நிலைத்துவிட்ட வடுகப் பெருமக்கள் ஒரு வகையினர்.

### பெருமக்கள் மன நிலை

இவருள் முதல் இரு வகையாரும் தமிழர்; மூன்றும் வகையினருட் பெரும் பகுதியினர் தெலுங்கர்; மற்றவர் கன்னடர். இவர்கள் தமிழகத்தில் விஜயநகர அரசு வேரூன்ற உதவி புரிந்தவர்; அதனால் அரசியலில் தக்க பங்கைத் தாராளமாக எதிர் பார்த்தனர். தம்மால் விஜய நகர அரசும் பின்னர் நாயக்க அரசும் தென்னாட்டில் ஏற்பட்டன என்னும் எண்ணமுடைய அப்பெருமக்கள், தென்னாட்டு மக்கள் உரிமைகளைவிடத் தங்கள் உரிமைகள் முதலில் கவனிக்கப்படவேண்டும் என்று முணுமுணுத்தனர்.

தமிழ்ப் பெருமக்கள், 'விஜயநகர அரசினாலும் நாயக்க அரசினாலும் நமது பரம்பரை உரிமைகள் பாழாயினவே! நாம் முழு உரிமையுடன் நாட்டை ஆண்டுவந்த நிலைமை இப்பொழுது மாறிவிட்டதே! தமிழராகிய நமக்கு உரிய இந்நாட்டில் வடுகர் வந்து குடியேறி நாட்டைக் கைப்பற்றி நம் உரிமைகளையும் அழித்து அடிமைப்படுத்தல் நன்றோ? நமக்கு அரசியலில் சிறந்தபதவிகள் அளியாவிடில் நாயக்க அரசை ஆட்டங்கொள்ளச் செய்வோம். நமது ஒத்துழைப்பு இல்லாமல் இந்த அரசு எவ்வாறு நடைபெறும் என்பதைப் பார்ப்போம்" என்று உறுமினர்.

### விசுவநாதர்க்கு முன்

விசுவநாதர்க்கு முற்பட்ட பாண்டியர் காலத்தில் இந்தப் பெருமக்கள் தம் ஊர்ப் பகுதிகளை ஆண்டு வந்தனர். தெலுங்கப் பெருமக்கள் விஜயநகரப் பேரரசர்க்கு

அடங்கி ஆண்டுவந்தவர் அல்லவா? அதனால் பேரரசின் செல்வாக்குப் பெற்ற தெலுங்கப் பெருமக்கள் பாண்டியர்க்கு அடங்காமல் தம் விருப்பம்போல இருந்து வந்தனர். 'அவர்கள் அடங்காதபொழுது நாம் மட்டும் ஏன் அடங்கவேண்டும்?' என்று தமிழ்ப் பெருமக்களும் கப்பம் கட்டாமல் துன்பம் இழைத்து வந்தனர். பாண்டிய அரசர்க்கும் இந்த ஜமீந்தார்கட்கும் எப்பொழுதும் ஓயாத போராட்டமே இருந்து வந்தது. மஹா மண்டலேசுவரர், பேரரசின் கொள்கைப்படி, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருந்தனர்; பாண்டியரிடம் ஆண்டுதோறும் பகுதிப்பணம் மட்டுமே எதிர்பார்த்து நின்றனர். பேரரசின் தலையிடாக் கொள்கையாலும் பாண்டியர் திறமை இன்மையாலும் ஜமீந்தார்கள் அடங்காப் பிடாரிகள் ஆயினர்; ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண்டனர். நாட்டில் அமைதி குலைந்திருந்தது.

இந்த நிலைமை விசுவநாதர் வெற்றிகட்குப் பிறகு மாறலாயிற்று. ஜமீந்தார் உரிமைகள் ஆபத்தான நிலையை அடைந்தன. தனிக்காட்டு அரசர்களாக இருந்த அவர்கள் நாயக்கர் ஆட்சிக்கு மனமார அடங்கவில்லை.

**அரியநாதர் சுற்றுப்பிரயாணம்**

தளவாய் அரியநாதர் தமிழகம் முழுவதும் சுற்றினார்; மேற்சொன்ன பெருமக்களைக் கண்டார்; அவர்களது மனக்குறையைக் குறிப்பாக உணர்ந்தார்; அவர்களைத் தட்டிக்கொடுத்துத் தனிச் சிறப்பு அளியாவிடில் நாயக்க அரசு அமைதி பெறாது என்பதை உணர்ந்தார்; தமிழ்ப் பெருமக்கள் வடுகப் பெருமக்களைப் போலவே சம அந்தஸ்தினை விரும்பினர் என்பதை அறிந்தார்; தமிழ்ப் பெருமக்கள் மனம் வேறுபடுமாறு வடுகப் பெருமக்களை மாத்திரம் உயர்த்துதல் ஆகாது; இருசார் பெருமக்களையும் ஒரே முறையிற்றான் நடத்தவேண்டும் என்பனவற்றைத் தெளிந்தார்; தாம் அரசாளும் இனத்தவர் என்ற இறுமாப்பு வடுகர்க்கும் தாம் ஆளப்படும் இனத்தவர் என்ற எளிமை தமிழர்க்கும் உண்டாகாதிருக்குமாறு ஒரு திட்டத்தை வகுத்து எல்லாப் பெருமக்களையும் மனங்

குளிர்ச் செய்யவேண்டும் என்பதை உணர்ந்துகொண்டார்.

### அக்கால நாட்டு நிலைமை

பெருமக்கள் பூசல்களாலும் பாண்டியர் பலம் இன்மையாலும் நாட்டில் ஒழுங்கான அரசியல் இல்லாதிருந்தது; குழப்பமும் கொந்தளிப்புமே மலிந்திருந்தன. ஆதலின் குடிகளுடைய உடலும் உயிரும் உடைமையும் உரிமையும் உறுதியற்றிருந்தன. குடிகளில் வலியவர் அங்கங்கே வழிப்பறி செய்யும் கொள்ளைக்கூட்டத்தாராக மாறினர். இதனால்நாட்டில் அமைதி இல்லை; பிரயாண அச்சம் மிகுதியாக இருந்தது. ஊர்க்காவலும் நாட்டுக்காவலும் அலங்கோலமாக இருந்தன. நாட்டின் பல பகுதிகளில் கவனிப்பார் இன்றிக் காடுகள் மிகுந்திருந்தன. அவற்றில் விலங்குகள் மிகுந்து பக்கத்து ஊராரையும் விலங்குகளையும் துன்புறுத்தி வந்தன. கள்வர் அக்காடுகளில் பதுங்கியிருந்து பிரயாணிகளைத் துன்புறுத்திப் பொருள் பறித்து வந்தனர். இக்குறைகள் எல்லாம் நீங்க வழி என்ன?

### பாளைய வகுப்பு

அரியநாத முதலியார் விசுவநாதருடன் கலந்து ஒரு முடிவுக்கு வந்தார். அந்த முடிவுப்படி மேற்சொன்ன பெருமக்களைப் **பாளையக்காரர்** ஆக்கினர்; அவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட ஊர்களைக்கொண்ட நிலப்பகுதிக்குப் **பாளையம்** என்று பெயரிட்டார்; ஊராட்சி இல்லாதிருந்த பெருமக்கள் சிலர்க்குப் பல சிற்றூர்களைத் தந்து பாளையங்கள் ஆக்கினர்; தமிழர் - தெலுங்கர் - கன்னடர் என்ற வேறுபாடு சிறிதும் இல்லாமல் எல்லாப் பெருமக்களுக்கும் சமநிலையை அளித்தார். அரியநாதர் இங்ஙனம் வகுத்த பாளையங்கள் **எழுபத்திரண்டு.**

### பாளையக்காரர் உரிமைகள்

பாளையக்காரர் தமது பாளையத்திற்கு அரசர். அவரைக் குடிகள் 'அரசர்' என்றே அழைப்பர். அவர் உறையும் விடுதி 'மாளிகை' அல்லது 'அரண்மனை' எனப்

படும். அவர்தம் அரசாங்க அலுவலாளரும் பிறரும் புடைசூழக்கொலு இருப்பர். சிறப்புடை நாட்களில் குடிகள் அரசரைக் கண்டு வணங்கிக் காணிக்கை செலுத்துவர். பாளையக்காரர் பரிவாரங்கள் புடைசூழத் தம் பாளையத்தில் பவனி வருவர்; கொடி, சாமரம், முரசம் முதலிய அரச அடையாளங்களைப் பெற்றிருப்பர். பாளையக்காரர் குடிகளிடம் ஆறில் ஒரு கடமைபெறக் கடமைப்பட்டவர் ஆவர்.

### பாளையக்காரர் கடமைகள்

பாளையக்காரர் குடிகளிடம் வசூலிக்கும் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை மதுரை மன்னர்க்குச் செலுத்த வேண்டும்; ஒரு பகுதியைத் தாம் எடுத்துக்கொள்ளலாம்; மற்றொரு பகுதியைக் குடிகள் நலனுக்காகச் செலவழிக்க வேண்டும். அவர் தம் பாளையத்தில் வரி தண்டுதல், நீதி வழங்குதல், படை வைத்திருத்தல், பாளையத்தைப் பாது காவல்புரிதல், பக்கத்தில் உள்ள அரசர்க்குச் சொந்தமான நிலங்களையும் பாதுகாத்தல், அவசியம் ஏற்படும் பொழுது மதுரை மன்னர்க்குப் படை உதவி செய்தல், மதுரைக் கோட்டையில் உள்ள கொத்தளங்களில் ஒன்றைத் தம் பங்குக்கு உரிய வீரரை அனுப்பிக் காவல்புரியச் செய்தல் முதலியன அவர் கடமைகள் ஆகும்.

### பாளையக்காரர் உழைப்பு

இங்ஙனம் அரியநாதர் தயாரித்த பாளைய வகுப்புத் திட்டத்தை எல்லாப்பெருமக்களும் மனமார ஒப்புக்கொண்டனர். அவரவர் தத்தம் பாளையத்தைச் செம்மைப்படுத்தி வருவாயைப் பெருக்க விரும்பினர்; அத்துடன் ஒவ்வொருவரும் தத்தம் பாளையத்தை முதல்தரமானதாக்க விரும்பினர்; இக்காரணங்களால் தம் பாளையத்தில் இருந்த கரம்பான நிலங்களைப் பயிரிடுவதற்கு ஏற்ற விளை நிலங்களாக்கினர்; காடுகளை அழித்து விலங்குகளை ஒழித்தனர்; கள்வர் பயத்தைப் போக்கினர்; காடுகள் இருந்த இடங்களை வயல்களாகவும் தோட்டங்களாகவும் மாற்றினர்; கள்வரைப் பிடித்து நன்மதிகூறி ஊர்க்காவலராக அமர்த்தினர்; ஏரிகளிலிருந்தும் ஆறுகளிலிருந்தும் கால்வாய்

களை வெட்டி நீர்ப்பாசன வசதியைப் பெருக்கினர்; மக்கள் நடந்து செல்வதற்குரிய ஒழுங்கான பாதைகளை அமைத்தனர்; பழுதுபட்டுக்கிடந்த பழைய கோவில்களைப் புதுக்கினர்; கோவில் இல்லாத சிற்றூரில் கோவிலைக் கட்டினர்; குடி மக்கள் குறைகளைக் கேட்டு அவ்வப் போது நீக்கினர்; வழக்குகளை விசாரித்து நியாயம் வழங்கினர்; நல்ல உடற்கட்டுடைய காளைகளைப் படை வீரராக சேர்த்துப் போர்ப் பயிற்சி அளித்தனர்; மதுரை அரசர்க்குச் சொந்தமான ஊர்களைக் காவல்புரிந்து அவற்றின் வருமானத்தில் தமக்கென்று விதித்த ஒரு பகுதியைக் கைக்கொண்டனர்.

### தலையாரி

பாளையத்தைச் சேர்ந்த ஒவ்வொரு கிராமத்திலும் **தலையாரி** ஒருவன் இருந்தான். அவன் அக்கிராமக் காவலன்; ஊரையும் ஊர்ப்பாதைகளையும் அவன் பாதுகாத்து வந்தான். ஊரில் நடக்கும் திருட்டைக் கண்டுபிடித்தல் அவன் கடமையாகும். அவன் திருட்டைக் கண்டு பிடியாவிடில் திருட்டுப்போன உடைமையைக் கட்டித்தரவேண்டும். இந்தப் பொறுப்புள்ள பதவியைத் தாங்கும் தலையாரி யாவன்? அவனே, தன் ஊரில் சிறந்த வீரன்.

### நாட்டில் அமைதி

தளவாய் அரியநாதரும் விசுவநாதரும் அமைத்த பாளைய வகுப்புத் திட்டத்தினால் பல நன்மைகள் உண்டாயின. தங்களுக்கு ஆட்சி உரிமை போய்விட்டதே என்று கவலைகொண்டு மதுரை மன்னருடன் ஒத்துழையா இயக்கத்திற்குத் திட்டம் வகுத்துக் கொண்டிருந்த பெருமக்கள் ஆட்சி உரிமை பெற்று மன ஆறுதல் அடைந்தனர்; தம் பாளையத்தைப் பல வழிகளிலும் மேனிலைக்குக் கொண்டுவந்து மதுரை மன்னர் பாராட்டுதலையும் குடிமக்களிடம் செல்வாக்கையும் பெற வேண்டும் என்னும் விருப்பத்தினால் பாளையச் சீர்திருத்தத்தில் பேரூக்கமும் பேருழைப்பும் கொண்டனர். நிலங்களைத் திருத்தி அமைப்பதிலும் காடுகளை அழிப்பதிலும்

புதிய கட்டடங்களைக் கட்டுவதிலும், கால்வாய்களை வெட்டுவதிலும் குடிகள் பலர் வேலை பெற்றனர். பாளையத்தில் இருந்த ஒவ்வொருவரும் முழுமனத்துடன் வேலை செய்யத் தொடங்கினர். உழவர் வேளாண்மையைக் கவனித்தனர்; சிலர் கைத்தொழில்களில் கவனம் செலுத்தினர்; சிலர் பழையபடி வாணிகத்தை வளம்பெற வளர்க்கத் தொடங்கினர்.

இங்ஙனம் பாளையத் தலைவர் முதல் குடி மகன் ஈறாக ஒவ்வொரு பாளையத்தாரும் உவப்புடன் வேலைசெய்து வந்தமையால், நாட்டில் உழைப்பும் ஊக்கமும் மிகுந்தன; வேளாண்மையும் வாணிகமும் கைத்தொழிலும் வளர்ச்சி பெற்றன. நாட்டில் அமைதி ஏற்பட்டது. குடிகள் கள்வர் - படையெடுப்பாளர் முதலியோரைப் பற்றிய அச்சமின்றி மன அமைதியுடன் வாழலாயினர்; பாளையக்காரரும் முன்னிருந்த சிற்றரசர் பகைமை இன்றி ஒருவரோடு ஒருவர் சகோதர அன்பு பாராட்டி மனமொத்து வாழ்ந்து வந்தனர்; தங்களுக்கு ஆட்சி உரிமை வழங்கிய மதுரை மன்னரையும் அரியநாதரையும் மனமார வாழ்த்தினர்.

## ‘சீமை’ வகுப்பு

விசுவநாதர் தமது நாட்டைப் பல சீமைகளாக (மாகாணங்களாக)ப் பிரித்தார்; ஒவ்வொரு சீமைக்கும் தம் நம்பிக்கைக்கு உரிய ஒருவரைத் தலைவராக நியமித்தார். அத்தலைவர் தம் ஆட்சிக்கு உட்பட்ட சீமையில் இருந்த பாளையப் பட்டுகளை மேற்பார்த்து வந்தார். பாளையக்காரர், மன்னர்க்கு மாறாக எதனையும் செய்யமுடியாத நிலையில் சீமைத் தலைவர் ஆட்சி இருந்துவந்தது. சீமைத் தலைவரிடம் வலிய படை ஒன்று இருந்தது. இங்ஙனம் பிரிக்கப்பட்ட சீமைகளுள் - சத்தியமங்கலச் சீமை, கோயமுத்தூர்ச் சீமை, திண்டுக்கல் சீமை, திருச்சிராப்பள்ளிச் சீமை, மதுரைச் சீமை, ஸ்ரீவில்லிபுத்தூர்ச் சீமை, திருநெல்வேலிச் சீமை என்பன குறிப்பிடத் தக்கன.

இந்தச் சீமை வகுப்புத் திட்டத்தினாலும் பாளைய வகுப்புத் திட்டத்தினாலும் நாயக்கர் அரசு தமிழகத்தில் நன்கு வேரூன்றியது. நாட்டில் அமைதியும் இன்பமும் நிலைபெற்றன.

---

# 12. அரசியல்

**அரசியல் இயந்திரம்**

நாயக்கர் அரசியலில் (1) நடு அரசாங்கம், (2) மாகாண அரசாங்கம், (3) நாட்டு அரசாங்கம் என மூன்று பகுதிகள் இருந்தன. இம்மூன்றுக்கும் தனித் தலைவராக இருந்த வர் அரசரே ஆவர். அவருக்கு உதவியாக அமைச்சர் மூவர் இருந்து மதுரை அரசாங்கத்தைக் கவனித்து வந்தனர்.

**நடு அரசாங்கம்**

அரசரது ஆணைபெற்ற **தளவாய்** அரசருக்கு அடுத்த **முதல்வராக** இருந்தார்; அவர் அரசாங்கத்திற்கும் படை கட்கும் தலைவராக இருந்தார்; முதல் அமைச்சர், சேனைத் தலைவர் என்ற இரண்டு பதவிகளையும் தளவாயே கவ னித்துவந்தார். விசுவநாத நாயக்கர் காலத்துத் தளவாய் யாவர்? நமது அரியநாத முதலியாரே ஆவர். குழப்ப மான ஒரு நாட்டை அமைதிக்குக் கொண்டுவந்து ஆட்சி புரியப் படைத்தலைமையும் அரசியல் அறிவும் உடைய ஒருவரே தேவைப்படுவர். இந்த முறையை இன்றும் நம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற் காணலாம் இன்று இந்திய அரசப் பிரதிநிதியாக இருப்பவர் யாவர்? பல போர்களில் படைத் தலைமை வகித்துப் புகழ்பெற்ற **வேவல் பிரபு** அல் லவா? இந்த அரசியல் அறிவுள்ள ஏற்பாட்டைப் பதி னாறும் நூற்றாண்டிலேயே நம்மவர் பின்பற்றியது பாராட் டத் தக்கதன்றோ? தளவாயே அரசாங்கத்தை நடத்து பவர்; அமைச்சர்கட்கு மேற்பட்டவர்; எல்லாவகை உத்தியோகஸ்தர்களையும் கட்டிக் காப்பவர்; வேலை வாங்குபவர்.

தளவாய்க்கு அடுத்தவர் பொருள் அமைச்சர் இவர் பிரதானி என்ற பெயர் பெற்றவர். தளவாய் இல்லாத காலங்களில் இவரே தளவாயின் வேலைகளைக் கவனிப்பவர். அரசாங்க வருவாய் முழுவதும் இவரிடமே வந்து சேரும். இவருக்குக் கீழ் ஒரு நிலையம் வேலைசெய்தது. அந்நிலயத்தில் பலர் குமாஸ்தாக்களாக இருந்தனர். இவர் மாகாணக் கவர்னராக இருந்தும் வேலை பார்ப்பதுண்டு.

பிரதானிக்கு அடுத்தவர் இராயசம் என்ற உத்தியோகஸ்தர். இவரும் ஓர் அமைச்சரே ஆவர். அரசியலைக் கவனிப்பது இவர் வேலை. இவரை அரசர்க்கு அமைந்த அரசியல் செயலாளர் என்றும் கூறலாம். ஒவ்வோர் அரசியல் விஷயத்தையும் கவனிக்க வேண்டுவது இவர் கடமை. அதனால் இவர் அரசரிடம் நெருங்கிப் பழகவேண்டியவர் ஆவர்.

இந்த மூவருமே அரசர்க்கு அமைந்த அமைச்சர் ஆவர். இவர்கட்கு அடுத்தபடி அரசாங்கப் பெரிய கணக்கர் என ஒருவரும் ஸ்தானுபதி என ஒருவரும் இருந்தனர். முன்னவர் அரசாங்க வரவு - செலவுகளைக் கணக்குப்பார்க்கும் அரசியல் பிரிவிற்குத் தலைவர்; பின்னவர் அயல் நாட்டு விஷயங்களை அரசர் சார்பாகக் கவனித்துவந்த அதிகாரியாவர். இவர் ஒவ்வொருவருக்குக் கீழும் பலர் வேலை பார்த்துவந்தனர்.

### ஆட்சியின் போக்கு

பொதுவாக நாயக்கர் ஆட்சி பொதுமக்கள் நலத்தைப் பெருக்குவதிலேயே சென்றது. விசுவநாதர் பொதுமக்கள் மதிக்குமாறு நடந்துவந்தார்; பொதுமக்கள் விரும்பியவை யாவை? உழவு - வாணிகம் - கைத் தொழில் - சமயம் ஆகிய நான்கும் உயர்வடைய வேண்டும் என்பதே. விசுவநாதர் அரியநாதர் முதலிய தலைவர்களைக் கொண்டு இந்த நான்கையும் நன்கு கவனித்தார்; காடுகளை அழித்தும் கரம்பு நிலங்களைச் செம்மைப்படுத்தியும் பயிரிடத்தக்க நிலங்களை மிகுதிப்படுத்தினர்; ஆற்றிலிருந்து கால்வாய்களை வெட்டி நீர்ப்பாசன வசதிகளை உண்டாக்கினர்; கைத்

தொழில்களை வளர்த்தார்; போர்ச்சுகீசியர், சிங்களவர் முதலிய அயல் நாட்டாருடன் கடல் வாணிகம் செய்ய வசதி அளித்தார். உள்நாட்டு வாணிகம் பெருகப் பாதைகளை அமைத்தார்; கள்வர் பயத்தை ஒழித்தார்; சமயத்தை வளர்க்கப் பழைய கோவில்களைப் புதுக்கினார்: விழா, பூசை முதலியன நடைபெற ஏராளமாகத் தேவதானங்களை வழங்கினார். இந்த நால்வகை முறைகளினால் விசுவநாதர் குடிகளது உள்ளம் கவர்ந்த உத்தமராக விளங்கினார்.

## மாகாண ஆட்சி

நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதி பல மாகாணங்களாக (சீமைகளாக)ப் பிரிக்கப்பட்டன; ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஆணையாளர் (கவர்னர்) ஒருவர் நியமிக்கப்பட்டனர் என்பன முன் கூறப்பட்டன அல்லவா? அந்த ஆணையாளரே மாகாண ஆட்சித் தலைவர். அவரே அரசர்க்கும் பாளையக்காரர்க்கும் இடையில் இருந்து அரசாங்கத்தை வலுப்படுத்தியவர். ஆணையாளர் தங்கள் மாகாண ஆட்சியை நடு அரசாங்கத்திற்கு மாறுபடா வகையில் நடத்தக் கடமைப்பட்டவர்; பாளையக்காரரிடமிருந்து பகுதிப்பணத்தைப்பெற்று நடு அரசாங்கத்திற்கு அனுப்பக் கடமைப்பட்டவர். ஆணையாளர் அனைவரும் தளவாயின் ஆணைக்குக் கீழ்ப்பட்டவராவர். ஒவ்வோர் ஆணையாளரும் தம் மாகாணத்தில் இருந்த பாளையக்காரர் வேலைகளைக் கண்காணித்து வந்தனர்; அரசர்க்கு உரிமையான ஊர்களையும் மேற்பார்த்து வந்தனர்.

## நாட்டு ஆட்சி

பல கிராமங்களின் தொகுப்பு **நாடு** எனப்பட்டது. பல நாடுகள் சேர்ந்தது ஒரு மாகாணம் அல்லது சீமை. ஒவ்வொரு கிராமத்திலும் கிராம ஆட்சி நடைபெற்றது. அதற்கு மேற்பட்டது நாட்டு ஆட்சி. ஒவ்வொரு கிராமத்திலும் மணியக்காரர் தலைவராக இருந்தார். அவரே கிராம ஆட்சியை நடத்தியவர். கிராமக் கணக்கர் ஒருவர். மணியக்காரர் கிராம வரி வசூல் சம்பந்தமான வேலை

களைக் கவனிப்பவர். கிராம வழக்குகளை விசாரித்து ஒழுங்கு செய்பவர் **அம்பலக்காரர்** என்பவர். 'அம்பலம்' என்பது 'சபை' எனப் பொருள்படும். எனவே (ஊர்ச்) சபைத் தலைவர் - அம்பலகாரர் எனப்பட்டார். மணியக் காரரும் அம்பலகாரரும் கிராம மக்களால் மதிக்கப்பட்டு வந்த பெருமக்களாவர்.

**நீதிப் பிரிவு**

கிராமத்தில் அம்பலகாரரும் மணியக்காரரும் நியா யாதிபதிகளாக இருந்தனர்; நாட்டு ஆட்சியில் நாட்டாண் மைக்காரனும் அவன் சபையினரும் நீதிபதிகளாக இருந் தனர்; மாகாண ஆட்சியில் ஆணையாளரால் நியமனம் பெற்ற அறிஞர் இருந்து நீதி செலுத்திவந்தனர். இந்த நியாய இலாகாவிற்குப் **பிரதானியே** பெரிய தலைவராக இருந் தார். பெரிய வழக்குகள் பிரதானியின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டன. அவரது தீர்ப்பே முடி வானது.

**அரசாங்க வருவாய்**

(1) நிலவரியே அரசாங்கத்தின் சிறப்பு வருமான மாகும். அரசர்க்குச் சொந்தமான விளை நிலங்கள் நாடு முழுவதும் பரவியிருந்தன. அவை நல்ல விளைச்சலை உடையவை. அவற்றைப் பயிர்செய்த மக்கள் வருவாயில் பாதியை அரசர்க்குக் கொடுக்கவேண்டும் என்பது விதி. வேறு தனிப்பட்டவர் நிலங்களிலிருந்தும் வரி வசூல் செய்யப்பட்டது.

(2) அடுத்த வருமானம் பாளையக்காரர் ஆண்டு தோறும் அரசர்க்குச் செலுத்தும் கப்பம் ஆகும். பாளை யக்காரர் முன் சொன்னவாறு பேருழைப்பெடுத்துப் பாளையங்களை மேனிலைக்குக் கொண்டுவந்தனர் ஆதலின், பாளைய வருமானம் மிகுதிப்பட்டது. பாளையக்காரர் தமது மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை அரசர்க்குச் செலுத்தி வந்தனர்.

(3) முத்தெடுத்தல், மீன் பிடித்தல், சங்கு எடுத்தல் முதலிய கடற்கரைத் தொழில்களிலிருந்து கிடைத்த வருமானம் அரசாங்க லருவாயின் ஒரு பகுதியாகும். பாண்டிய நாட்டுக் கடற்கரையின் பெரும் பகுதி ஐரோப்பியர் கையில் இருந்ததால், கடற்கரைத் தொழில்களிலிருந்து மதுரை அரசாங்கத்திற்கு வந்த வருமானம் குறைவே ஆகும்.

(4) உழவு வரி, தறி வரி, வண்ணான் வரி முதலிய தொழில் வரிகள் பல இருந்தன. இவற்றின் பெயரால் மிகுந்த பணம் அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் அனுப்பப்பட்டு வந்தது.

இங்ஙனம் பல துறைகளிலும் வசூலிக்கப்பட்ட பணம் கிராமத்திலிருந்து மாகாண ஆணையாளர்க்கு அனுப்பப்பட்டது. அவர் அதனை நடு அரசாங்கத்திற்கு அனுப்பி வந்தார். எல்லா வகை வரவுகளையும் பிரதானி கணக்கிற் பதிந்து கொண்டு சேமித்து வைத்தனர்.

**அரசாங்கச் செலவு**

இங்ஙனம் வந்த அரசாங்க வருவாயின் ஒரு பகுதி அரசாங்கத்தைச் சேர்ந்த அலுவலாளர், படைவீரர், நாட்டுக் காவலர், நீதி இலாகாவினர் முதலியவர்க்குச் சம்பளமாகத் தரப்பட்டது; ஒரு பகுதி கோவில்களைப் பழுது பார்க்கப் பயன்பட்டது; மற்றொரு பகுதி பொதுவான அறச் செயல்கட்குப் பயன்பட்டது; வேறொரு பகுதி நீர்ப்பாசன வசதிகட்காகச் செலவழிக்கப்பட்டது. இத்தகைய செலவுகளுடன் மதுரை அரசர் பேரரசர்க்குச் செலுத்தவேண்டிய பகுதிப் பணம், வருவாயில் மூன்றில் ஒரு பகுதியாகும். இச்செலவினங்களுக்குப் பிறகும் மதுரை மன்னரிடம் செல்வம் குவிந்திருந்தது என்றே சொல்லலாம். ஆயின், விசுவநாதர்க்குப் பிற்பட்ட நாயக்க மன்னர் காலங்களிற்றான் பெரும்பொருள் ஆண்டுதோறும் எஞ்சியிருந்தது. இங்ஙனம் எஞ்சிய தொகை பஞ்ச காலங்களில் குடிகட்குப் பயன்படுத்தவும் சமய சம்பந்தமாகச் செலவழிக்கவுமே சேர்த்து வைக்கப்பட்டது.

### பொது வாழ்க்கை

சிற்றரசர்களிடமும் கொள்ளைக் கூட்டத்தாரிடமும் படையெடுப்புக்காரர்களிடத்தும் பலவகைத் துன்பங்களை அனுபவித்த பாண்டிய நாட்டுக் குடிகள் நாயக்கர் ஆட்சியில் துன்பங்கள் நீங்கி இன்புற்றனர். என்று கூறலாம். விசுவநாதரே முதல் நாயக்க மன்னர் ஆதலின் அவரது ஆட்சிக் காலத்திற்றானே எல்லாக் குறைகளும் நீங்கிவிட்டன என்று திட்டமாகச் சொல்லமுடியாது. எனினும், நூற்றுக்கு எண்பது பங்கு வீதம் துன்பங்கள் ஒழிந்தன என்று கூறலாம்.

காடுகளில் பல அழிக்கப்பட்டன; அந்த இடங்கள் கிராமங்களாகவும், வயல்களாகவும், தோட்டங்களாகவும் மாற்றப்பட்டன; குடிகள் பல வேலைகளில் ஈடுபட்டு உழைத்தனர்; வேலையின்றிப் பட்டினியால் வாடியவர் இல்லை. கிணறு வெட்டுதல், குளம் வெட்டுதல், ஏரி வெட்டுதல், வாய்க்கால்களை வெட்டுதல், கோவில் கட்டுதல், முதலிய பல வேலைகளில் ஈடுபட்டுப் பொருள் சம்பாதித்தனர்; வறுமையை ஓட்டினர்; இன்ப வாழ்வு வாழலாயினர்.

கிராமக் கைத்தொழில்கள் நன்றாக வளர்ச்சி பெற்றன. உள்நாட்டு வாணிகம் சிறப்பாக நடைபெற்றது. மதுரையும் கோயமுத்தூரும் மெல்லிய துணிவகைகட்குப் பெயர் பெற்றிருந்தன. மலைபடுபொருள்கள் பிற நாடுகட்கு அனுப்பப்பட்டன. குடிமக்கள் உழவு - கைத்தொழில் - வாணிகம் இவற்றில் கவனத்தைச் செலுத்திப் பொருளீட்டி மன அமைதியுடன் வாழலாயினர்.

### சமய நிலை

விசுவநாதர் சமயத்திற் பொது நோக்கம் கொண்டவர். அவர் சிறந்த வைணவர். ஆயினும் சைவம், சமணம், இஸ்லாம், கிறித்தவம் முதலிய பிற சமயங்களைப் பொது நோக்குடன் கவனித்துவந்தார். முஸ்லிம்கள் அவர் குடிமக்களாக மதுரையில் வாழ்ந்தனர். அவருக்கு முன்னர் மதுரையில் முஸ்லிம்களால் பல சைவ வைணவக் கோவில்

கள் தரைமட்டம் ஆக்கப்பட்டன. ஆயினும், விசுவநாதர் தம் காலத்து முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்தவில்லை; அவர்களுடைய பள்ளிவாசல்களுக்கு மதிப்பீந்தார்; கிறித்தவர்களைச் சமமாகவே நடத்தினர்; அவர் கோவில்கட்குத் தம்மாலான பொருள் உதவி செய்தார்; மதுரையில் கிறித்தவப் பிரசாரத்திற்கு இடம் தந்தார். வைணவரான விசுவநாதர் சிவனார்க்குரிய மீனாக்ஷி-சுந்தரேசர் திருக்கோவிலைப் பழுதுபார்க்கப் பெரும் பொருள் செலவழித்தார்; திரிச்சிராப்பள்ளி-தாயுமானவர் கோவிலைச் சிறப்பிக்கப் பல்லாயிரம் பொன்னைச் செலவழித்தார். இந்த விவரங்களைக் காண, அப்பெரியாரது சமயப் பொது நோக்கம் நன்கு விளங்குமன்றோ? இந்து சமயத்தைக் காப்பதே தங்கள் தலைசிறந்த நோக்கம் என்பதை விஜயநகரப் பேரரசர் கொண்டிருந்தவாறே, அவரது ஆட்சிக்கு உட்பட்ட மதுரை நாயக்க மன்னரும் கொண்டிருந்தமை பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

## கல்வி

நாயக்கர் ஆட்சியில் வடமொழி, தமிழ், தெலுங்கப் பள்ளிக்கூடங்கள் நாடெங்கும் ஏற்பட்டன. வடமொழிக்கு விசேட மதிப்புத் தரப்பட்டது. மதுரையில் மட்டும் ஆயிரக்கணக்கான பிராமண இளைஞர் வடமொழி கற்றனர். தமிழ்ப் பள்ளிகளும் தெலுங்கப் பள்ளிகளும் ஆயிரக்கணக்கான குடிமக்கட்குக் கல்வி வசதி அளித்தன. கோவிலை அடுத்த மடங்களில் சமயக் கல்வி அளிக்கப்பட்டது. நாயக்க மன்னர் சமயக் கல்வியைப் பெரிதும் ஆதரித்தனர்.

## நிலைத்த புகழ்

விசுவநாதர் சிறந்த கல்வியறிவுடையவர்; ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதியவர்; தமது ஆண்மையாலும் அடக்கத்தாலும் பிற நல்லியல்புகளாலும் கிருஷ்ணதேவ ராயர் அன்பிற்கு உரியவரானர்; இராஜத்துரோகம் செய்த தந்தையாரைச் சிறைப்படுத்திய உத்தம மைந்தர்; குடிகளது நன்மை ஒன்றையே தாம்

பெறும் இன்பமாகக் கருதி உழைத்தவர்; தம் உயிர் நண்பரான அரியநாதர் உரைப்படி நடந்தவர்; தெய்வ பக்தியிற் சிறந்தவர். இத்துணை நற்பண்புகளை ஒருங்கே பெற்ற விசுவநாதர் நாட்டில் தம் புகழை நிலைபெறச் செய்து கி. பி. 1564-ல் காலமானர். ஆயினும், இன்றும் நாம் கண்டு தரிசிக்கத் தக்க நிலையில் அவரது அழகிய உருவச்சிலை மதுரைப் புது மண்டபத்தில் காட்சி அளிக்கின்றது.

ஆர். சே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

## BIBLIOGRAPHY

1. The History of the Nayak Kingdom of Madura
—Prof. V. Rangachari.

2. History of the Nayaks of Madura
—Prof. R. Sathyanatha Aiyar.

3. Vijayanagara Sexcentenary Commemoration Volume (1936).

4. A Forgotton Empire—Sewell

5. The Aravidu Dynasty of Vijayanagara
—Rev. H. Heras.

VISWANATHA NAYAKKAR

BY

SRI M. RAJAMANICKAM PILLAI, B. O. L., L. T., M. O. L.

PUBLISHERS

VENKATRAMA & CO., : MADRAS

PRINTED AT THE B. N. K. PRESS, MADRAS 1